தமிழிசைப் பேரகராதி

(பண் களஞ்சியம்)

நா.மம்மது

வெளியீடு

தமிழிசை ஆய்வு மையம்

தியாகராசர் கல்லூரி

மதுரை - 625009

தமிழிசைப் பேரகராதி
(பண் களஞ்சியம்)

நா.மம்மது

வெளியீடு
தமிழிசை ஆய்வு மையம்
தியாகராசர் கல்லூரி
மதுரை - 625009

நூல் குறிப்பு

நூற்பெயர்	:	தமிழிசைப் பேரகராதி (பண் களஞ்சியம்)
நூற்பொருள்	:	இசை ஆய்வு நூல்
ஆசிரியர்	:	நா.மம்மது
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	2016
வெளியீட்டாளர்	:	தமிழிசை ஆய்வு மையம், தியாகராசர் கல்லூரி மதுரை - 625009
உரிமை	:	ஆசிரியருக்கு
அச்சிட்டவர்	:	ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ், அசோக் நகர், சென்னை - 600 083.
அட்டைப்படம்	:	மணிகண்டன்
பக்கம்	:	200
அளவு	:	7" x 9.5" (கிரவுண்)
படிகள்	:	2000
நூல் விலை	:	ரூ.200
ஒலிக்குறுந்தகடு மூன்று பகுதிகள்	:	ரூ.300

Thamizhisaipperakarathi (Lexicon on Tamil Melodies) ● Author : N.Mammathu ● First Edition 2016 ● Published by : Tamizhisai Research Centre, Thiagarajar College, Madurai-625009. Tamilnadu, India ● +91-452-2640689, +91-9442984589 ● email :tamilinnisai@gmail.com ● nmammathu.blogspot.in

தமிழ்ப்பண்ணிசை,
தரணியெங்கும் தவழ்ந்துவரும்...

பழம்பெருமை வாய்ந்த தமிழ்ப்பண்களை காலங்காலமாக நம்முடைய முன்னோர்கள் படைத்தும், இசைத்தும் எங்கும் பரவச் செய்தார்கள்.'சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரி, கானல்வரி போன்ற வரிப் பாடல்கள் தனித்தன்மையுடையன எனச் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் எடுத்துரைக்கிறார்கள்.

மூவர் தேவாரமும், பன்னிரு ஆழ்வார்களின் பாசுரமும் பக்தி இலக்கிய காலத்தில் இசைத்தமிழாய் எங்கும் சிறப்புற்றிருந்தன.

சிற்றிலக்கிய காலங்களில் குறவஞ்சி, பள்ளு, கலம்பகம், அம்மானை போன்ற நாட்டுப்புற இசைவடிவங்களும், இதனைத் தொடர்ந்து அருணகிரிநாதரின் சந்தப்பாடல்களும், தாயுமானவரின் பராபரக்கண்ணியும், இராமலிங்க வள்ளலாரின் இசைப்பாடல்களும், காவடிச்சிந்து, கிளிக்கண்ணி போன்றவையும் எளிய மக்களைச் சென்றடைந்தன.

சான்றாக, இவ்வின்னிசைப்பாடல்கள் பொருள் வேண்டி பிச்சை எடுப்போரைக்கூட இசையோடு பாடத் தூண்டின.

தமிழ்ப்பண்களைத் தொகுத்து, ஒருங்கிணைத்ததில் ஆபிரகாம் பண்டிதருக்குத் தனி இடமுண்டு. முன்சீப் வேதநாயகம் பிள்ளையின் சர்வ சமய கீர்த்தனைகள், அருணாசலகவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை, கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திர கீர்த்தனை போன்ற கீர்த்தனை வடிவங்களும் தமிழ்ப்பண்ணிசையின் தொடர்ச்சியாய் அமைந்தன.

தமிழிசையைப் பாடிவளர்த்த மூவரும், மகாகவி பாரதியும், பாரதிதாசனும், சுத்தானந்த பாரதி போன்றோரும் தமிழிசையில் தடம்பதிக்க.. திரையுலகில் பாவநாசம் சிவனும்.. இலக்கிய உலகில் பெரியசாமித்தூரன் போன்றோரும்.. வானொலி, திரைப்படம் என அறிவியல் ஊடகங்களிலும் தமிழிசையைக் கொண்டு சேர்த்தார்கள்.

நம் சமகாலத்தில் வாழ்ந்த தமிழிசைப் பேரறிஞர் வீ.ப.கா.சுந்தரம் அவர்கள் பழந்தமிழ்ப்பண்ணிசை குறித்த பேராய்வினை மேற்கொண்டதோடு, திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் இசைநுணுக்கங்கள் குறித்த இசைக்கலைக் களஞ்சியம் தொகுக்கும் பணியிலேயும் ஈடுபட்டுத் தற்காலத் தமிழிசைக்குப் பெருமை சேர்த்தார்.

இத்தகைய மேன்மைமிகு அறிஞரான வீ.ப.கா.சுந்தரம் அவர்களோடு உடனிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட நம் தமிழிசை ஆய்வாளர் நா.மம்மதுவின் தமிழிசை ஆய்வுகள் குறித்து, மதுரை தியாகராசர் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் கு.ஞானசம்பந்தன் அவர்கள் 2006ஆம் ஆண்டு அமெரிக்காவில் எங்கள் இல்லத்திற்கு வந்திருந்தபோது என்னிடத்தில் எடுத்துக் கூறினார்.

அப்போதுதான், 'தமிழிசைப் பேரகராதி' ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு எழுந்தது. நா.மம்மது ஆய்வுப்பணியாய், இப்பணி தொடங்கப்பெற்று, 2010ஆம் ஆண்டு தமிழிசைப்பேரகராதி உருவாக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.

அகராதிப் பணியைத் தொடர்ந்து, தமிழிசைப் பண்களஞ்சியத்தைப் பழம்பெருமை மிகுந்த மதுரைத் தீந்தமிழ் தியாகராசர் கல்லூரியோடு இணைந்து உருவாக்கலாம் என நான் கூறினேன்.

தியாகராசர் கல்விக்குழுமங்களின் தலைவரும், ஆன்மீக நன்னெறியாளருமாகிய திரு.கருமுத்து.தி.கண்ணன் அவர்கள் இம்முயற்சிக்கு ஒப்புதல் தந்து, 'தமிழிசை ஆய்வு மையத்தை'ச் சிறப்புடன் செயல்படுத்த தியாகராசர் கல்லூரி வளாகத்திலேயே இடமும் தந்தருளினார்.

இம்முயற்சிக்குப் பெரிதும் துணைநின்றதோடு, இசைஞானி இளையராஜா அவர்களையும் அழைத்துவந்து, 'தமிழிசை ஆய்வு மையத்தை 2013ஆம் ஆண்டு தொடங்கி வைக்கச் செய்த

கல்லூரித் தலைவர் அவர்களின் திருமகனாரும், தியாகராசர் கல்லூரியின் திறன்மிகு செயலருமாகிய **திரு. ஹரி தியாகராசன்** அவர்களுக்கும் என்நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது இக்கல்லூரியின் தகைசால்பேராசிரியராகப் பணியாற்றும் **முனைவர் கு.ஞானசம்பந்தன்** அவர்கள் இத்தமிழிசை ஆய்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வருகிறார்கள். இவ்வாய்வு மையத்தின் செயல்பாடாகப் 'பழந்தமிழ்ப்பண்கள்' தொகுத்து வெளியிடும் அரிய பணியினை நா.மம்மது மேற்கொண்டார்கள். அவ்வகையில், அவர் 100க்கும் மேற்பட்ட பழந்தமிழ்ப்பண்களை ஆராய்ந்து தொகுக்கத் தொடங்கினார். இம்முயற்சியில் உருவான இத்தமிழிசைப் பண்களஞ்சியம், பழந்தமிழ்ப் பண்களை மீட்டெடுக்கும் ஓர் ஆவணம் எனலாம்.

ஈராயிரமாண்டுப் பழமையுடைய தமிழ்ப்பண்களைத் தேடியெடுத்துத் தொகுத்ததோடு, அவற்றின் தாய்ப்பண்கள், பண்களைப்பாடும் முறை, அத்தமிழிசைப்பண்கள் காலந்தோறும் பாடப்பட்ட நிலை, தற்காலத்தில் அவற்றின் பெயர், பாடப்படும் முறை போன்றவற்றையும், இத்தகைய பாடல்களை இயற்றியவர் களின் பெயர்களும், இப்பண்ணிசைக் களஞ்சியத்தில் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன என்றால், இம்முயற்சியில் ஈடுபட்ட தமிழிசை ஆய்வாளர் நா.மம்மதுவின் அரும்பணி பாராட்டத்தக்கவொன்று.

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதர் அவர்கள் **இயற்றமிழ்** நூல்களைச் சுவடிகளிலிருந்து தேடியெடுத்துப் பதிப்பித்தார். நம் நா.மம்மது தமிழிசைப் பண்களை ஆய்ந்தாய்ந்து தக்க மேற்கோள் களோடு **இசைத்தமிழ்** நூலாகப் பதிப்பித்துள்ளார்.

சில சான்றுகள்..

பூபாளம் எனும் பண் குறித்துக் கூறும்போது, இதன் **தாய்ப்பண் விளரிப்பாலை (தோடி)** என்றும், இது **காலைநேரப்பண்** என்றும், கேரளக் கதகளியில் **'புறநீர்'** எனும் பெயரிலும் இசைக்கப்படுவதாகவும் எடுத்துக்காட்டும் இந்நூலாசிரியர், இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் எனச் **சுப்ரமணியபாரதி**

பொழுது புலர்ந்தது (ஆதி தாளம்) எனும் பாடலையும் **பாபநாசம் சிவன் - தினமிதே** போன்ற பாடல்களையும் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்வகையில், 100 தமிழ்ப்பண்கள் குறித்து ஓர் அரும்பதிவாக இந்நூலினை உருவாக்கியுள்ள நா.மம்மதுவின் இப்பணியைத் தமிழிசை உலகம் ஒருபோதும் மறவாது.

நூல்வடிவாக, இவ்வரியபழந்தமிழ்ப்பண்கள் வெளியிடப்படும் பொழுது, இவற்றை ஒலிவடிவாகவும் வெளியிடும் முயற்சியாய், 100 பண்களை ஒலிக்குறுந்தகடாகவும் நா.மம்மது உருவாக்கி உள்ளார். நம் ஒருங்கிணைப்பாளர் கு.ஞானசம்பந்தன் அவர்கள், இதில் உதவிய திரைப்பட இயக்குனர் திரு.சுகா அவர்கள், லால்குடி ஜெ.கிருஷ்ணன் ஆகியோருக்கும் நன்றி.

தியாகராசர் கல்லூரியின் **தமிழிசை ஆய்வு மையத்தின் வெளியீடாகத்** தமிழிசைப்பண்களஞ்சியம் படித்துணரும்வண்ணம் நூல் வடிவிலும், செவிநுகர் கனிகளாகக் கேட்டும் இன்புறும் வண்ணம் ஒலிக்குறுந்தகடு வடிவிலும் வெளிவருகிறது. உலகெங்கும் பரவியுள்ள ஊடகங்களில் இவ்வரிய முயற்சி விரைவில் பதிவேற்றமும் செய்யப்படும்.

தமிழ்ப்பண்ணிசை, தரணியெங்கும் தவழ்ந்துவரும்...

வாழ்த்துகளுடன்,

பால்.சி.பாண்டியன்
நிதி நல்கையாளர்
தமிழிசை ஆய்வு மையம்

பண்ணிசைக் களஞ்சியத்திற்குப் பாராட்டு!

'ஓசை ஒலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே..'

என, அப்பர்சுவாமிகள் தம் திருத்தாண்டகத்திலே எம்பெருமானாகிய சிவபிரானைப் போற்றிப்பாடுகிறார்.

இவ்வுலகைப் படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடும் இறைவன், ஒலிவடிவிலும் பல்வகை ஓசைகளிலும் நிறைந்துள்ளான் என்பது யாவரும் அறிந்த ஒன்றே.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் எனப் பேறுபெற்று விளங்குகிறது. இசைத்தமிழ் கற்றாரையன்றி, கல்லாதவரையும் ஈர்க்கும் தன்மை கொண்டது.

'காட்டு விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் இசையதனைப் பாம்பறியும்..'

என மகாகவி பாரதி, தன் 'குயில் பாட்டில்' கூறிச் செல்கிறார். இலண்டன் மாநகரத்தின் தேம்ஸ் நதிக்கரையில் அமைந்துள்ள ஆக்ஸ்ஃபோர்டு நகரம், வையைநதிக்கரையில் அமைந்துள்ள மதுரையைப்போல் பெருமையுடையது என்பர், வரலாற்று ஆய்வாளர்.

நம் தீந்தமிழ் தியாகராசர் கல்லூரியும், தேம்ஸ் நதிக்கரையின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் போல, ஒருபுறம் வையை நதிக்கரையும், மறுபுறம் வண்டியூர் தெப்பக்குளமுமாக, ஆற்றங்கரை, குளத்தங்கரைக்கு நடுவே அமைந்திருக்கிறது.

'கல்வி கரையில' எனும் நாலடியாரின் கூற்றும் நினைக்கத்தக்கது. பார்புகழும் இத் தியாகராசர் கலைக்கல்லூரியை ஆலையரசர், கலைத்தந்தை கருமுத்து தியாகராச செட்டியார் அவர்கள், எளியோரும் கற்கும்வண்ணம் 07.07.1949இல் நிறுவினார்.

அறிவும் அன்புமே சிவம் எனும் உயர்கொள்கையோடு தொடங்கப்பட்ட இக்கல்வி நிறுவனத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், சட்டப்பேரவைத் தலைவர்கள், நாடாளும் அமைச்சர்கள், உலகம் போற்றும் அறிவியலாளர்கள் என அன்று தொடங்கி இன்றுவரை உருவாகியிருக்கிறார்கள். உருவாவார்கள்.

பெருமைமிகு எம் கல்லூரி,

'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே'

என்று மணிவாசகப்பெருமான், திருவாசகத்தில் (திருவெம்பாவை) சொல்லியவண்ணம் நம் கல்லூரி பழமையின் பெருமையோடும், புதுமையின் பொலிவோடும் திகழ்ந்து வருகிறது.

அவ்வகையில், 2013ஆம் ஆண்டு சூலை மாதத்தில் முத்தமிழின் இடைத்தமிழாம் இசைத்தமிழின் அருமையைப் போற்ற, 'பழந்தமிழ்ப் பண்ணிசை'யைத் தொகுத்து ஆவணப்படுத்தும் வண்ணமாகத் 'தமிழிசை ஆய்வு மையம்' ஒன்றை நம் கல்லூரி வளாகத்தில் இசைஞானி இளையராஜா அவர்களை வைத்துத் தொடங்கினோம்.

அமெரிக்கத் தொழிலதிபர், தமிழார்வலர் திரு.பால்.சி.பாண்டியன் அவர்களோடு, நம் கல்லூரி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் (MOU) செய்துகொண்டது. அதன்படி, நம் கல்லூரித்தலைவர் கருமுத்து. தி.கண்ணன் அவர்களின் ஒப்புதலோடு இம்மையத்தைத் தொடங்கினோம்.

நம் கல்லூரியின் தகைசால் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் அவர்களை ஒருங்கிணைப்பாளராகக்கொண்டு தொடங்கப்பட்ட இம்மையத்தில் நம் மாணவ - மாணவியர் இசைகற்கவும், ஆய்வு மாணவர் ஒருவர், 'தமிழிசை'யில் ஆய்வு செய்யவும் நிதி ஒதுக்கப்பட்டது.

அத்துடன், ஈராயிரமாண்டுப் பழமையுடைய நம் தமிழிலக்கியத்தில் காணப்படுகின்ற தமிழ்ப்பண்களைத் தொகுத்து ஆவணப்படுத்தும் முகமாகத் 'தமிழிசை அறிஞர்' நா.மம்மது இம்மையத்தில் தன் பணியைத் தொடங்கினார்.

கணினி கற்கின்ற, கணினியே உலகமாகக் கொண்டு விளங்குகின்ற மேற்கத்திய இசையில் மூழ்கித் திளைக்கின்ற நம் இளைய சமுதாயத்தை, வரும் தலைமுறையினரை ஈர்க்கும் வண்ணம், 'தமிழிசைப் பண்களஞ்சியத்தை' உருவாக்கத் தொடங்கினோம்.

இதன் முதல் முயற்சியாக நா.மம்மது நூறு பழந்தமிழ்ப் பண்களை, நுண்மான் நுழைபுலத்தோடு தேர்வுசெய்து இன்றைய இராகங்களின் தாய்ப்பண்களை ஆராய்ந்து தேடியெடுத்து, அப்பண்களின் பெயர்களைப் பதிவு செய்து, அப்பண்கள் தற்காலத்தில் எவ்வகை இராகங்களாகப் பெயர்பெற்று விளங்குகின்றன என்பதையும் நமக்கு அறிமுகம் செய்கிறார்.

மேலும், அவ்வகைப் பண்களின் ஏறு நிரல் (ஆரோகணம்), இறங்கு நிரல் (அவரோகணம்) என வகைப்படுத்தி, அவ்வப்பண்ணுக்குரிய சுரங்களான வன்துத்தம், மென்துத்தம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு, இவ்வகைப்பண்ணுக்குரிய பாடல்கள், தற்காலத்தில் எத்தகைய பெயரோடு பாடப்படுகின்றன என்று பாடலையும், பாடியோரையும் அறிமுகம் செய்கிற பாங்கு, இத் தமிழிசைப் பண்களஞ்சியத்தின் அருமைக்கு ஒருசோறு பதம்.

சான்றாக,

விளரிப்பாலை (தோடி), செம்பாலை (அரிகாம்போதி), கோடிப்பாலை (கரகரப்பிரியை), படுமலைப்பாலை (நடபயிரவி) என்று வகைப்படுத்துகிறார்.

இப்பண்களில் அமைந்த இசைப்பாடல்களாக

'எந்த நாளும்' – வேதநாயகம் பிள்ளை,

'ஐயன் திருவடி' – பெரியசாமித்தூரன்

எனக் குறிப்பிட்டு, இந்நூலினைப் படிப்போர், படிக்கும்போதே பாடும் வகையில் எளிமைப்படுத்தித்தந்திருப்பது, ஆசிரியரின் அரிய முயற்சி.

இதன் அடுத்தபடியாக, இந்நூலில் வரிவடிவில் சொல்லப்பட்ட ஒரு சில பண்களை, இசை வித்தகர் லால்குடி ஜெ.கிருஷ்ணன் அவர்களின் நன்முயற்சியால், தற்காலத்தில் இசைத்துறையில் புகழ்பெற்று விளங்கும் பாம்பே ஜெயஸ்ரீ, ஓ.எஸ்.தியாகராஜன், சத்குருநாத ஓதுவார் போன்ற பெருமக்களைப் பாடச் செய்து திரு.கிருஷ்ணன் அவர்கள் ஒலித்தகடாகத் தயாரிக்க உதவி புரிந்துள்ளார். இதனையும், இத் தமிழிசைப் பண்களஞ்சியத்தோடு வெளியிட இருக்கிறோம்.

நம் தமிழிலக்கியத்தில் இசை வடிவில் சொல்லப்பட்ட கலிப்பாடல், பரிபாடல், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தங்கள் போன்றவற்றில் உள்ள பழந்தமிழ்ப் பண்கள் காலந்தோறும் தமிழ் மக்களால் பாடப்பட்டும், இசைக்கப்பட்டும் வந்த பெருமையை மட்டும் கூறிக்கொண்டிருக்கிறோம்.

அப்பெருமையின் அடுத்த வளர்ச்சி நிலையாக இத்தகைய தமிழிசைப் பண்கள் தற்காலத்தில் கர்நாடக இசைமேடைகளிலும், திரையிசைப் பாடல்களிலும் எங்ஙனம் வேறு பெயர்களில் உலா வருகின்றன என்பதை உலகோரை அறியச் செய்யும் முயற்சியாக இத்தமிழிசைப் பண்களஞ்சியம் உருவாக்கம் பெற்றிருக்கிறது.

உலகமொழிகளில் மூத்த மொழி, தமிழ் மொழி எனும் கூற்றிற்கேற்ப உலகெங்கும் பரந்துவிளங்கும் இசையிலும் நம் பழந்தமிழ்ப் பண்ணிசையின் வேர்கள் மறைந்தும், பரந்தும் காணப்படுகின்றன என்பதை இசை ஆய்வாளர் நா.மம்மது இந்நூலில் கோடிட்டுக்காட்டியிருப்பது, நமக்குப் பெருமையைத் தருகிறது.

மேலும் நூல் வடிவில் எழுதிய நா.மம்மது, இசை வடிவிலும் 100 பண்களை இசைக்குறுந்தகடாக உருவாக்கியுள்ளார். வாய்ப்பாட்டாகவும், கருவி இசையாகவும் நா.மம்மதுவின் ஒலிக் குறுந்தகடு உருவாக்கம் பெற்றுள்ளது. இது தமிழ்ச்சமூகத்திற்கு மிக்க பயன்தருவது. எதிர்வரும் தலைமுறையினர் இந்த ஓர் ஒலிக்குறுந்தகட்டின் மூலமே 100 பண்களையும் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இது பாராட்டிற்குரிய ஒரு சீரிய முயற்சி, முதல் முயற்சி, பாராட்டுக்கள்!

பண்ணிசைப் பயணம் தொடரட்டும்.

பழந்தமிழ்ப் பெருமை உலகெங்கும் பரவட்டும்.

வாழ்த்துக்களுடன்...

க. ஹரி தியாகராஜன்,
செயலர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

நூல் அணிந்துரை

தமிழிசை அறிஞர் நா.மம்மது எழுதியுள்ள 'தமிழிசைப் பேரகராதி - பண் களஞ்சியம்' என்ற இந்நூல் தமிழிசைஉலகிற்கு ஒரு புதிய வரவு. இதில் 100 பண்கள் பற்றிய விவரங்கள் தூயதமிழில் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. அசாவேரி முதற்கொண்டு விளரிப்பாலை முடிய இப்பண்கள் அகரவரிசையில் மிக நேர்த்தியாக தரப்பட்டுள்ளன. 'தாய்ப்பண்', வன்துத்தம், மென்துத்தம், ஏறுநிரல், இறங்குநிரல் முதலான தமிழிசைக் கலைச்சொற்கள் இந்நூல் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பண்ணிற்கும் உரிய தாய்ப்பண், ஏறுநிரல், இறங்கு நிரல், உரிமையான சுரம், அயல் சுரம், பண்ணிற்கு உரிய தனித்த சாயல், வெளிப்படுத்தும் சுவை, பண்ணில் அமைந்த தமிழிசை வடிவங்களேயன்றி, செயதேவர், முத்துச்சாமி தீட்சிதர், தியாகராச சுவாமிகள் ஆகியோர் இயற்றிய பிறமொழிப் பாடல்களும் கொடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஒரு சில பண்களுக்குரிய இந்துத்தானி இசைப்பெயரும் கொடுக்கப்பட்டுள்ளன. சான்றாக அம்சாநந்தி, இந்துத்தானியில் 'சொகினி' என்று அழைக்கப்படுகிறது. என்ற குறிப்பு (பக்கம் 4). சில பண்களை அதன் வல்லுழை வடிவம் கொண்டும், மெல்லுழை வடிவம் கொண்டும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளமை பண்களின் வடிவத்தை எளிமையாக இனம் காணவும், நினைவில் வைத்துக்கொள்ளவும் பயனுறும் குறிப்புக்களாக அமைந்துள்ளன. சான்றாக, அமிர்தவர்சனி பண்ணினை, "நாட்டைப் பண்ணின் வல்லுழை வடிவமே இப்பண்" என்று குறிப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளது (பக்கம் 5).

ஏழ் பெரும் பாலைகளின் இலக்கணங்கள் மிக விரிவாகத் தரப்பட்டுள்ளன. இடமுறைத் திரிபு மற்றும் வலமுறைத் திரிபின்படி இப்பாலைகள் எவ்வாறு அமைந்துள்ளன போன்ற குறிப்புகள் பாலை, பண் பற்றி தெளிவாக அறிந்துகொள்ளக் கூடியனவாக உள்ளன. பாலைகள் பற்றிய இலக்கியச் சான்றுகளும் உரியவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறே ஐந்திசைப்பண்கள் பண் பெயர்ப்பு முறையில் உருவாகும் விதம் அட்டவணைப்படுத்திக் காட்டியிருப்பது மிகவும் பொருத்தமாக உள்ளது.

சில பண்கள் ஏறுநிரலில் ஒரு பண்ணையும், இறங்கு நிரலில் மற்றொரு பண்ணையும் கொண்டுள்ளன என்ற குறிப்புடன் தந்திருப்பது பண்களை எளிமையாகத் தெரிந்துகொள்வதற்கு உதவுவதாக அமைந்துள்ளது. சான்றாக, எதுகுலகாம்போதி ஏறு நிரலில் பாலைப் பாணி (சுத்தசாவேரி), இறங்கு நிரலில் செம்பாலை (அரிகாம்போதி) என்ற குறிப்பு (பக்கம் 19).

கதன குதூகலம், கம்சநாதம், கமல மனோகரி, கர்ணரஞ்சனி, கன்னடம், காப்பி, பிந்துமாலினி, பேகாக், பவப்பிரியை, பகுதாரி, நீலமணி, நாம நாராயணி, துசாவந்தி, தேசி(தேஷ்), திலங்கு, சிந்துபயிரவி போன்ற பண்களும் தமிழிசைப் பண்களே என ஆணித்தரமாக இந்நூலில் விளக்கம் பெற்றுள்ளன.

பின் இணைப்பாக, சுருக்கக்குறியீட்டு விளக்கம், பண்பெயர்ப்பு முறையில் ஐந்திசைப்பண்கள், பண்பெயர்ப்பு முறையில் ஏழ் பெரும் பாலைகள், 32 தமிழிசைப்பாலைகள் (மெல்லுழை மற்றும் வல்லுழை) ஆகிய விவரங்கள் மிகவும் பயனுள்ள விவரங்களாகும்.

மற்றும் ஓர் இனிய செய்தி. 100பண்களுக்கான நூல் எழுதிய நா.மம்மது, 100 பண்களையும் இசைக்கச்செய்து ஒலிவடிவில் இசைக்குறுந்தகடாகக் கொண்டுவந்துள்ளார். யாழ், குழல், கின்னரம், நாகசுரம் எனக் கருவி இசையோடு அரங்கிசைப்பாடல், நாட்டார் பாடல், நாட்டியப்பாடல், நாடகப்பாடல் என பல்வேறு இசை வடிவங் களையும் நா.மம்மது இக்குறுந்தகட்டில் பதிவுசெய்துள்ளார். பெரு நாட்டு இசையிலும் செவ்விந்தியர் இசையிலும் நமது மருதப்பாணியும் (சுத்ததன்யாசி), சீன நாட்டில் நமது முல்லைப்பாணியும் (மோகனம்) இசைக்கப்படுவது பற்றியும் பதிவுசெய்திருப்பது சிறப்புக்குரியது.

இந்நூல் தமிழிசை ஆய்வில் ஈடுபடுவோருக்கும் இசை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் இசை ஆசிரியர்களுக்கும், பொது மக்களுக்கும் பயனுள்ள சிறந்த நூல் என்று போற்றி மகிழ்கிறேன்.

ஆசிரியர் இது போன்று தொடர்ந்து பல இசை ஆக்கங்களை இசை உலகிற்கு அளிக்க வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

முனைவர் இ.அங்கயற்கண்ணி

கலைப் புலத் தலைவர் மற்றும் இசைத்துறை பேராசிரியர்,

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பண்களஞ்சியம் - ஒலிவடிவில்... வரிவடிவில்...

"ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்..."
- சுந்தரர் தேவாரம்

உலகின்பாலுள்ள பொருட்கள் அத்துனையின்கண்ணும் மறைந்திருக்கும் எம்பெருமானை இசைவடிவாய்க் காணுகிற மரபு, நம் தமிழ் மரபு.

தமிழில் மூவாயிரமாண்டுப் பழமையான தொல்காப்பியமெனும் இலக்கண நூல், 'பண்ணத்தி', 'வண்ணம்' என இசையின் கூறுகளைச் சொல்லித் தொடங்க, பின்வந்த சங்க இலக்கிய காலம் பாணர் இலக்கியங்களைப் (சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை) பகிர்ந்துதர, சிலப்பதிகாரமும், நாயன்மார்களின் தேவாரமும், ஆழ்வார்களின் பாசுரங்களும் எனத் தமிழிலக்கியத்தின் இசைப்பயணம் தமிழ்ப்பண்களுக்குரிய காலமாக ஒளிரத் தொடங்கியது.

அருணகிரிநாதரின் சந்தப் பாடல்களும், தமிழிசை மும்மூர்த்திகளின் தமிழ்க் கீர்த்தனைகளும், தமிழிசைக்குப் பெருமைசேர்க்க, பின்னர் வந்த சாகித்ய கர்த்தாக்களும், மேடைநாடகப் பாடகர்களும், தற்கால திரையிசை வடிவமும் ஒரு நீண்ட நெடிய தமிழிசைப் பயணத்தின் தொடர்ச்சிகளே எனலாம்.

இத்தகைய பெருமைவாய்ந்த தமிழிசையின் இசைச்சொல் வளங்களைச் சொற்களஞ்சியமாக, 'தமிழிசைப் பேரகராதியாகத்' தொகுக்க, **அமெரிக்கவாழ் தொழிலதிபரும், நற்றமிழ் ஆர்வலருமாகிய திரு.பால்.சி.பாண்டியன்** அவர்களின் சீரிய பொருளுதவி நமக்குக் கிடைத்தது, தமிழிசை அறிஞர் நா.மம்மதுவின் அரும்பணியால், தமிழிசைப் பேரகராதி - சொற்களஞ்சியம் 2010ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகத், 'தமிழிசைப் பண்களஞ்சியம்' ஒன்றை உருவாக்கும் எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டது. இப்பண் களஞ்சியத்தை, நான் படித்த, பணியாற்றி ஓய்வுபெற்று, தற்போது தகைசால் பேராசிரியராகத் தமிழ்ப்பணி செய்துவரும் தீந்தமிழ் தியாகராசர் கல்லூரியுடன் இணைந்து உருவாக்கலாம் எனும் எண்ணத்தோடு கல்லூரித் தலைவர் திரு. கருமுத்து.தி.கண்ணன் அவர்களை அணுகினோம்.

கல்லூரித் தலைவர் அவர்களும், **துணைத்தலைவர் டாக்டர் திருமதி.உமாகண்ணன்** அவர்களும், இவர்களுடைய திருமகனார், **எம் கல்லூரிச் செயலர் திரு. ஹரி தியாகராஜன்** அவர்களும் பெருமகிழ்வோடு இம்முயற்சிக்கு ஒப்புதல் தந்தார்கள். இந்த ஒப்புதலின்படி திரு.பால்.சி.பாண்டியன் அவர்கள் வைப்புத் தொகையாக ஒரு நிதியை எம் கல்லூரிக்குத் தந்துள்ளார்.

13.07.2013ஆம் ஆண்டு தமிழிசை ஆய்வு மையம், **இசைஞானி இளையராஜா** அவர்களால் எம் கல்லூரியில் தொடங்கி வைக்கப்பட்டது. இவ் இசை மையத்தில் இலவசமாய் மாணவ மாணவிகள் இசை கற்க, இசையாசிரியர் திரு.தி.சிவப்பிரகாசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழர் வாழ்வில் இசைக்கருவிகள் என்னும் தலைப்பில் இசைகுறித்து முழுநேர ஆய்வுசெய்ய, ஆய்வு மாணவர் ஒருவருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு, ஆய்வு நடைபெற்றுவருகிறது.

தமிழிசைப் பேரகராதியைத் தொகுத்த தமிழிசை அறிஞர் **நா.மம்மது**வின் கடும் உழைப்பாலும், தமிழிசையில் ஆழங்கால் பட்ட அவரது நன்முயற்சியாலும் தமிழிசைப் பண்களஞ்சியம் உருவாயிற்று. இம்முயற்சியின் முதற்கட்டமாக 100 பண்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை வரிவடிவாகவும் ஒலிவடிவாகவும் வெளியிடும் எண்ணத்தின் அடிப்படையில், 100 பண்களுக்கான நூலுடன், 100 பண்களையும் இசைக்க வைத்து, ஒலிக் குறுந்தகடாகவும் **நா.மம்மது** உருவாக்கி இருக்கிறார். இதோ நூல் வடிவில், **தமிழிசைப் பண்களஞ்சியம்** வெளிவருகிறது.

ஒலிவடிவிலான குறுந்தகட்டில் சில இசைப்பகுதிகளைச் செய்து உதவிய இசை ஆய்வாளரும், **தமிழ்த்திரைப்பட இயக்குனருமான திரு.சுகா** அவர்களின் ஒத்துழைப்பால், **இசைவாணர் லால்குடி ஜெ.கிருஷ்ணன்** அவர்களின் நல்லுழைப்பால், **திரு.வேதாந்த்** அவர்களின் ஒருங்கிணைப்பால் தற்போது வெளியிடப்படுகிறது.

தமிழிசை ஆய்வாளர் **திரு.மம்மது** அவர்கள் இந்நூலில் **100** பண்களைத் தேர்ந்தெடுத்து,

முல்லைப்பாணி (மோகனம்)
குறிஞ்சிப்பாணி (மத்தியமாவதி)
நெய்தல்பாணி (இந்தோளம்)
பாலைப்பாணி (சுத்தசாவேரி)
மருதப்பாணி (சுத்ததன்யாசி)

என அட்டவணைப்படுத்தித் தமிழிசைப் பாலைகளை,

மெல்லுழை (சுத்தமத்திமம்), வல்லுழை (பிரதிமத்திமம்) எனவும் வகைப்படுத்தி, இசைகுறித்து அறியாதவரும் அறிந்து கொள்ளும்வண்ணம் எளிமைப்படுத்தித் தந்துள்ளார். அசாவேரி எனும் பண்ணில் தொடங்கி விளரிப்பாலை (தோடி) என 100 பண்களை இந்நூலில் அறிமுகம் செய்கிறார், ஆசிரியர்.

ஒவ்வொரு பண்ணிற்குமான **தாய்ப்பண்ணை**க்கூறி,

ஏறுநிரல் (ஆரோகணம்)

இறங்குநிரல் (அவரோகணம்)

என்பதற்கான சுரங்கள் குறித்துச் சொல்லி, இப்பண்ணை இவ்வாறு தொடங்கி இவ்வாறு பாடவேண்டும் என வழிநடத்தி,

இப்பண் பெருமிதச் சுவையைத் தரும் பண் என்றும்,

இது ஓர் இரங்கல் சுவைப் பண் எனவும்,

இது நாட்டார் பண் (Folk Melody) **எனவும்** விளக்கிச் சொல்லிச் செல்வது இந்நூலின் மிகச் சிறந்த ஓர் ஆய்வு நடை.

இதற்குமேலும் ஒவ்வொரு பண்ணையும் குறிப்பிட்டு, **இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள்** என்னும் தலைப்பில், பாடலின் தொடக்க அடியையும், பாடியவர் பெயரையும், படிப்போர்க்கு, பாடுவோர்க்குப் பயன்படும் வகையில் தந்திருக்கும் இப்பண் களஞ்சியம், ஓர் அற்புத இசை ஆய்வு நூல் என்பதில் ஐயமில்லை.

சான்றாக,

அசாவேரி

தாய்ப்பண் : விளரிப்பாலை (தோடி)

ஏறுநிரல் : ச ரி^{1} ம^{1} ப த^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} ச் ப த^{1} ம^{1} ப ரி^{2} க^{1} ரி^{1} ச

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

எந்த நாளிலும் - ஏழன் சாய்ப்பு - வேதநாயகம்பிள்ளை

சரணம் சரணம் - ஆதி - அருணாச்சலக்கவிராயர்

ஐயன் திருவடி - ஆதி - பெரியசாமித்தூரன்

ஸ்ரீஇராமச்சந்திர - ஆதி - கோபாலகிருஷ்ண பாரதியார்

ஒலிவடிவில் பண்களைக் கேட்கவும், வரிவடிவில் அவற்றிற்கான பண் குறித்தச் செய்திகளை அறிந்துகொள்ளவுமாக இந்தத் தலைமுறையினருக்கான, எதிர்காலத் தலைமுறையினருக்கான இசை ஆவணமாக இம்முயற்சி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

கடந்த **ஐந்தாண்டுகாலமாக** இவ்வாய்வில் தோய்ந்து அரும்பணி செய்த தமிழிசை அறிஞர் நா.மம்மது இசைப்பணி தொடரவேண்டும்.

தியாகராசர் கல்லூரியில் தொடங்கப்பட்டுள்ள தமிழிசை ஆய்வு மையத்தை, தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கும் முயற்சியும் நடைபெற்று வருகிறது. மாணவர்கள் மட்டுமல்லாது இசை கற்க விரும்புவோர் அனைவரும் இதில் சேர்ந்து தமிழிசை கற்கலாம்.

இச்செயல்பாடுகளுக்கெல்லாம் எப்போதும் துணைநிற்கும் கல்லூரித் தலைவர் அவர்கள், செயலாளர் அவர்கள், புரவலர் பால்.சி.பாண்டியன் அவர்கள் ஆகிய பெருமக்களுக்கு என்றென்றும் நம் இனிய நன்றிகள்.

நாள்: 26.04.2016
இடம்: மதுரை

முனைவர் கு.ஞானசம்பந்தன்
ஒருங்கிணைப்பாளர்,
தமிழிசை ஆய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி.
மதுரை.

ஆசிரியமுன்னுரை

"தமிழ் இசை தொன்மையானது; இளமையானது; இன்னும் பாடப்படவே இல்லை, அதன் உன்னதப்பாடல்கள்"[1]

"பண்டை நலம் புதுப்புலமை பழம் பெருமை
அனைத்தையும் நீ படைப்பாய்! இந்நாள்"[2]

இந்த ஏக்கத்தின் வெளிப்பாடே, ஏற்கனவே வெளிவந்துள்ள 'தமிழிசைப் பேரகராதி – சொற்களஞ்சியம்'; தற்போது தங்கள் கையிலிருக்கும் 'தமிழிசைப் பேரகராதி – பண்களஞ்சியம் மற்றும் 100 பண்களின் ஒலிக்குறுந்தகடு'; இனி வெளிவர இருக்கும் 'தமிழிசைப் பேரகராதி – கருவிக் களஞ்சியம் மற்றும் தமிழ் இசைக் கருவிகளின் ஒளி – ஒலிக்குறுந்தகடு'.

X-X-X-X

தொல்குடித்தமிழர் தோன்றிய முதல் இடம் மலை மற்றும் மலைசார்ந்த குறிஞ்சி நிலம். இரவும் பகலும் உறங்காத வேட்டைச் சமூக வாழ்க்கை.

"நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்"[3] என்று புறநானூறு இதைக் கூறும்; குறிஞ்சி நிலக் கானவன்; அவன் தங்கை கொடிச்சி; அவள் குறிஞ்சி மலை நிலத்தில் குறிஞ்சி(ப்பண்) பாடுகிறாள்:

"கொடிச்சி பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட"[4]

"மல்லிகை கமழ் தென்றலீருமாலோ, வன்குறிஞ்சி இசை தவருமாலோ..." (திருவாய்மொழி 9:9:1)

"இது பஞ்ச விஷயத்துக்கு உபலஷணம்." - பெரியவாச்சான் பிள்ளை' சிறிய திருமடல் தனியன் மெல்லுறை (வியாக்யானம்).

"விரஹத்தில் பாதிப்பவையான சந்திரன், மல்லிகை, குறிஞ்சிப்பண், வாடைக்காற்று, மலர்ப்பள்ளி என்னும் ஐந்து விஷயங்களுக்கு எடுத்துக்காட்டு..." திரு.கிருஷ்ணசாமி அய்யங்காரின் உரை.

புணர்ச்சி, களவு, காமம், காதலுக்குரியது குறிஞ்சிப்பண்; இன்றைய நடபயிரவி; எனவே குறிஞ்சியின் உரிப்பொருள் புணர்ச்சியாகிறது.

உணவுக்கான ஓட்டமும் நடையுமாகவே இருந்த குறிஞ்சி நில வாழ்க்கையை அடுத்து, ஓரிடத்தில் மக்கள் குழு நிலையாக இருந்து (இருத்தல்) வாழத்தொடங்கிய இடம் முல்லைநிலம். அந்நில எளிய மகளிரான ஆய்ச்சியர்,

"... பாடுதும் முல்லைத்தீம்பாணி என்றாள்"[5]

"... முல்லையந்தீங்குழல் கோளாமோ தோழீ"[6]

என்று முல்லைப்பாணி - முல்லைக்குழல் - இன்றைய 'மோகனம்' பாடுகின்றனர்.

தொடக்ககாலத்தைச் சேர்ந்த எளிமையான குறிஞ்சி நிலப் பெண்டிரும், முல்லை நில மகளிரும் தமிழ் இசைப் 'பண்'களைப் பாடியிருக்கின்றனர் என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பான இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

X-X-X-X

நம் இசை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்ணிசை (இராக சங்கீதம்)யாக உருமலர்ந்து இசையின் உச்சநிலையை அடைந்திருந்தது.

"தமிழக இசைமரபு 3000 ஆண்டுகாலப் பழமையுடையது. இது சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை பலவாறு வளர்ந்து செழிப்புற்றுத் திகழ்கின்றது"[7] என்பார் இசை பாடுதுறைக்கு இலக்கணம் வகுத்த செம்மங்குடியார் (திரு. ஆர். ஸ்ரீனிவாசய்யர்).

"எல்லாவற்றுக்கும் எப்போதும் வடக்கேயே பார்த்து அன்னாந்து நின்ற நம் மக்களுக்கு 'தமிழ் இசை அதன் இலக்கணம்' ஆகியவை எவ்வளவு தொன்று தொட்டது என்பது இதனால் புரியும்... ஒன்று நிதர்சனமாகிறது, தென்னாட்டில் எந்த இசையாக இருந்தாலும் அது தமிழ் இசை இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் என்பது நிச்சயம்"[8] என்று

தமிழ் இசையின் பழமையைச் சரியாகவே பதிவுசெய்வார் இசை விமர்சன வித்தகர் திரு சுப்புடு.

X-X-X-X

தமிழ் இசையான பண் இசையை, நம் முன்னோர் ‘இன்னிசை’ (Melodic Music) என்றே அழைத்து வந்துள்ளனர் (இன் - இனிய)

“குரல் புணர் இன்னிசைத் தழிஞ்சி பாடி”[9]

“இன்னிசை வழியது அன்றி இசைத்தல் செம்பகையதாகும்”[10]

“நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்”[11] என்றெல்லாம் நம் முன்னோர் இதைப்பதிவு செய்துள்ளனர்.

குழலிசையாக, யாழிசையாக, குரலிசையாக எந்த ஓர் இசையாக இருப்பினும் அதில் ஒரு பண் பொதிந்திருக்கும். அதாவது பாடப்பட்ட எந்த இசைப் பாடலும் அடிப்படையில் ஒரு பண்ணில் அமைந்திருக்கும்.

“பாவோடு அணைதல் இசை என்றார் பண் என்றார்”[12]

இவ்வாறு பண்ணிசையாக வளர்ந்து வந்தது நம் இசை. தமிழ் இசை நெடும்பரப்பில் ‘பண்’ பெரிதும் பேசப்பட்டுள்ளது; இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளது.

“பண் என்னாம் பாடற்கு இயைபின்றேல்”[13]

“பண் வனப்புக் கேட்டார் நன்று என்றல்”[14]

“பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்”[15]

“பண் என்ப பாட்டும் பண்ணும்”[16] என்றெல்லாம் பதிவு பெற்ற ஆவணங்கள் பல உண்டு. நம் காலத்துப் பாரதியும்,

“பண்அளவு உயர்ந்தது என் பண்” என்று சீட்டுக்கவி பாடுவார்.

X-X-X-X

உலகில் இரு வேறு இசை முறை(System)கள் உள்ளன. ஒன்று மேலை இசை: நமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அந்த மேலை இசை, ஒத்திசை என்ற கூட்டிசை (Harmonic) முறையைக் கொண்டது.

மற்றொன்று கீழை இசை. அது பண்ணிசை (Melodic) முறையைக் கொண்டது. Melody என்ற ஆங்கிலச் சொல்லானது ‘இனிமை’ மற்றும் ‘பண்’ என இரு பொருள் கொண்டது. இவ்வாறு கீழை இசையின் அடிப்படை ‘பண்’ ஆகிறது. எனவே நமது தமிழ் இசை ‘பண்முறை’ இசை.

கீழை இசை, கிழக்காசிய இசை, தமிழ் இசை, கர்நாடக இசை, திராவிட இசை, Oriental Music, Horizontal Music, Linear Music, Homophonic Music, Monophonic Music, Single Diamensional Music என்றெல்லாம் பற்பல பெயர்களில் அழைக்கப்படும் இசையானது, தமிழ் இசை முறையான “பண்ணிசை”யை அடிப்படையாகக் கொண்டது.

X-X-X-X

நம் இசை ஒற்றைச்சுர (Monotone) வரிசை இசையாகும். ஒவ்வொரு சுரமாக வரிசையாக இசைக்கப்படுவது. (The Music Progress in succession of single Notes). மானிடக்குரல், யாழ், குழல், நாகசுரம் ஆகியவற்றில் ஒரு நேரத்தில் ஒரு சுரம் மட்டுமே எழுப்ப முடியும். ஆகவே தமிழிசை ‘ஒற்றைச்சுர இசை’ முறையைச் சேர்ந்தது. இவ்வாறான ஒற்றைச்சுர இசைமுறையால் மணிக்கணக்கில் நாள்கணக்கில் பாடல்இன்றி சுரம் மட்டுமே, பண் மட்டுமே ஆளத்தி (ஆலாபனை) செய்து பண் விரிவாக்கத்தை நம்மால் செய்ய முடிகின்றது. இவ்வாறு ஆளத்தி பாடுவதே நம் இசையின் தனித்துவமான அடையாளம்.

நம் இசை ஒற்றைச் சுர வரிசை முறையைக் கொண்டிருப்பதால், பல சுரங்களை ஒரே நேரத்தில் எழுப்புகின்ற ஆர்மோனியம், ஆர்கன், அகாடின், பியானோ போன்ற இசைக் கருவிகள் (Polyphonic) தமிழகத்தில், நம் இசைமுறையில் தோன்றவில்லை; சிம்பொனி உருவாகவில்லை.

நாற்பெரும் பண்களாக[17], ஐந்திசைப் பண்களாக[18], ஏழ் பெரும் பாலைகளாக[19], 32 தாய்ப்பண்களாக[20], 103 பண்களாக[21], 11991

ஆதிஇசை (பண்)களாக[22] நம் இசையில் பண்களின் பெருக்கம் உச்சநிலையை அடைந்திருந்தது.

இசை என்ற சொல் "பண்" என்றே பொருள்படும்; (ஆதி இசை –ஆதிப்பண்)

"India has developed a magnificent system of music. The History of this system can be traced back to three thousand years… All Possibilities of a true melodic system of music have been explored here. The raga system is India's gift to world's music thought"[23] என்பார், இசை இலக்கணப் பெரும்பேராசிரியர் பி.சாம்பமூர்த்தியார்.

ஆனால் இக்காலத்தில் ஒரு நூறு பண்கள் என்ற அளவில் பாடுவதோ அல்லது தெரிந்து வைத்திருப்பதோ கூட அரிதாகி வருகின்றது. பண் பெருக்கம் எவ்வாறு சரிவைச் சந்தித்தது என்பதைக் கீழ்க்கண்ட பதிவுகள் தெளிவுபடக் காட்டும்:

"… வழக்கில் கையாளத்தகுந்த ராகங்கள் மிகக் குறைவு. சுமார் 150 ராகங்களே உள்ளன. இச்சிறு எண்ணிக்கையிலும் சுமார் 75லிருந்து 100 ராகங்கள்தான் பொதுவாக அறியப் பெறுகின்றன."[24] என்பார் இந்துத்தானி இசையைப் பற்றி முதன் முதலாக, கடந்த நூற்றாண்டில் நூல் எழுதிய பண்டித விஷ்ணு நாராயண பத்கண்டே.

"In Practice, then, there are about 250 ragas heard of or even grammatized. A very well trained person may recognize about a hundred"[25] என்பார், இந்துத்தானி இசையின் இக்கால ஆய்வாளர் பி.சைதன்ய தேவா.

ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலமாகப் பேணிவந்த மரபுகளை கடந்த ஒரு நூற்றாண்டில் மட்டும் நாம் நிறையவே இழந்து இருக்கின்றோம். இப்பொழுது! மிகமிக வேகமாகவே இழந்து வருகின்றோம். இக்காலம் நடப்பில் பாடப்பட்டுவரும் ஒரு நூறு பண்களையாவது, எதிர்காலத்தில் அவற்றையும் நம் தமிழ்ச்சமூகம்

இழந்துவிடக் கூடாது, என்பதற்காக ஆவணப்படுத்திக் காப்பாற்றும் முயற்சியே இந்த ஒலிக்குறுந்தகடு.

X-X-X-X

ஒவ்வொரு பண்ணும் தனித்ததோர் சாயல் (இசை வடிவம்) கொண்டது. பலப்பல நூற்றாண்டு காலமாக நம் முன்னோர் பாடிப்பாடிக் கண்டுபிடித்தது, இந்தப் பண்சாயல். நம் இசை உலகில் பண் சாயல் மிகமிக முக்கியமானது. இந்தக் குறுந்தகட்டில் அதுவே ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நம் முன்னோர் பாடிப்பாடி, தேடித்தேடிக் கண்டடைந்த இசை இலக்கணங்கள் கோடிக்கோடி. அந்தப் புகழ் மண்டிக்கிடக்கும் இசை இலக்கணங்கள் இக்குறுந்தகட்டிலோ, நூலிலோ அதிகளவு பதிவு பெறவில்லை. தேவைப்படுவோர் பாடுவார் வழி கற்றுணர வேண்டுகிறேன்.

X-X-X-X

உலகெங்கும் இசையின் ஒரு தானத்திற்கு (Octave), 12 தான சுரங்களே (Semitones) நடப்பில் உள்ளன. பியானோ, கீபோர்டு, ஆர்கன், ஆர்மோனியத்திலும் 12 சுரக்கட்டைகளே. தமிழரின் ஒப்பற்ற யாழ் (வீணை) எனும் இசைக் கருவியிலும் 12 சுரத்தானங்களுக்கே மெட்டுக்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால் கர்நாடக இசையானது 'தமிழிசையே அல்ல; வேறுபட்ட ஒரு இசை முறையைச் சேர்ந்தது என திரிபாகக் காட்டுவதற்காக இயல்பான 12 சுரத்தானங்களுடன் மேலும் 4 செயற்கைச் சுரங்களையும் சேர்த்து 16 பெயர்கள் வைத்து, அதில் நான்கு 'பகைச் சுரங்கள்' எனவும் பெயரிட்டுள்ளனர். இப்பகைச் சுரங்கள் வரும் பண்கள் பகை மேளங்கள். இவ்வாறு 72 மேள கர்த்தாக்கள். இத்திட்டம் ஒரு செயற்கையான திட்டம். இது இசை கற்போர்க்கும் பாடுவோர்க்கும் பெரும் குழப்பத்தைத் தருவது. 12 நபர்களுக்கு 16 பெயர் வைத்தால் குழப்பம் தானே மிஞ்சும். ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தமிழ் இலக்கிய, இலக்கண, உரைமரபு,

நிகண்டு, கல்வெட்டு, இசைநூல் என்ற தமிழ் நெடும்பரப்பில் எங்கும் எதிலும் 16 சுரம் 72 மேளத்திட்டம் பதிவு பெறவில்லை. எனவே இது தமிழ் இசை முறையன்று. எனவே இத்திட்டம் பற்றி இந்நூல் பேசவில்லை கட்டமைக்கப்படவில்லை.

(பார்க்க : 72 மேளகர்த்தா - ஒரு மீள்பார்வை என்ற கட்டுரை நா.மம்மது, 'தமிழிசை வேர்கள்; பக்கம் 99)

X-X-X-X

இசையின் சுரங்கள் - ஏழு

"எழுமதி வாழி! ஏழின் கிழவ!"[26]

"இறுத்தானை ஏழு நரம்பின் இசை கேட்டானை"[27]

என்று இசையின் சுரங்கள் ஏழு என்பதை நம் முன்னோர் பதிவு செய்துள்ளனர்.

(நரம்பு – சுரம்)

இசையின் தான சுரங்கள் - 12

"...பன்னிரு கால் திரிக்கப் பன்னிரு பாலையும் பிறக்கும்"[28]

[பாலை – தான சுரம் (Semitone)]

பன்னிரு சுழற்சி அல்லது பன்னிருமுறை திரித்தல் - இரண்டு முறைகளில்:

1) இணைமுறை / ஏழன்முறை / பஞ்சமபாவம் / இளிக்கிரமம் (Order of 5 th)

ச ப	ப ரி^{2}	ரி^{2} த^2	த^{2}க^2	க^{2}நி^{2}	நி^{2}ம^2	ம^2 ரி^{1}	ரி^{1}த^1	த^{1}க^1	க^{1}நி^{1}	நி^{1}ம^1	ம^1 ச
1	2	3	4	5	6	7	8	9	10	11	12

'ச' என்ற சுரத்திலிருந்து (தொடங்கிய சுரத்தை விடுத்து) ஏழாவது, ஏழாவது (இணைமுறை) சுரமாகத் திரிக்க, 12 பாலைகள் (தான சுரங்கள்) கிடைக்கும். 12வது சுழற்சியில் தொடங்கிய 'ச' என்ற சுரமே மீண்டும் வரும்.

2) கிளைமுறை /ஐந்தன்முறை / மத்திமபாவம் / உழைக்கிரமம் (Order of 4th)

ச ம^{1}	ம^{1}நி^{1}	நி^{1}க^{1}	க^{1}த^{1}	த^{1}ரி^{1}	ரி^{1}ம^{2}	ம^{2} நி^{2}	நி^{2}க^{2}	க^{2}த^{2}	த^{2} ரி^{2}	ரி^{2} ப^{2}	ப ச
1	2	3	4	5	6	7	8	9	10	11	12

"கிளையில் காட்டி ஐம்முறை கிளத்தி"[29] என்பது கல்லாடச் செய்தி.

'ச' என்ற சுரத்திலிருந்து (தொடங்கிய சுரத்தை விடுத்து) ஐந்தாவது, ஐந்தாவது (கிளைமுறை) சுரமாகத் தொடுத்துச் சென்றால், 12 பாலைகள் (தானசுரங்கள்) கிடைக்கும். 12வது சுழற்சியில் தொடங்கிய 'ச' என்ற சுரமே மீண்டும் வரும்.

இவ்வாறாக ஒரு தானத்தில் (Octave) பன்னிரு தான சுரங்கள் வரும் முறையை மேற்கண்ட சிலப்பதிகார உரை தெரிவிக்கின்றது. மேற்கண்ட இணை முறை மற்றும் கிளை முறைகளினால் கீழ்க்கண்ட பன்னிருதான சுரங்கள் கிடைக்கின்றன:

1	2	3	4	5	6	7	8	9	10	11	12
ச	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}

கீழ்க்கண்ட இலக்கியப்பதிவுகளும் இம்முறைகளுக்கு அரண் செய்கின்றன:

"இணை, கிளை, பகை, நட்பு என்று இந்நான்கின்
இசை புணர் குறிநிலை எய்தநோக்கி"[30]

"ஏழாநரம்பு இணை, நாலுநட்பாகும், ஐந்துகிளை, ஆறும் மூன்றும் பகையே"[30]

"வரன்முறை மருங்கின் ஐந்தினும் ஏழினும்"[31]

"குரல் முதலாக இணை வழி கேட்டும்"[32]

"இணைவழி ஆராய்ந்து இணை கொள முடிப்பது"[33]

இசையின் தானங்கள் - 3

பாடும் பொழுது, மானிடக்குரல் எல்லை (human voice register) மூன்று தானங்கள் (3 octaves) வரை அமைந்திருக்கும்.

"மூவகை இயக்கமும் முறையுளிக் கழிப்பி"[34]

"வலிவு, மெலிவு, சமனு மெல்லாம்"[35]

"மந்தரம், மத்திமை, தாரமிவை மூன்றில்"[36]

"வரன் முறைவந்த மூவகைத்தானத்து"[37]

(தானம் - இயக்கம் - octave)

X-X-X-X

இவ்வாறு இசையின் சுரங்கள் - 7; தான சுரங்கள் - 12; தானம் - 3; பண் (7சுரம்), பண்ணியல் (6சுரம்), திறம் (5சுரம்), திறத்திறம் (4சுரம்) என்றெல்லாம் தொல்காப்பியம், சான்றோர் (சங்க) இலக்கியங்கள், இவற்றின் உரை மரபு, சிலப்பதிகாரம், அதன் இருபெரும் உரைகள், கல்லாடம், சீவக சிந்தாமணி முதலிய தமிழ் இலக்கிய, இலக்கண, உரைகள் காட்டிய தமிழ் இசை முறையில் 'தமிழிசைப் பேரகராதி – பண்களஞ்சியம்' எனும் இந்நூல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஐவகை நிலத்தின் பெரும் (7சுர) பண்களான, ஏழ்பெரும் பாலைகளின் பெயர்கள் சான்றாக, செம்பாலை, கோடிப்பாலை போன்றும், நிலத்தின் சிறுபண்ணான (5சுர) திறங்களின் (பாணி) பெயர்கள், சான்றாக முல்லைப்பாணி, குறிஞ்சிப்பாணி போன்றும், இளங்கோவடிகள் சிலம்பில் காட்டிய முறையிலேயே இந்நூலிலும், குறுந்தகட்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் உடனடிப் புரிதலுக்காக, அயல் மயமாக்கப்பட்டுள்ள இக்கால இராகப் பெயர்களும் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன. இந்த வழமை எதிர்காலத்தில் முற்றிலும் களையப்பட வேண்டிய ஒன்று; களையப்படும்.

X-X-X-X

இந்துத்தானி இசை :

வட இந்திய 'பண்முறை' இசையான இந்துத்தானி இசை பற்றிச் சில செய்திகளை நாம் பேசியாக வேண்டும்:

"The essentials of Indian Music both in the North and the South are the same"[38] என்பது தமிழ் இலக்கியக்கலைக் களஞ்சியம் தரும் செய்தி.

"...She has developed two subsystems of music Karnatic and Hindustani. Both the systems received their nourishments from the same original source..."[39] என்று குறிப்பிடுகிறார் பேரா.பி.சாம்பமூர்த்தியார்.

ஏற்கனவே நாம் கண்டபடி, இந்துத்தானி இசையும் பண் இசை (இராக சங்கீதம்) என்ற இசைமுறையைச் சேர்ந்ததுதான். நமது பாலை என்ற ஏழு சுரத் தாய்ப்பண் (மேளம்) 'தாட்' என்று இந்துத்தானி இசை முறையில் பெயர் பெற்றுள்ளது. சில பண்கள் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் இசைப்பயணம் செய்துள்ளன. சான்றுக்குச் சில பண்களை நாம் காட்டலாம்.

தேசி ⟷ தேஷ்[40]

சிந்து பயிரவி என்றொரு பண். பாரதியின் 'தீராத விளையாட்டுப் பிள்ளை' மற்றும் பாவேந்தரின் 'தலைவாரிப் பூச்சூடி உன்னை' எனும் பாடல்கள், சிந்து பயிரவிப் பண்ணில் இசைப்படுத்தப்பட்டவை. தமிழிசையின் தொன்மைப் பெரும்பண்களான ஏழ் பெரும்பாலைகளில் இறுதிப்பாலையாக வருவது விளரிப்பாலை. அது இன்றைய தோடி. தோடியின் சுரங்களை அசைவில்லாது (Flat Notes) பாடும் பொழுது சிந்துபயிரவிப் பண்ணின் சாயல் கிடைக்கும். எனவே தோடி என்ற தாய்ப்பண்ணில் பிறந்ததே சிந்துபயிரவி. மேடை நாடகங்களில் சிந்து பயிரவியானது 'தேசிக தோடி' என்ற பெயரில் பாடப்பட்ட வரலாறு உண்டு. நமது நாட்டார் பாடல்கள் சிலவற்றில் இப்பண்ணின் சாயல் வருவதைக் கேட்கமுடிகின்றது.

இப்பண்கள் வடக்கிலிருந்து தெற்கே வந்ததா, தெற்கிலிருந்து வடக்கே சென்றதா என்பதை முடிவுசெய்வது அவ்வளவு எளிதானதல்ல.

ஒரு சில பண்கள் நம் இந்திய முழுமையிலும் பாடப்பட்டு வருகின்றன. அவற்றை 'pan-Indian Melodies' என்றே நாம் பாகுபடுத்த வேண்டும். சிலபண்கள் (மோகனம், சுத்ததன்யாசி போன்றவை) உலக முழுக்கவே பாடப்படுகின்றன. அவற்றை pan-Universal Melodies என்றே கூறவேண்டும்.

எனவே தமிழகத்தில் (தென்னகத்தில்) நடப்பில் நாம் பாடிவரும் 'இந்துத்தானிப் பண்'களில் சில இக்குறுந்தகட்டில் பதிவு பெற்றுள்ளன.

தியாகராசர், முத்துசாமிதீட்சிதர், சியாமாசாஸ்திரிகள், கனகதாசர், புரந்தரதாசர், பத்ராசலம்ராமதாசர், அன்னமாச்சாரியார், நாராயணதீர்த்தர், சதாசிவப்பிரமேந்திரர், சுவாதித்திருநாள் போன்ற 'அன்னிய' இசையாளர்களின் பாடல்களும் இக்குறுந்தகட்டில் பதிவு பெற்றுள்ளன. இதற்கான காரணங்கள்:

1. இவர்களுடைய பாடல்களில் பதிவுபெற்றுள்ள இனிமையான தமிழ் இசை வடிவங்கள் (வர்ணமெட்டு – Tune)
2. தென்னக இசை என்பது தமிழசைதான் என்பதை அடையாளப்படுத்துவதற்கு
3. பாடல் பிறமொழி; இசை, தமிழிசைதான்
4. பன்மயத்தைக் கொண்டாடுவோம் (Celebrate diversity)
5. "நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்"[41]

என்பதை, நம்பண்பாட்டுக் கூறுகளில் நாம் பெருமைப்பட வேண்டிய ஒன்றாக நான் நினைக்கிறேன். எப்பேர்ப்பட்ட அழிவிலிருந்தும் நம்மை மீட்டு வாழ்வாங்கு வாழ வைத்து வரும் உந்து சக்திகளில் ஒன்றாக இதை நான் கருதுகின்றேன்.

இந்த இசை இமயங்களின் பாடல்களை அவை தமிழல்லாத 'அயல்' மொழிகளில், திராவிடமொழிகளில் இருந்தாலும் 3000 ஆண்டுகால தமிழிசையின் உன்னதங்களையெல்லாம் உட்பெய்து, பட்டைதீட்டி, மெருகேற்றி, பாடிப்பாடி இமயத்தின் சிகரத்திற்கு உயர்த்திய பெருமைக்குரியவர்கள் தமிழரில் பலர் உண்டு. அவர்களில் முதன்மையானவர்கள் நமது இசைத் தந்தையர்களான ஓதுவாமூர்த்திகளும், நாகசுர விற்பன்னர்களும் மற்றும் எண்ணெண் கலைகளுக்குச் சொந்தக்காரர்களான, நமது இசைத் தாயர்களான கணிகையர்களும் தான்.

எனவே இவ்வாறு நம் தமிழிசையாளர்கள் ஆக்கித்தந்த 'அன்னிய' இசை வடிவங்களையும் விட்டுவிடாது ஆவணப்படுத்துவது நமது கடமைகளில் தலையாயது. ஏனெனில் அது நமது மரபுரிமைச் சொத்து (legacy). இக்கடமையானது, இக்குறுந்தகட்டில் 100 பண்பதிவுகளாகச் செயல்வடிவம் பெற்றுள்ளது.

X-X-X-X

"பாட், சாரன் என்ற இரு இனத்தவரும் மாதா எனப்படும் தாய்த் தெய்வத்தை வணங்கியது போலவே, வேட்டுவ வரியில் வரும் எயினரும் கொற்றவையாகிய தாய்த் தெய்வத்தை வணங்குபவர்களாக உள்ளனர். ...புராதன தமிழ்ச் சமூகத்தில் வழக்கில் இருந்த ஆநிரை கவர்தல் - மீட்டல் என்ற வழக்காறு வெட்சி –கரந்தை என்ற இலக்கண மரபாக உருவாக்கம் பெற்றமை ஒருபுறம் நிற்க, இந்த வழக்காறே பாட், சாரன் என்ற பழங்குடிப் பாணர் மரபினரின் பண்பாட்டிலும் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. இந்திய நிலப்பரப்பில் இது போன்ற தமிழ்ச் சமூக வழக்காற்று மரபுகள் பலவும் பல்வேறு இடங்களில் பல்வேறு இனக்குழுப்பண்பாட்டு மரபுகளில் நின்று நிலவுவதை அண்மைக்கால ஆய்வுகள் வெளிக்கொணர்ந்துள்ளன. குமரிமுனை தொடங்கிச் சிந்துவெளி நாகரிகப்பரப்பு வரையிலுமான பழங்குடி, நாட்டார் மரபுகளை ஆழங்காற்பட்ட ஆய்விற்கு உட்படுத்தும் போது புராதனத் தமிழ்ச்சமூக மரபுகளை மீட்டுருவாக்கம் செய்யும் நிலையும் அதன்

மூலம் தமிழ் மரபுகளின் நில எல்லையை விரிவாக்கம் செய்யும் நிலையும் உருவாகும் என்பது திண்ணம்”[42]

மேற்கண்ட சொல்லாடலை அப்படியே தமிழ் இசைக்கும் பொருத்திப் பார்க்கலாம். தமிழ் இசை மரபுகள் பலவும் இந்திய நிலப்பரப்பில் பல்வேறு இனக்குழுப் பண்பாட்டு மரபுகளில் நின்று நிலவலாம். குமரிமுனை தொடங்கி சிந்துவெளி நாகரிகப் பரப்பு வரையிலான பழங்குடி மற்றும் நாட்டார் இசை மரபுகளை ஆழங்காற்பட்ட ஆய்விற்கு உட்படுத்தும்போது, புராதனத் தமிழ்இசை மரபுகளை மீட்டுருவாக்கம் செய்யும் நிலையும் அதன் மூலம் தமிழ்இசை மரபுகளின் நில எல்லையை விரிவாக்கம் செய்யும் நிலையும் உருவாக நிரம்பவே வாய்ப்புள்ளது.

X-X-X-X

300 பண்களைப் பதிவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. கால எல்லை கருதி முதலில் 100 பண்கள் வரை ஆவணப்படுத்த முடிவு செய்யப்பட்டது. இப்போது நிலவும் வாய்ப்பு மற்றும் சூழலில் 500 பண்கள் வரை பதிவு செய்யமுடியும். இனிவரும் காலங்களில் இப்பணி நிறைவுபெறும் சூழல் ஏற்படலாம்.

இக்குறுந்தகடு மூன்று முக்கியமான சிறப்புச் செய்திகளைக் கொண்டுள்ளதாக நான் கருதுகிறேன்:

1.நமது பண்கள் 100 குறித்து ஒருகூரையின் கீழ், இந்த ஒரு குறுந்தகட்டின் மூலம் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு நமக்கு எளிதாகக் கிட்டியுள்ளது.

2. பாவேந்தரின் ‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கேமுழங்கு’ என்ற புகழ்மிக்க, மொழியைப் பண்பாட்டு வேராக, வாழ்வாக, வளமாகக் கூறும் இரண்டு வரிகள் 100 பண்களில் பாடப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளன.

3. ஏழ்பெரும்பாலைகளில் மூன்றாவது பாலையாக வரும் செவ்வழிப்பாலை என்ற பண், பாடும் மரபு மறைந்துவிட்டது: தற்சமயம் பாடப்பட்டு இக்குறுந்தகட்டில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைச் செய்த பெருமை என் இனிய நண்பர் பெரும் பாடகர்

திருச்சி கணேசன் அவர்களுக்கே உரியது. அவரும், திருமதி பாலாமணி ஈஸ்வரும், செவ்வழிப்பண்ணை அதன் தொன்மை உருவில் இனிமையாகப் பாடி உள்ளனர். அவ்விருவருக்கும் என்நெஞ்சார்ந்த நன்றி.

100 பண்கள், கருவிகளில் இசைக்கப்பட்டு, பாடப்பட்டு, வேண்டிய விளக்கங்களுடன் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவ்இசைக் குறுந்தகடும் நூலும் இசைப்பாடகர், இசை ஆசிரியர், இசை கற்போர், இசை அமைப்பாளர், இசை ஆய்வாளர், இசைக் கருவியாளர், இசை ஆர்வலர், இசையைத் தொடர்புபடுத்தும் ஏனைய துறை ஆய்வாளர், நடிகர், நட்டுவர், நாடகக்காரர், ஆடலர், தமிழ் ஆசிரியர், மாணவர், எழுத்தாளர் எனப் பலருக்கும் பயன்படும் முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

நாகசுரக்கருவியையும், நாகசுரக்காரர்களையும் உச்சத்திற்குக் கொண்டுவந்த தனியொரு நாகசுரப்பெருமன்னன் திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை, காருகுறிச்சியார், நாமகிரியார், செம்பொனார் கோவிலார், தியாகராச பாகவதர், சின்னப்பா, பட்டம்மாள், வசந்தகுமாரி, தேசிகர், சுந்தராம்பாள், சீர்காழியார் இன்னும் பாலமுரளியார், டி.வி.சங்கரநாராயணன், சுசீலா, பாலசுப்பிரமணியன், மனோ, இசை ஞானியார் போன்ற இசை இமயங்களின் இசைப் பங்களிப்பு சில வரிகள் ஒலிக்குறுந்தகட்டில் பதிவுபெற்றுள்ளன. இது அவர்களுக்கான எளிய காணிக்கை.

நிறை தமிழ் இசைக்கு; குறை இருப்பின் தெரிவிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

“எவ்வகை அறிவும் தொன்மத்தை விட்டுவிட்டு
இயங்குவது இல்லை”

தங்கள் அன்பின்

முதன்மை ஆய்வாளர்
தமிழிசை ஆய்வு மையம்
தியாகராசர் கல்லூரி, மதுரை - 9.
0452 – 2640689
94429 84589
tamilinnisai@gmail.com

நா. மம்மது

குறிப்புகள்

1. அமெரிக்கர்களுக்கான கதைப்பாடலைத் தழுவியது. சார்ச்தாம்சன் - மனித சாரம் பக். 13.
2. பாரதிதாசன் - தமிழியக்கம்; கவிதை 3
3. புறநானூறு 189:3
4. அகநானூறு 102:5-6
5. சிலப்பதிகாரம் 17:(17)
6. மேலது 17:(21)
7. இந்திய இசைக் கருவூலம் பக். VI கே.ஏ. பக்கிரிசாமி பாரதி
8. மேலது பக் VIII அ
9. பதிற்றுப்பத்து 57:9
10. சிலப்பதிகாரம் 8:29 –30 அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள் (பஞ்ச பாரதீயம்)
11. தேவாரம் 7:6:8
12. சிலப்பதிகாரம் 3:26 அடியார்க்கு நல்லார் மேற்கோள்
13. திருக்குறள் 573
14. சிறுபஞ்சமூலம் 7
15. தேவாரம் - சுந்தரர். திருக்குருகாவூர்ப் பதிகம் பாடல் 6
16. சூடாமணி நிகண்டு 11:11
17. நாற்பெரும் பண்கள் : 1. முல்லை– செம்பாலை (அரிகாம்போதி), 2. குறிஞ்சி - படுமலைப் பாலை (நடபயிரவி), 3. மருதம் - கோடிப்பாலை (கரகரப்பிரியை), 4. செவ்வழி (ஈருழைப்பண்). பார்க்க தமிழிசைப் பேரகராதி பக்.323
18. ஐந்திசைப்பண்கள் - பார்க்க அட்டவணை 1
19. ஏழ்பெரும் பாலைகள் - பார்க்க அட்டவணை 2
20. 32 தாய்ப் பண்கள் - பார்க்க அட்டவணை 3
21. பிங்கலநிகண்டு நூற்பா 1375-1385. சிலப்பதிகாரம் 13:110-12 அடியார்க்கு நல்லார் உரை; பார்க்க தமிழிசைப் பேரகராதி பக்.335; பன்னிரு திருமுறை வரலாறு பக்.582 - 584. க.வெள்ளைவாரணன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1994.

22. சிலப்பதிகாரம் 3:45 உரை
23. A Dictionary of south Indian Music and Musicians – Part II (G-K) p.230; 2007 – P. Sambamoorthy.
24. பண்டித பத்கண்டே பக்.37 – எஸ்.என். ரதன் ஜங்கர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1973.
25. Indian Music P.33-B.C. Deva 1995
26. பொருநராற்றுப்படை - 63
27. தேவாரம் 6:43:10
28. சிலப்பதிகாரம் 3:70-71 உரை
29. கல்லாடம் 100:14
30. சிலப்பதிகாரம் 8:33-34
30 அ. இசை மரபு நூற்பா. கல்லாடம் 100 உரைமேற்கோள்
31. சிலப்பதிகாரம் 8:36
32. சிலப்பதிகாரம் 7:5 அரும்பத உரை மேற்கோள்
33. மேலது
34. மேலது 8:42
35. மேலது 3:93
36. கல்லாடம் 21:55
37. சிலப்பதிகாரம் 13:110
38. Encyclopaedia of Tamil Literature P.175/Vol. I Institute of Asian Studies 1990
39. பி. சாம்பமூர்த்தி முந்துநூல் பக்.231
40. தேசி : பண்களில் ஒன்று: "சாதாரி, தேசி, நாமக்கிரியை.." – திருப்புகழ்; "திறங்கிளர் கொல்லியாம் தேசி ..." – பஞ்சமரபு 73:2, மூன்றாம் சாமப்பண் எட்டில் ஒன்றாக இதைப் பஞ்சமரபு கூறும்.
41. சிலப்பதிகாரம் 7:(32:4)
42. சிலப்பதிகாரம் - கவிதையியல், பண்பாட்டியல், மொழியியல் –அரசியல்; புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம். சிலம்பு நா. செல்வராசு (ப-ர்) பக்.205 –206.

நன்றிக்குரியோர்:

திருவாளர்கள் :

1. பால் சி. பாண்டியன் - திட்டப்பணிக்கான நிதி நல்கையாளர்.
2. முனைவர் கு. ஞானசம்பந்தன் - திட்ட ஒருங்கிணைப்பாளர்
3. ஞானசம்பந்தன் என்ற பூரணகுமார், சுகா - இசைப்பதிவு ஒருங்கிணைப்பாளர்
4. திருச்சி கணேசன் - இசை நிகழ்த்து ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைமைப் பாடகர்
5. பாலாமணி ஈஸ்வர் - பாடகர்
6. தோப்பூர் சாயிராம் - பாடகர்
7. திருஞானசம்பந்த ஓதுவார் - பாடகர்
8. கமலக்கண்ணன் - பாடகர்
9. சிவப்பிரகாசம், கோவிந்தராசன் - பாடகர்
10. சாலை இலட்சணா - பாடகர்
11. சாகுல் ஹமீது (எ) இராசா முகமது - பாடகர்
12. சபியா பானு, ஆயிஷா மில்லத் - பாடகர்
13. அ.கணேஷ்ராமன் - பாடகர்
14. ஓ.எஸ்.தியாகராாசன் - பாடகர்
15. பாம்பே ஜெயஸ்ரீ, பத்மா சாமிநாதன் - பாடகர்
16. ஓதுவார் சத்குருநாதன் - பாடகர்
17. திருவாரூர் கிரிஷ் - பாடகர்
18. விஜயலட்சுமி சுப்பிரமணியன் - பாடகர்
19. சங்கரி கிருஷ்ணன் - பாடகர்
20. பல்லடம் ரவி - மத்தளம் (மிருதங்கம்)
21. சங்கர் - மத்தளம்
22. கோகுல் - மத்தளம்
23. நெய்வேலி வெங்கடேஷ் - மத்தளம்
24. டில்லி சாயிராம் - மத்தளம்
25. பி.சிவராமன் - மத்தளம்
26. டி.ஆர்.சுந்தரேசன் - மத்தளம்
27. என்.சி.பரத்வாஜ் - மத்தளம்
28. சேக்மஸ்தான் - நாகசுரம்
29. விஸ்வநாதன் - நாகசுரம்

30. அம்மையப்பன் - நாகசுரம்
31. இஞ்சிக்குடி சுப்பிரமணியம் - நாகசுரம்
32. சச்சிதானந்தன் - கின்னரம் (வயலின்)
33. ஜெகதீசன் - கின்னரம்
34. இரவி - கின்னரம்
35. இலால்குடி கிருஷ்ணன் - கின்னரம்
36. விட்டல் இராமமூர்த்தி - கின்னரம்
37. கே.ஜே.திலீப் - கின்னரம்
38. முல்லைவாசல் சந்திரமௌலி - கின்னரம்
39. மைசூர் ஶ்ரீகாந்த் - கின்னரம்
40. மீரா சுந்தர் - கின்னரம்
41. மகேஸ்வரி - யாழ் (வீணை)
42. சாலை இலட்சணா - யாழ்
43. சபியா பானு - யாழ்
44. ஐஸ்வர்யா - யாழ்
45. ஆர்.எஸ்.ஜெயலட்சுமி - யாழ்
46. கல்யாணகுமார் - புல்லாங்குழல்
47. சித்தூர் - புல்லாங்குழல்
48. சபீர் முகமது சபீர் - புல்லாங்குழல்
49. சிக்கல் மாலா சந்திரசேகர் - புல்லாங்குழல்
50. அர்ச்சுனன் - மின் ஒத்திசைப் பெட்டகம் (Key Board)
51. பாலன் - தபலா
52. கமலக் கண்ணன் - பல்லியம்
53. பாலன், ஸ்டேன்லி, கிடியோன், சிவா, சாருக்கான், சாஜகான், ஹேரிஸ் ரில்வான், வேதாந்த் - ஒலிப்பதிவாளர்
54. வசந்தி - கணினித்தட்டச்சு
55. நூல் அட்டைப்பட அமைப்பு - மணிகண்டன்
56. சு.த.குருசாமி - நூல் கட்டமைப்பு
57. தமிழிசை ஆய்வு மையம், தியாகராசர் கல்லூரி, மதுரை - 100 பண்களின் ஒலிக்குறுந்தகடு மற்றும் நூல் வெளியீட்டாளர்
58. அச்சகத்தார் - ஶ்ரீவிக்னேஷ் பிரிண்ட்ஸ்

பண்

இக்காலப் பெயர்		தமிழ்ப்பெயர்
1. அரிகாம்போதி	-	1. செம்பாலை
2. இந்தோளம்	-	2. நெய்தல்பாணி
3. கரகரப்பிரியை	-	3. கோடிப்பாலை
4. கல்யாணி	-	4. மேற்செம்பாலை
5. சங்கராபரணம்	-	5. அரும்பாலை
6. சுத்தசாவேரி	-	6. பாலைப்பாணி
7. சுத்ததன்யாசி	-	7. மருதப்பாணி
8. தோடி	-	8. விளரிப்பாலை
9. நடபயிரவி	-	9. படுமலைப்பாலை
10. மத்யமாவதி	-	10. குறிஞ்சிப்பாணி
11. மோகனம்	-	11. முல்லைப்பாணி

பண்

தமிழ்ப்பெயர்		இக்காலப் பெயர்
1. அரும்பாலை	-	1. சங்கராபரணம்
2. குறிஞ்சிப்பாணி	-	2. மத்யமாவதி
3. கோடிப்பாலை	-	3. கரகரப்பிரியை
4. செம்பாலை	-	4. அரிகாம்போதி
5. நெய்தல்பாணி	-	5. இந்தோளம்
6. படுமலைப்பாலை	-	6. நடபயிரவி
7. பாலைப்பாணி	-	7. சுத்தசாவேரி
8. மருதப்பாணி	-	8. சுத்ததன்யாசி
9. முல்லைப்பாணி	-	9. மோகனம்
10. மேற்செம்பாலை	-	10. கல்யாணி
11. விளரிப்பாலை	-	11. தோடி

பண் பட்டியல்

பண் பெயர்		பக்க எண்
1. அசாவேரி	...	1
2. அடாணா	...	2
3. அம்சத்துவனி	...	3
4. அம்சாநந்தி	...	4
5. அமிர்தவர்சனி	...	5
6. அமீர்கல்யாணி	...	6
7. அரும்பாலை (சங்கராபரணம்)	...	7
8. ஆகிரி	...	10
9. ஆந்தோளிகா	...	11
10. ஆபோகி	...	12
11. ஆரபி	...	13
12. ஆனந்தபயிரவி	...	15
13. இராமப்பிரியை	...	17
14. உசேனி	...	18
15. எதுகுலகாம்போதி	...	19
16. எமுனாக்கல்யாணி	...	20
17. ஏமவதி	...	21
18. கதன குதூகலம்	...	22
19. கம்சநாதம்	...	23
20. கமல மனோகரி	...	24
21. கமாசு	...	25
22. கர்ணரஞ்சனி	...	26
23. கருநாடக தேவகாந்தாரி	...	27
24. கல்யாண வசந்தம்	...	28

25. கன்னடம் ... 29
26. காப்பி ... 30
27. காப்பி நாராயணி ... 31
28. காம்போதி ... 32
29. காமவர்த்தினி ... 34
30. கானடா ... 35
31. கீரவாணி ... 37
32. குந்தலவராளி ... 38
33. குறிஞ்சி ... 39
34. குறிஞ்சிப்பாணி (மத்யமாவதி) ... 40
35. கேதார கௌளை ... 43
36. கேதாரம் ... 45
37. கோகிலப்பிரியை ... 46
38. கோடிப்பாலை (கரகரப்பிரியை) ... 47
39. கௌரி மனோகரி ... 53
40. கௌளி பந்து ... 54
41. கௌளை ... 55
42. சக்கரவாகம் ... 56
43. சகன் மோகினி ... 57
44. சகானா ... 58
45. சரசாங்கி ... 60
46. சரசுவதி ... 61
47. சண்முகப்பிரியை ... 62
48. சாமா ... 63
49. சாரங்கா ... 64
50. சாரமதி ... 65

51. சாருகேசி	...	66
52. சாவேரி	...	67
53. சிந்துபயிரவி	...	68
54. சிம்மேந்திரமத்திமம்	...	70
55. சுபபந்துவராளி	...	72
56. சுருட்டி	...	73
57. சுனாத வினோதினி	...	75
58. சூரிய காந்தம்	...	76
59. செம்பாலை (அரிகாம்போதி)	...	77
60. செய மனோகரி	...	84
61. செவ்வழி	...	85
62. சௌராட்டிரம்	...	89
63. தர்பார்	...	90
64. தர்பாரி கானடா	...	91
65. தர்மவதி	...	92
66. தன்யாசி	...	93
67. திலங்கு	...	94
68. தேசி (தேஷ்)	...	95
69. தேவகாந்தாரி	...	96
70. தேனுகா	...	97
71. துசாவந்தி	...	98
72. நளினகாந்தி	...	100
73. நவரசக்கானடா	...	101
74. நவரோசு	...	102
75. நாக சுராவளி	...	103
76. நாட்டக்குறிஞ்சி	...	104

77. நாட்டை ... 105
78. நாடகப்பிரியை ... 107
79. நாத நாமக்கிரியை ... 108
80. நாம நாராயணி ... 109
81. நீலமணி ... 110
82. நீலாம்பரி ... 111
83. நெய்தல்பாணி (இந்தளம்) ... 113
84. பகுதாரி ... 118
85. படுமலைப்பாலை (நடபயிரவி) ... 119
86. பவப்பிரியை ... 123
87. பாகேசுவரி ... 124
88. பாலைப்பாணி (சுத்த சாவேரி) ... 125
89. பிந்துமாலினி ... 128
90. பிருந்தாவனச்சாரங்கம் ... 129
91. பிலகரி ... 130
92. புன்னாகவராளி ... 131
93. பூபாளம் ... 133
94. பூர்விகல்யாணி ... 134
95. பேகடை ... 135
96. பேகாக் ... 136
97. மருதப்பாணி (சுத்ததன்யாசி) ... 137
98. முல்லைப்பாணி (மோகனம்) ... 140
99. மேற்செம்பாலை (கல்யாணி) ... 146
100. விளரிப்பாலை (தோடி) ... 149

1. அசாவேரி

தாய்ப்பண் : விளரிப்பாலை (தோடி)

ஏறுநிரல் : ச ரி^{1} ம^1 ப த^1 ச்

இறங்குநிரல் : ச் நி^{1} ச் ப த^1 ம^1 ப ரி^{2} க^1 ரி^{1} ச

இப்பண்ணிற்கு உரிமையான சுரம் மென்துத்தம் (ரி^{1}). இப்பண்ணில் வரும் அயல்சுரமான வன்துத்தம் (ரி^{2}) இப்பண்ணிற்கு ஓர் இசை இனிமையைத் தருகிறது.

இப்பண்ணின் இறங்குநிரலில், மென்கைக் கிளையை (க^1), கனமாக அசைத்துப் பிடித்துப் பாடுதல் வேண்டும். அவ்வாறு பாடும்போது இப்பண்ணின் தனித்த சாயல் வெளிப்பட்டு பண்ணிற்கு ஒரு பெருமிதச் சுவையை அளிக்கிறது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. எந்த நாளிலும் - ஏழன் சாய்ப்பு - வேதநாயகம்பிள்ளை
2. சரணம் சரணம் - ஆதி - அருணாசலக்கவிராயர்
3. ஐயன் திருவடி - ஆதி - பெரியசாமித்தூரன்
4. ஸ்ரீஇராமச்சந்திர - ஆதி - கோபாலகிருஷ்ண பாரதியார்



2. அடாணா

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{2} ப ம^{1} ப க^{2} ரி^{2} ச

ஏறுநிரலில் கமலா என்ற பண்ணாக வருவது அடாணா.

இப்பண்ணில் வரும் மென்கைக்கிளை (க^{1}), மென்தாரம் (நி^{1}) என்பவை இப்பண்ணிற்கு அயல் சுரங்கள். இச்சுரங்கள் இப்பண்ணிற்குத் தனித்த ஓர் இசை இனிமையைத் தருகின்றன.

பெருமிதச் சுவை தரும் பண்களுள் ஒன்று.

முந்தையக் காலங்களில், இரவு நேரங்களில், இசைக்கதை (கதாகாலட்சேபம்)ச் சொற்பொழிவு நடைபெறும்போது, தூங்குவோரை எழுப்ப பாகவதர்களால் வேகநடையான இரண்டாம் காலத்தில் இப்பண் பாடப்பட்ட மரபு உண்டு.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. கனகசபாபதிக்கு - ஆறன்தாளம் - கோபாலகிருஷ்ண பாரதியார்
2. யாரும்மைப்போல் - ஏழன்சாய்ப்பு - ஸ்ரீரங்கம் இரங்கசாமிப்பிள்ளை
3. கருணசாகரா - ஆதி - வேதநாயகம்பிள்ளை
4. இன்னமும் இரக்கம் - ஆதி - நீலகண்டசிவன்
5. அஞ்சலென்றே - ஆதி - பெரியசாமித்தூரன்
6. யாரேது செய்யினும் - ஆதி - இலக்குமணப்பிள்ளை
7. அப்பனும் - ஆதி - பாபநாசம் சிவன்
8. நீ இரங்காயெனில் - ஆதி - பாபநாசம் சிவன்
9. மாதர் மடப்பிடியும் - ஆறன்தாளம் - சம்பந்தர்

3. அம்சத்துவனி

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ப நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} ப க^2 ரி^{2} ச

இது ஓர் ஐந்து சுரப்பண். இனிமையான ஐந்து சுரப்பண்களுள் இதுவும் ஒன்று.

அரங்கிசை நிகழ்ச்சிகளில் தொடக்கத்தில் பாடப்படும் பண்களில் சிறப்பிடம் பெறும் பண். மிக எளிதாக இசைச் சூழலை ஏற்படுத்தும் பண்களுள் தலையாயது இப்பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. தாயாகி தந்தையுமாய்	- ஐந்தன்சாய்ப்பு	- இராமலிங்க அடிகள்
2. கந்தனைக்காணாமல்	- சம்பை	- பெரியசாமித்தூரன்
3. ஆனைமாமுகனே	- அடதாளம்	- கூரைநாடு நடேசபிள்ளை
4. வாதாபி கணபதிம்	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்
5. அருள்புரிவாய்	- ஆதி	- சுத்தானந்த பாரதியார்



4. அம்சாநந்தி

தாய்ப்பண் : கமனாசிரமம்

ஏறுநிரல் : ச ரி^{1} க^2 ம^2 த^2 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ம^2 க^2 ரி^{1} ச

இப்பண் ஆறு சுரங்களைக் கொண்ட பண்ணியல். இந்துத்தானியில் இப்பண் ‘சொகினி’ என்று அழைக்கப்படுகிறது.

இதன் மெல்லுழை வடிவங்கள் “வசந்தா” என்றும், “லலிதா” என்றும் கூறுகின்ற இரண்டு மரபு உண்டு.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. தொழுநீர் வடிவின் - ஏழன்சாய்ப்பு -திருமங்கை ஆழ்வார்
2. நானே உனை - ஆதி -வேதநாயகம்பிள்ளை
3. புன்னகை ஒன்றே - ஆதி - அம்புசம் கிருஷ்ணா
4. சொல்லித்தான் தெரியுமா - ஆதி - அம்புசம் கிருஷ்ணா
5. ஆரோ அவர் ஆரோ - ஆதி - பெரியசாமித்தூரன்
6. இந்தவரமருள - ஏழன்சம்பை _ பெரியசாமித்தூரன்
7. தோம்தனன - ஆதி - ஜி.என்.பி.
8. நிறைமதி - ஆதி - அருணகிரிநாதர்



5. அமிர்தவர்சனி

தாய்ப்பண் : மேற்செம்பாலை (கல்யாணி)

ஏறுநிரல் : ச க^{2} ம^{2} ப நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} ப ம^{2} க^{2} ச

இனிமையான ஐந்து சுரப்பண்களில் இதுவும் ஒன்று. நாட்டைப் பண்ணின் வல்லுழை வடிவமே இப்பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. எனை நீ மறவாதே	- ஆதி	- தண்டபாணிதேசிகர்
2. வாதை வந்தடர	- ஆறன்தாளம்	- திருமங்கை ஆழ்வார்
3. ஸ்ரீதரன் சோதரியே	- ஆறன்தாளம்	- நீலா இராமமூர்த்தி
4. தியானமே தருமே	- ஆதி	- அம்புசம் கிருஷ்ணா
5. ஆனந்தாம்ருதவர்சினி	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்
6. மாமழை போற்றுதும்	- ஆதி	- இளங்கோவடிகள்



6. அமீர்கல்யாணி

தாய்ப்பண் : மேற்செம்பாலை (கல்யாணி)

ஏறுநிரல் : ச க^2 ப ம^2 ப த^2 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் த^2 ப க^2 ம^1 க^2 ரி^{2} ச

இரண்டு வல்லுழைகளும்(ம) வரும் பண் அமீர்கல்யாணி.

அமீர்கல்யாணியில் வரும் மெல்லுழையானது(ம^1) சாரங்கா, எமுனா கல்யாணி (ஏமன் கல்யாணி) போன்று இப்பண்ணிற்கும் அயல் சுரமாகிறது. அதுவே இப்பண்ணிற்குத் தனியான இசை இனிமையைத் தருகிறது.

அமீர், அமீருகல்யாணி, அம்பீர் போன்ற பெயர்களால் அழைக்கப்படும் இப்பண், இந்துத்தானி இசையில் பெரிதும் பாடப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. சிவனை நினை - ஆதி - நீலகண்ட சிவன்
2. நீதான் எத்தனையாலும் - ஏழன்சம்பை - அருணகிரிநாதர்
3. நான் தான் உன்னை - ஆறன்தாளம் - பாபநாசம் சிவன்
4. வெங்கிடசைல - ஆதி - சியாமா சாஸ்திரி
5. மானமு லேதா - ஆதி - தியாகராசர்

7. அரும்பாலை

தாய்ப்பண் : சங்கராபரணம்

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ம^1 ப த^2 நி^{2} ச்

இறங்குநிரல்: ச் நி^{2} த^2 ப ம^1 க^2 ரி^{2} ச

இது ஒரு தாய்ப்பண். பண்டைய ஏழ்பெரும்பாலைகளுள் ஒன்று.

பாலை நிலத்திற்குரிய பெரும்பண். எனவே இதன் பெயர் பாலையாழ்; பாலை என்ற சிறப்புப் பெயரும் இதற்குண்டு.

பாலையாழ், மருவின் பாலை, பஞ்சுரம், பழம்பஞ்சுரம், பழஞ்சுரம் என்றெல்லாம் பலப்பல பெயர்களால் பண்டை நாளில் இப்பண் அழைக்கப்பட்ட பெருமை உடையது.

இடமுறைத்திரிபில் (Anticlock wise rotation) (இறங்கு நிரல் முறை) தமிழிசையின் தலைமைப்பாலை இதுவே.

"... இரட்டித்த குரல்குரலாகிய அரும்பாலை ..." - சிலப். 3:90 உரை

தமிழிசையின் (வலமுறைத்திரிபில்) தலைமைப்பாலையான செம்பாலை (அரிகாம்போதி)யின் மெல்லுழை என்ற சுரத்தைக் கொண்டு பண்பெயர்த்தால் அரும்பாலை கிடைக்கும்.

"உழை குரலாயது அரும்பாலை" - சிலப்பதிகாரம் 17:13, அடியார்க்கு நல்லார் உரை

பஞ்சுரம், பழம்பஞ்சுரம், பழஞ்சுரம் என்ற சொற்களில் வரும் 'சுரம்' என்ற சொல் பாலைநிலத்தைச் சுட்டுவது. எனவே இது பாலை நிலப்பண் என்பது உறுதியாகின்றது.

"வேங்கை கொய்யுனர் பஞ்சுரம் விளிப்பினும்" - ஐங்குறு:311 என்று ஐங்குறுநூறு என்ற ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

“பஞ்சுரமாம் பழைய திறம்” (பெரிய புராணம் - திருஞான சம்பந்தர் புராணம் - 1010) என்று சேக்கிழார் தமது பன்னிரண்டாம் நூற்றாண்டு பெரிய புராணத்தில் பதிவு செய்கின்றார். இக்காலம் சங்கராபரணம் என்று வழங்கும் பண், ஆயிரமாண்டு காலத்திற்கு மேலாகவே ‘பஞ்சுரம்’ என்று வழங்கப்பட்டு வந்த மரபை அறிய முடிகின்றது. பண் + சுரம் = பஞ்சுரம் ஆகலாம்.

இப்பண் ஓர் அனைத்துச் சுரப்பெயர்ப்புப் பண். (சர்வ சுர மூர்ச்சனைக்கார மேளம்).

பண் பெயர்ப்பில் இப்பண்ணின் துத்த சுரத்தால் கோடிப்பாலை (கரகரப்பிரியா)யும், கைக்கிளையால் விளரிப்பாலை (தோடி)யும், உழையால் மேற்செம்பாலை (கல்யாணி)யும், இளியால் செம்பாலை (அரிகாம்போதி)யும், விளரியால் படுமலைப்பாலை (நடபயிரவி)யும், தாரத்தால் செவ்வழிப்பாலையும் கிடைக்கும். இதுவலமுறைத் திரிபு.

இடமுறைத்திரிபால் (இறங்குநிரல் முறை)

1. குரல் குரலாக	- அரும்பாலை	- சங்கராபரணம்
2. தாரம் குரலாக	- கோடிப்பாலை	- கரகரப்பிரியை
3. விளரி குரலாக	- விளரிப்பாலை	- தோடி
4. இளிகுரலாக	- மேற்செம்பாலை	- கல்யாணி
5. உழை குரலாக	- செம்பாலை	- அரிகாம்போதி
6. கைக்கிளை குரலாக	- படுமலைப்பாலை	- நடபைரவி
7. துத்தம் குரலாக	- செவ்வழிப்பாலை	- இருமத்திமத்தோடி

“படுமலை, செவ்வழி... திரிந்தபின் என்றது: - கைக்கிளை குரலாகப் படுமலைப்பாலையும், துத்தம் குரலாகச் செவ்வழிப் பாலையும், குரல் குரலாக அரும்பாலையும்... சிலப்.3:84-5 உரை.

"... இளிகுரலாகிய மேற்செம்பாலையும்..., உழைகுரலாகச் செம்பாலை..., தாரம்குரலாகக் கோடிப்பாலை..., விளரிகுரலாக விளரிப்பாலை..." மேலது 3:90 உரை.

(பார்க்க பக். 61, 273, 346, 461 தமிழிசைப் பேரகராதி).

ஐரோப்பிய இசையின் (Major, C Major, Majordiotonic scale) தலைமைப் பாலை இதுவே. இந்துத்தானியின் தலைமைப்பாலையும் இதுவே (பிலாவல் தாட்).

"ஆறலைகள்வர் படை விட
அருளின் மாறுதலைப் பெயர்க்கும்
மருவின்பாலை - பொருந. 21-22

[அருளின் மாறுதல் - மருள்;
மருவின் பாலை - அரும்பாலை (சங்கராபரணம்)]

நமது நாட்டு வாழ்த்து இப்பண்ணில் இசைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள்:

1.	என்ன என் ஆனந்தம்	-ஆதி	-சத்தியநாதன்
2.	மகாலெட்சுமி	-ஏழன் சாய்ப்பு	-பாபநாசம் சிவன்
3.	உய்யும் வகை	-ஆறன்தாளம்	-வேதநாயகம்பிள்ளை
4.	ஆடிய பாதா	-ஏழன் சாய்ப்பு	-கோபாலகிருஷ்ண பாரதியார்
5.	ஆரார் ஆசைப்படார்	-ஏழன் சம்பை	-முத்துத்தாண்டவர்
6.	முத்துக்குமரய்யனே	-ஆறன்தாளம்	-இராமசாமி சிவன்
7.	சருவலோகாதிப	-ஆதி	-வேதமாணிக்கம்
8.	உற்றுமை சேர்வது	-ஆதி	-சம்பந்தர்

8. ஆகிரி

தாய்ப்பண் : வகுளாபரணம்

ஏறுநிரல் : ச ரி^{1} ச க^{2} ம^{1} ப த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ப ம^{1} க^{2} ரி^{1} ச

பாடும் போது, இப்பண்ணில் மென்கைக்கிளை (க^{1}), வன்விளரி (த^{2}), வன்தாரம் (நி^{2})என்ற மூன்று சுரங்களும் வருகின்றன. இவை இப்பண்ணிற்கு அயல் சுரங்கள்.

இந்தப்பண் 'முதல்நடை'யில் பாடும்போது மிக இனிமை தருவதாக அமைகின்றது.

மூன்று அயல்சுரங்கள் வருவதாலும், முதல்நடை என்ற மெது நடையில் இப்பண் பாடப்படுவதாலும், அனேக நுட்பமான சுரங்கள் (கமகச்சுரங்கள்) இப்பண்ணில் பாடப்படுவதாலும், கவனமாகக் கையாளப்பட வேண்டிய பண்களுள் ஒன்று ஆகிரி.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. ஏங்குவதறியானோ - ஏழன்சாய்ப்பு - அம்புசம் கிருஷ்ணா
2. தில்லை வலம்சுற்றினார் - ஆறன்தாளம் - கோபாலகிருஷ்ண பாரதியார்
3. மாயம் மயனி - ஆதி - சியாமா சாஸ்திரி
4. பரமபுருச - ஏழன்சாய்ப்பு - சுவாதித்திருநாள்



9. ஆந்தோளிகா

தாய்ப்பண் : கோடிப்பாலை

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ம^{1} ரி^{2} ச

ஏறுநிரலில் 'த'வும், இறங்குநிரலில் 'ப'வும் வராத ஒரு தனித்த ஐந்து சுரப்பண் ஆந்தோளிகா. மேல்தானச் சுரவீச்சுக்கள் இந்தப் பண்ணிற்குத் தனித்துவமான இசை அழகைத் தருகின்றன.

'மயில் குரல்' என்ற பொருளில் 'மயூரத்தொனி' என்றொரு பெயரும் ஆந்தோளிகாப் பண்ணிற்கு உண்டு.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. சேவிக்க வேண்டுமய்யா - ஆதி - முத்துத் தாண்டவர்
2. ராகசுதா ரசா - ஆதி - தியாகராசர்
3. மகிசாசுர - ஆதி - முத்தையா பாகவதர்
4. காரணமேனி - ஆறன்தாளம்- ஜி.என்.பாலசுப்ரமணியன்



10. ஆபோகி

தாய்ப்பண் : கோடிப்பாலை

ஏறுநிரல் : ச ரி^{2} க^1 ம^1 த^2 ச்

இறங்குநிரல் : ச் த^2 ம^1 க^1 ரி^{2} ச

முதல் நடையில் பாடப்படும் இனிமையான ஐந்து சுர (பாணி)ப் பண்களில் இதுவும் ஒன்று.

இரங்கற் சுவை தரும் இனிமையான பண். ஆபோகிப்பண்ணின் உழை (ம^1) சுரத்தின் மூலம் ('ச'வாக) பண் பெயர்க்க "வலசி" என்ற பண் கிடைக்கும்.

பன்னிருதான சுரங்கள்	ச	ரி^{2}	ரி^{2}	க^1	க^2	ம^1	ம^2	ப	த^1	த^2	நி^{1}	நி^{2}
ஆபோகி	ச		ரி^{2}	க^1		ம^1				த^2		
வலசி	ப		த^2	நி^{1}		ச				க^2		

வலசி – ச க^2 ப த^2 நி^{1}

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1.சேவிக்க வேண்டுமய்யா - ஆதி - முத்துத்தாண்டவர்

2.சபாபதிக்கு - ஆறன்தாளம் - கோபாலகிருஷ்ண பாரதியார்

3.மாயே மனமுவந்தருள் - அடதாளம் - மயிலாடுதுறை விசுவநாத சாஸ்திரிகள்

4.நன்னுப் ரோவ - ஆதி - தியாகராாசர்

5.ஆனைமுகனே - ஏழன்சாய்ப்பு - இராமசாமி சிவன்

6.நானறியாதெனை - ஆதி - இலக்குமணப்பிள்ளை

11. ஆரபி

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^1 ப த^2 ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ப ம^1 க^2 ரி^{2} ச

ஏறுநிரலில் பாலைப்பாணி(சுத்த சாவேரி), இறங்குநிரலில் அரும்பாலை - இவற்றின் சுரங்களைக்கொண்ட பழமையான பண்.

திருக்கோவில் இசைமரபில் ஆடலுடன் பாடலாக நிகழ்த்தப்பட்ட பஞ்சகவுத்துவத்தின் மூன்றாவது பண் ஆரபி. தியாகராசரின் கனராக பஞ்சரத்தினத்தின் மூன்றாவது பண்ணும் இதுவே.

இப்பண்ணில் வரும் கைக்கிளை (க^2) மற்றும் தாரசுரங்களை (நி^{2}) நீட்டியோ, அழுத்தமாகவோ பாடுதல் கூடாது. இவை இந்தப் பண்ணின் குறைவரவு (அல்பம்)ச்சுரங்கள். தாரசுரம் வராத சில இசை வடிவங்களும் உள்ளன. அவ்வாறு தாரசுரம் வராத சில இடங்களில் "சாமா" என்ற பண்ணின் சாயல் இதற்கு வரும் வாய்ப்புள்ளது. பாடுங்கால் இது தவிர்க்கப்படவேண்டும். (சாமா மற்றும் ஆரபியின் ஏறுநிரல் ஒன்றே; தாரசுரம் நீங்கலாக இறங்குநிரலும் இரண்டு பண்களுக்கும் ஒன்றே).

இரண்டாம் நடையிலும், தானம் பாடுகையிலும் ஆரபியின் பண் சாயல் நன்கு வெளிப்படும். பெருமிதச்சுவை கொண்ட பண்களில் ஆரபி தனியான ஓர் இடம் பெறுகின்றது.

தேவகாந்தாரிப் பண்ணிற்கும் ஆரபியின் (ஏறுநிரல் மற்றும் இறங்குநிரல்) சுரங்களே வருகின்றன. பாடும் முறையில் இரண்டு பண்களும் வேறுபடுத்திப் பாடப்பட்டு அவற்றின் தனித்தனி சாயல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. தேவகாந்தாரி முதல்காலத்தில் (சவுக்ககாலம்) பாடப்படும் பண். ஆரபி இரண்டாம் காலப்பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1.	பிறவாதவரம்	- ஆதி	- கோபாலகிருஷ்ண பாரதியார்
2.	ஒருக்கால்சிவ	- ஆதி	- மாரிமுத்தாப்பிள்ளை
3.	சுந்தரகுஞ்சித	- ஆதி	- முத்துத்தாண்டவர்
4.	அன்னமே	- ஆதி	- டைகர் வரதாச்சாரியார்
5.	ஓராறுமுகனே	- ஆதி	- நீலகண்ட சிவன்
6.	அன்பு கொண்டென்னை	- ஏழன் சாய்ப்பு	- தண்டபாணி தேசிகர்
7.	அம்பாநின்னு	- ஆதி	- தியாகராசர்
8.	ஸ்ரீ சரஸ்வதி	- ஆறன்தாளம்	- முத்துச்சாமி தீட்சிதர்



12. ஆனந்தபயிரவி

தாய்ப்பண் : படுமலைப்பாலை (நடபயிரவி)

ஏறுநிரல் : ச க^1 ரி^{2} க^1 ம^1 ப த^2 ப ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^2 ப ம^1 க^1 ரி^{1} ச

பழமையான பண்களுள் ஒன்று. தாலாட்டுப்பாடல், திருமணப் பாடல், ஊஞ்சல் பாடல், போன்ற மக்கள் இசைப்(நாட்டார் இசை, கிராமிய இசை) பாடல்கள் பல இப்பண்ணில் அமைந்துள்ளன.

இப்பண்ணில் பாடுங்காலத்து, வல்உழை (ம^2) நீங்கலாக ஏனைய பதினொரு சுரத்தானங்களும் வருகின்றன; சுரங்கள் வரிசையில் (ஏறுநிரலில்) வாராது, பிறழ்ச்சியாக வருகின்ற பண்; ஏறுநிரலில் கோடிப்பாலையின் (கரகரப்பிரியா) சுரங்களையும், இறங்குநிரலில் சக்கர வாகத்தின் சுரங்களையும் ஏற்றுவரும் பண்; பழமையான படுமலைப்பாலைப் (நடபயிரவி)யில் பிறப்பது; இவை அனைத்தும் ஒருமித்து வருவதால், இப்பண்ணிற்கு மனத்தை வருடி இதமாக்கும் தன்மை உண்டாகிறது. மனச்சுமை, மனஅழுத்தம் நீங்கி மனதை இலேசாக்கி மன அமைதியைத் தரும் பயனுள்ள, இசை அழகியல் கொண்ட தனித்துவமான பண் ஆனந்த பயிரவி.

பன்னிரு திருமுறை மரபில் 'சாளரபாணி' என்றொரு பண் குறிப்பிடப்படுகின்றது.

"ஐந்துடன் நால்வரும் உரைத்த திருக்கடைக்காப்பின் பண்... சாளரபாணி ஒன்று வேணாட்டடிகள்..." - தனிப்பாடல்

பூந்துருத்தி நம்பி காட நம்பியின் திருக்கோயில் - திருவிசைப்பா - 'முத்துவயிரமணி (9ம் திருமுறை) சாளரபாணியில் அடைவு பெற்றது. இதை ஓதுவார்மரபில் ஆனந்தபயிரவிப் பண்ணில் பாடி வருகின்றனர்.

"ஈசானதிக்கில் (சாங்காம்) சாலாபாணிப்பண்" -காமிக ஆகமம் சுலோகம் - 40

"கொண்டைக்கிரி, சீவாளி, யாமை, சாளாபாணி....." திவா.11

(சாலாபாணி - சாளாபாணி - சாளரபாணி)

சாளகபயிரவி என்றோர் பண் வழக்கில் உள்ளது. எனவே (சாளர) சாளாபாணிப் பண்ணின் பெயர் 'சாளகம்' என்று இருந்திருக்கலாம்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. அம்பா நின்னை	- ஆதி	- கோமதி சங்கரய்யர்
2. முருகையனே	- ஆறன்தாளம்	- திருக்குன்னம் சுப்பராமய்யர்
3. சாமகானப் பிரியே	- ஆதி	- பெரியசாமித்தூரன்
4. ஓஜகதம்பா	- ஆதி	- சியாமா சாஸ்திரி
5. மானச குருகுக	- ஆறன்தாளம்	- முத்துச்சாமி தீட்சிதர்
6. நாராயணாய	- ஏழன்சாய்ப்பு	- நாராயண தீர்த்தர்



13. இராமப்பிரியை

ஏறுநிரல் : ச ரி^{1} க^{2} ம^{2} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{2} க^{2} ரி^{1} ச

சக்கரவாகம் என்ற பெரும்பண்ணின் வல்லுழை (பிரதி மத்திமம்) வடிவமே இராமப்பிரியை என்ற தாய்ப்பண்.

இது ஓர் இரங்கல் சுவைப்பண். மேலும் அமைதி உணர்வைத் தரும் இயல்பும் இப்பண்ணிற்கு உண்டு. இதன் முன்னாள் பெயர் ‘இராம மனோகரி’.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. தூக்கிய பாதத்தின் - ஆறன்தாளம் - முத்துத்தாண்டவர்
2. நமக்கோர் குறையும் - ஆதி - இராமசாமி சிவன்
3. வேலனை நினைந்து - ஏழன்சம்பை - பெரியசாமித்தூரன்
4. எக்கால பிள்ளை - ஆதி - இலக்குமணப்பிள்ளை
5. எந்நாவில் சிறிதும் - ஆதி - பாபநாசம் சிவன்



14.உசேனி

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} ப நி^{1} த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச நி^{1} த^{2} ப ம^{1} க^{1} ரி^{2} ச

இந்தப்பண்ணில் மென்விளரி (த^{1}) என்ற அயல்சுரம் வருகின்றது. இது உள்ளோசைச் சுரம் (கமகச்சுரம்).

இசை நாடகம், நாட்டிய நாடகங்களில் கையாளப்படும் இனிமையான பண். மூன்று தானங்களிலும் இப்பண் பாடப்படுவதால் தனியான இசை அழகு பெறும் பண்களுள் ஒன்று.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. பக்தி பண்ணி	-ஆறன்தாளம்	-கோபாலகிருஷ்ண பாரதியார்
2. எப்படி மனம் துணிந்ததோ	-ஏழன் சாய்ப்பு	-அருணாசல கவிராயர்
3. நேத்தந்தி நேரத்திலே	-ஆறன்தாளம்	-வைத்தீஸ்வரன் கோயில் சுப்புராமய்யர்
4. நீயன்றி என்னுளம்	-ஏழன் சாய்ப்பு	-இலக்குமணப் பிள்ளை
5. ராமா நின்னே	-ஆதி	-தியாகராசர்
6. தோணி மிதக்க	-ஆதி	- பெரியசாமித் தூரன்
7. ஶ்ரீ காளகஸ்தீச	-சம்பை	-முத்துச்சாமி தீட்சிதர்

15. எதுகுலகாம்போதி

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப த^{2} ச்

இறங்குநிரல் : ச நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச

ஏறுநிரலில் பாலைப்பாணி (சுத்தசாவேரி)யையும், இறங்குநிரலில் செம்பாலை (அரிகாம்போதி)யையும் கொண்ட பண்.

இந்தப்பண்ணில் வன்தாரம் (நி^{2}) என்ற அயல் சுரம் சிற்சில இடங்களில் வருகின்றது. இது உள்ளோசைச் சுரம். முதல்காலத்தில் பாட இனிமை தரும் பண்; இரவுப்பண்; எருகுலகாம்போதி, எருக்கலகாம்போதி என்ற பெயர்களும் இப்பண்ணிற்கு உண்டு. மலைநாட்டுக் கதகளியில் 'யதுகுலகாமோதி' என்று இப்பண் பெயர் பெற்றுள்ளது.

நாட்டார் இசை வடிவங்களில் இப்பண் ஒலிக்கக் கேட்கலாம். இதுவும் இப்பண் பழமையானது என்பதற்கான அடையாளமே.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. இன்னமும் ஒரு தரம் - ஆதி - கோபாலகிருஷ்ண பாரதியார்
2. எளியேனை மறந்த - ஆதி - ஆனை அய்யா
3. காலைத்தூக்கி - ஆதி - மாரிமுத்தாப்பிள்ளை
4. ஏமாடலாடினார் - திரிபுடை - முவ்வாளுர் சபாபதி ஐயர்
5. காமாட்சி - ஏழன்சாய்ப்பு - சியாமா சாஸ்திரி
6. அடுத்தானை - திரிபுடை - அப்பர்

16. எமுனாக்கல்யாணி

தாய்ப்பண் : மேற்செம்பாலை (கல்யாணி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ம^2 ப த^2 ச்

இறங்குநிரல் : ச் த^2 ப ம^2 ப க^2 ரி^{2} ச

தமிழிசையின் ஏழ்பெரும் பாலை வரிசையில் ஏழாவதாக வரும் மேற்செம்பாலையின் திறப்பண் எமுனாக்கல்யாணி.

யமுனா, ஏமன்கல்யாண், ஏமன் கல்யாணி, எமன் கல்யாண், யமன் கல்யாண் (இந்துத்தானி) என்றெல்லாம் பெயர் பெற்ற பண்.

இப்பண் பாடுங்கால், சிற்சில இடங்களில் மென்தாரம் (நி^{1}) வந்து, இப்பண்ணிற்கு இனிமை கூட்டுகின்றது. மேலும் சில இடங்களில் மெல்லுழை (ம^1) வந்தும் இப்பண்ணிற்கு அழகூட்டுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. சரணம் சரணம் - ஆறன்தாளம் - வேதநாயகம்பிள்ளை
2. கிருஷ்ணா நீ பேகனே - ஏழன்சாய்ப்பு - உடுப்பி கனகதாசர்
3. நாராயண ஜய - ஆதி - நாராயண தீர்த்தர்
4. ஆனந்தக் கூத்தாடினார் - ஆறன்தாளம் - கோபாலகிருஷ்ண பாரதியார்
5. அரிதாசுலு - ஆதி - தியாகராசர்
6. நந்த கோபாலா - ஆதி - முத்துச்சாமி தீட்சிதர்
7. ஜகநாதனைக் காட்டிடும் - ஆதி - அம்புஜம் கிருஷ்ணா

17. ஏமவதி

ஏறுநிரல் : ச ரி^{2} க^1 ம^2 ப த^2 நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^2 ப ம^2 க^1 ரி^{2} ச

கோடிப்பாலை (கரகரப்பிரியை) யின் வல்லுழை (பிரதி மத்திமம்) வடிவம் ஏமவதி என்ற தாய்ப்பண்.

'சிம்மராவம்' என்ற பெயரும் இப்பண்ணிற்கு உண்டு. மூன்று தானங்களிலும் பாடப்படும் இனிமையான பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. சிதம்பர நாதா -ஆதி -பாபநாசம் சிவன்
2. கருணையின் அவதாரம் -ஆதி -பெரியசாமித்தூரன்
3. உன்னதமான -ஐந்தன்சாய்ப்பு -சுத்தானந்தபாரதியார்
4. சுந்தரேசா -ஆதி -இராமசாமி சிவன்
5. மனதே மறவாதே -ஆறன்தாளம் -கோடீசுவர ஐயர்
6. சிவந்தபாதத்தை -ஆதி -முத்துத்தாண்டவர்
7. நாவுக்கரசனை -ஆதி -தண்டபாணி தேசிகர்



18. கதன குதூகலம்

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} த^{2} நி^{2} க^{2} ப ச்

இறங்குநிரல் : ச நி^{2} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச

சுரங்கள் வரிசை முறையில் வாராது, மாறிமாறி வரும் பிறழ்ச்சிப் பண் (வக்கிரஇராகம்). பிறழ்ச்சியின் உச்சத்தில் அமையும் பண்களில் ஒன்று கதன குதூகலம்.

இசைக்கருவிகளில் வாசிப்பதற்கு மிக்க இனிமை தரும் பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. நாதிர்திம் தனன - ஆதி - பாலமுரளி கிருஷ்ணா
2. மோகன கிருஷ்ணா - ஆதி - ஜி.என்.பி.
3. ரகுவம்ச சுதா - ஆதி - பட்டணம் சுப்பிரமணிய ஐயர்
4. கோபால நந்தன - ஆதி - முத்தையா பாகவதர்
5. கிரிப்பிரியம் கங்காதரம் - ஆதி - முத்தையா பாகவதர்



19. கம்சநாதம்

தாய்ப்பண் : தர்மவதி

ஏறுநிரல் : ச ரி^{2} ம^2 ப நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} ப ம^2 ரி^{2} ச

"அன்ன ஒலி" என்ற பொருள் கொண்ட இனிமையான பாணி (ஐந்து சுரப்பண்) கம்சநாதம்.

"கமலா" என்ற பண்ணின் வல்லுழை (பிரதி மத்திமம்) வடிவமே கம்சநாதம்.

இப்பண்ணில் நாட்டார் மணம் கமழ்கின்றது. இதுவே இது நாட்டார் பண் (Folk Melody) என்பதற்கான ஓர் அடையாளம்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:

1. பாட வேண்டுமே	- ஆறன்தாளம்	- தண்டபாணி தேசிகர்
2. நீயே பாராமுகம்	- ஆதி	- பாபநாசம் சிவன்
3.சிவனார் மனம் குளிர	- ஐந்தன் சாய்ப்பு	- அருணகிரி நாதர்
4. பண்டுரீதி	- ஆதி	- தியாகராசர்
5. கல்யாண ராமா	- ஆதி	- ஊத்துக்காடு வேங்கடசுப்பய்யர்



20. கமல மனோகரி

தாய்ப்பண்	:	சரசாங்கி
ஏறுநிரல்	:	ச க^{2} ம^{1} ப நி^{2} ச
இறங்குநிரல்	:	ச் நி^{2} த^{1} ப ம^{1} க^{2} ச

ஏறுநிரலில் நாட்டைப்பண்ணின் சுரத்தைக் கொண்டது இப்பண். எனவே இப்பண்ணிற்கொரு பெருமிதச் சுவை ஏற்படுகின்றது.

மாயாமாளவகௌளை என்ற பண்ணின் திறம் என்று கூறுவதற்கும் பொருத்தமுடையது கமலமனோகரி; காலைப்பண்.

மூன்று தானங்களில் பாடவும், எந்நேரமும் பாடவும் ஏற்ற பண். இது அண்மைக் காலத்திய பண்ணாகத் தெரிகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:-

1. நீ முத்து மோமு	- ஆதி	- தியாகராசர்
2. சங்கரம் அபிராமி	- மூன்றன் ஒற்றை	-முத்துச்சாமி தீட்சிதர்
3. கஞ்சதளாயதாட்சி	- ஆதி	- முத்துச்சாமி தீட்சிதர்
4. நரசிம்முடு	- ஐந்தன்திரிபுடை	- மைசூர் சதாசிவ ராவ்



21. கமாசு

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ம^{1} க^{2} ம^{1} ப த^{2} நி^{1} ச

இறங்குநிரல் : ச நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச

சுரங்கள் வரிசைமுறையில் வாராது, பிறழ்ந்து வரும் பிறழ்ச்சிப்பண்; வன்தாரம் இப்பண்ணிற்கு அயல் சுரம். சிலர் இச்சுரம் வரும்படி பாடிவருவதால், இதை அயல் விரவுப் பண்ணாகவும் (பாஷாங்கம்) கொள்ளலாம்.

நாட்டார் இசையில் இப்பண் பரவலாகக் கையாளப்படுகின்றது. எனவே இது ஒரு பழமையான பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:-

1. தெருவில் வாரானோ - ஆறன் தாளம் - முத்துத் தாண்டவர்
2. பார்க்கப் பார்க்க - ஆறன் தாளம் - கோபால கிருஷ்ண பாரதியார்
3. பாதமலரே தஞ்சம் - ஆதி - பாபநாசம் சிவன்
4. முருகா தருகில்லையா - ஏழன் சாய்ப்பு - சுப்புராம தீட்சிதர்
5. இகபரம் தரும் - ஆதி - நீலகண்ட சிவன்
6. சீதாபதே - ஆதி - தியாகராசர்



22. கர்ணரஞ்சனி

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} க^{1} ப த^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{1} ரி^{2} ச

ஏறுநிரல் பிறழ்ச்சியாக, இறங்குநிரலில் கோடிப்பாலையாக வரும் பண் கர்ணரஞ்சனி.

மிக்க பெருமிதச் சுவைகொண்ட பண். அவ்வளவாக நடப்பில் இல்லாத பண். விரிவாக ஆளத்தி (ஆலாபனை) செய்வதற்கு இடம் தராத பண் என்று கூறப்படுகிறது. இருப்பினும் இனிமையுடைய பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :-

1. வஞ்சதோமுனே - திரிபுடை - முத்தையா பாகவதர்
2. ஓம் நமோ நாராயணா - திரிபுடை - அம்புசம் கிருஷ்ணா
3. தில்லானா - ஆதி - லால்குடி ஜெயராமன்

23. கருநாடக தேவகாந்தாரி

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச க^{1} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{1} ரி^{2} ச

ஏறுநிரலில் மருதப்பாணி (சுத்ததன்யாசி)யையும், இறங்குநிரலில் கோடிப்பாலையையும், கொண்டது கருநாடக தேவகாந்தாரி. ஆபேரி என்றொரு பெயரும் இப்பண்ணிற்கு உண்டு.

மென்விளரி (து^{1})யைக் கொண்டும் இப்பண் பாடப்படும் மரபு உண்டு. எனவே இப்பண் படுமலைப் பாலை (நடபயிரவி)யில் பிறந்ததாகவும் கொள்ளப்படுகின்றது. இந்த மென்விளரி சுரம் கொண்டே 'வினாபேரி' என்ற தீட்சிதரின் கிருதி பாடப்படுகின்றது.

இப்பண், இந்துஸ்தானியின் 'பீம்ப்ளாஸ்'; பண்டைய 'காந்தாரம்' என்ற பண்ணே இன்றைய கருநாடக தேவகாந்தாரி (காந்தாரம் → காந்தாரி → தேவகாந்தாரி → கருநாடக தேவகாந்தாரி.)

கேரளக் கதகளியில் இப்பண், 'காந்தாரம்' என்ற பெயரிலேயே பாடப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள்:--

1. என்னை எனக்கு - ஆறன் தாளம் - முத்துத் தாண்டவர்
2. ஏகாம்பர நாதா - ஆதி - பெரியசாமித்தூரன்
3. கந்தா வந்தருள் - ஆதி - பாபநாசம் சிவன்
4. எப்படி பாடினாரோ - ஆதி - சுத்தானந்த பாரதியார்
5. நகுமோமு - ஆதி - தியாகராசர்
6. வினா பேரி - ஆதி - முத்துசாமி தீட்சிதர்
7. நின்னுவினா - ஆறன் தாளம் - சியாமா சாஸ்திரி
8. பசரேரேமானச - ஆதி - மைசூர்வாசுதேவாச்சாரியார்

24. கல்யாண வசந்தம்

தாய்ப்பண் : கீரவாணி

ஏறுநிரல் : ச க^{1} ம^{1} த^{1} நி^{2} ச்

இறங்கு நிரல் : ச் நி^{2} த^{1} ப ம^{1} க^{1} ரி^{2} ச

இறைஇசைக்கு உகந்த பண். இன்பச் சுவைக்கும், அதே நேரம் அவலச்சுவைக்கும், இசையமைக்க ஏற்ற பண். தோழர், தோழியரிடம், காதலியிடம், இறைவனிடம் வேண்டுதல் வைக்க பொருத்தமான பண். செய்த தவறை உணர்ந்து, திருந்தி, மனமாற்றம் ஏற்பட உதவும் பண் கல்யாண வசந்தம்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :-

1. எத்தனைமொழிகளில் - ஆதி - திருச்சி தியாகராாசன்
2. ஸ்ரீ ரங்க நாதனை - சம்பை - ஜெயசாமராச உடையார்
3. ஜபத ஜபத அரி நாம - ஆதி - சுவாதித் திருநாள்
4. நின்னையே ரதி என்று-ஆறன் தாளம் - பாரதியார்
5. நாத லோலுடை - ஆறன் தாளம் - தியாகராசர்
6. கனுலுதக்கனி - ஆறன் தாளம் - தியாகராசர்
7. இன்னுதய - ஐந்தன்சாய்ப்பு - புரந்தரதாசர்



25. கன்னடம்

தாய்ப்பன் : அரும்பாலை (சங்கரா பரணம்)

ஏறுநிரல் : ச க^{2} ம^{1} ப ம^{1} த^{2} நி^{2} ச

இறங்குநிரல் : ச் நி^{2} ச் த^{2} ப ம^{1} க^{2} ம^{1} ரி^{2} ச

இது ஒரு பிறழ்ச்சிப்பண். சுரங்கள் வரிசைமுறையில் வாராது இவ்வாறு பிறழ்ந்து வருவது இப்பண்ணிற்குக் கூடுதல் இனிமை தருகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:-

1. சரவண பவ குகனே - ஆதி - பாபநாசம் சிவன்
2. இகபரம் தரும் - ஆறன்தாளம் - நீலகண்ட சிவன்
3. புகழைத் தேடி - ஆறன்தாளம் - தண்டபாணி தேசிகர்
4. இந்த தாமதம் - ஆறன்தாளம் - அம்புசம் கிருஷ்ணா



26. காப்பி

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{1} ரி^{2} ச

ஏறுநிரலில் குறிஞ்சிப்பாணி(மத்தியமாவதி)யாகவும், இறங்கு நிரலில் கோடிப்பாலை (கரகரப்பிரியை)யாகவும் வரும் பண் காப்பி. எனவே இது பழமையான பண்களில் ஒன்று.

வன்கைக்கிளை (க^{2}), மென்விளரி (து^{1}), மற்றும் வன்தாரம் (நி^{2}) ஆகிய மூன்று அயல்சுரங்கள் பண் காப்பியில் வருகின்றன. இப்பண் சிறப்பானதோர் இனிமையில் அமைவதற்கு இந்த அயல் சுரங்கள் காரணமாகின்றன.

அரங்கிசை, இறை இசை, நாட்டார் இசை, மெல்லிசை, நாடக இசை, நாட்டிய இசை என அனைத்து இசை வகைகளிலும் மிக எளிதாகக் கையாளப் பெறும் பண்களில் சிறந்ததாகக் காப்பி திகழ்கின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :--

1.	என்னதவம் செய்தனை	- ஆதி	- பாபநாசம் சிவன்
2.	வாழ்வை நம்பாதே	- ஆறன் தாளம்	-வேதநாயகம் பிள்ளை
3.	இன்னமும் என்மீது	- ஆதி	-வேதநாயகம் பிள்ளை
4.	திருநாளைப் போவார்	- ஆதி	- கோபால கிருஷ்ண பாரதியார்
5.	மீவல்ல	- ஐந்தன்சாய்ப்பு	- தியாகராசர்
6.	இந்த சௌக்ய	- ஆதி	- தியாகராசர்
7.	வெங்கடாசலபதி	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்
8.	ஜகதோ தாரணா	- ஆதி	- புரந்தரதாசர்

27. காப்பி நாராயணி

தாய்ப்பண் : செம்பாலை

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச

தமிழிசையின் தலைமைப் பாலையான செம்பாலை (அரிகாம்போதி)யில் உருவான பண். ஏறுநிரலில் கைக்கிளை (க^{2})ச்சுரம் இன்றி, இறங்குநிரலில் செம்பாலையையும் கொண்ட இப்பண் பாடக் கேட்கும் போது தென்னகத்தைச் சேர்ந்த பழமையான பண் என்பதை உணரவைக்கக் கூடியது. இரட்டை வரிசையும், தாண்டு வரிசையும் இப்பண்ணிற்குத் தனித்த ஓர் அழகைத் தருகின்றன. மூன்று தானங்களிலும் பாடப்படும் இப்பண், எந்நேரமும் பாடஏற்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:-

1. தில்லை சிதம்பரம் - ஆதி - மாரிமுத்தா பிள்ளை
2. நெஞ்சுபொறுக்குதில்லையே - ஆதி - சுப்பிரமணிய பாரதியார்
3. பரபிரமமு நீ - ஆதி - பட்டணம் சுப்பிரமணிய ஐய்யர்
4. சரச சாமதான - ஆதி - தியாகராசர்
5. ஜகதீச ப்ரோவ - ஆதி - திருவொற்றியூர் தியாகையர்



28. காம்போதி

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ம^1 ப த^2 ச்

இறங்கு நிரல் : ச் நி^{1} த^2 ப ம^1 க^2 ரி^{2} ச

ஏறுநிரலில் பூரணகாம்போதிப் பண்ணாகவும், இறங்கு நிரலில் செம்பாலையாகவும் அமைந்துள்ள, பழமையான பண் காம்போதி.

ஓதுவார் முறையில தக்கேசிப்பண், காம்போதியில் பாடப்படுகின்றது.

இப்பண்ணில் வரும் அயல்சுரமான வன்தாரம் (நி^{2}) இப்பண்ணிற்கு ஓர் இசை அழகைத் தருகின்றது.

கேரளக் கதகளியில் பண் காமோதரி என்பது இக்காம்போதியே.

இப்பண்ணின் சுரப்போக்கு (சுரசஞ்சாரம்) மேல்தானத்தில் (தாரத்தாயி) இருப்பதால், காம்போதிப்பண் பெருமிதச் சுவையையுடைய பண்ணாகத் திகழ்கின்றது.

நெடுநேர ஆளத்தி (ஆலாபணை)க்கு உரிய பண்களில் இதுவும் ஒன்று.

மிகுந்த கற்பனைக்கு இடம் தருவதால் பண் விரிவாக்கத்திற்கும், தானம் பாடுவதற்கும், எடுப்பு (பல்லவி) பாடுவதற்கும் சிறந்த பண் காம்போதி.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:-

1. குழலூதி மனமெல்லாம் - ஆதி - ஊத்துக்காடு வேங்கடசுப்பையர்
2. ஓரங்கசாயி - ஆதி - தியாகராசர்

3.	நடமாடித்திரிந்த	- ஐந்தன் சாய்ப்பு	- பாபநாசம் முதலியார்
4.	சித்தம் உயர்ந்தருள்	- ஆதி	- வேதநாயகம் பிள்ளை
5.	இவன் யாரோ	- ஆதி	- கவிகுஞ்சர பாரதி
6.	மரகதவல்லி	- ஆதி	- முத்துச்சாமி தீட்சிதர்
7.	கோலமயிலின்	- திரிபுடை	- டி.வி.இலட்சுமி நரசிம்மன்



29. காமவர்த்தினி

ஏறுநிரல் : ச ரி^{1} க^2 ம^2 ப த^1 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^1 ப ம^2 க^2 ரி^{1} ச

காமவர்த்தினி என்ற தாய்ப்பண், மாயாமாளவகௌளை என்ற தாய்ப்பண்ணின் வல்லுழை (பிரதி மத்திமம்) வடிவம்.

இப்பண்ணின் மற்றொரு பெயர் பந்துவராளி.

இரங்கல் சுவையைத் தருகின்ற பண் காமவர்த்தினி. இந்துத்தானியில் இப்பண் 'பூர்விதாட்' எனப் பெயர் பெறுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1. நீயல்லவோ - ஆதி - பாபநாசம் சிவன்
2. ஈசனே கோடி - ஏழன்சாய்ப்பு - முத்துத்தாண்டவர்
3. குஞ்சிதபாதத்தை - ஆறன்தாளம் - கோபால கிருஷ்ண பாரதியார்
4. செந்தில் வேலவனே - ஆதி - இலக்குமணபிள்ளை
5. மாலறியா நான்முகனும் - ஆதி - வச்சிரவேலு முதலியார்
6. சிவசிவ சிவயென - ஆதி - தியாகராசர்
7. விசாலாட்சி - ஏழன்சாய்ப்பு - முத்துசாமி தீட்சிதர்



30. கானடா

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} க^1 ம^1 த^2 நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} ச் த^2 ப ம^1 ப க^1 ம^1 ரி^{2} ச

ஏறுநிரலில் விளரி (த^2) சுரமும், இறங்குநிரலில் கைக்கிளை (க^1)யும் அழுத்தமாகப் பாடப்படும் பண் கானடா. இதுவே இப்பண்ணிற்கு ஓர் இசை இனிமையைத் தருகின்றது.

இப்பண்ணில் சிற்சில இடங்களில் வன்கைக்கிளை (க^2) மற்றும் வன்தாரம் (நி^{2}) ஆகிய சுரங்களின் சாயல் வருகின்றது. இவ்வாறான இடங்கள் மிக இனிமையான இடங்களாக, இப்பண் பாடும் போது அமைகின்றன.

நுட்பச் சுரங்களும் உள்ளோசை (கமகம்)யும் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பதற்கு இப்பண் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. பெருமிதச் சுவையை ஏற்படுத்தும் பண்களில் ஒன்று கானடா.

இந்துத்தானியின் 'தர்பாரி கானடா' என்ற பண், கானடாவின் சாயலை ஓரளவு ஒத்தது. பண் வரிவாக்கத்திற்கு (ஆலாபனை) ஏற்ற பண் கானடா.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1. எல்லாம் இறைவன்	- ஏழன்சாய்ப்பு	- இலக்குமணப் பிள்ளை
2. அலைபாயுதே	- ஆதி	- ஊத்துகாடு வேங்கடசுப்பையர்
3. மாதா துணை புரிவாய்	- ஆதி	- பாபநாசம் சிவன்

4.	கௌரி நாயகா	- சிம்மநந்தனம்	- மகாவைத்திய நாதய்யர்
5.	நடனசபேசா	- ஆதி	- கோபால கிருஷ்ண பாரதியார்
6.	இதயம் படைத்ததை	- ஆறன்தாளம்	- பெரியசாமித்தூரன்
7.	பராமுகம்	- ஆதி	-ஜி.என்.பாலசுப்ரமணியன்



31. கீரவாணி

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{1} நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{1} ப ம^{1} க^{1} ரி^{2} ச

இனிமைமிகுந்த மெல்லுழைப் பண்களில் ஒன்று, தாய்ப்பண்ணான கீரவாணி. கிரணாவளி என்றும் இப்பண் பெயர் பெற்றுள்ளது.

பண் ஆளத்தி (ஆலாபனை)யை நெடுநேரம் செய்வதற்கு ஏற்றபண். பெருமிதச் சுவைதரும் பண்களில் ஒன்று கீரவாணி.

ஐரோப்பிய இசையில் "Hormonic Minor" என்பது கீரவாணியே.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1.	இன்னமும் சந்தேகம்	- ஏழன்சாய்ப்பு	- கோபால கிருஷ்ண பாரதியார்
2.	வேலவா வா	- ஏழன்சம்பை	- கோடீசுவரய்யர்
3.	நீயருள் புரிய வேண்டும்	- திரிபுடை	- பாபநாசம் சிவன்
4.	உன் திருமணம்	- ஆதி	- பெரியசாமித் தூரன்
5.	குகனே குண பரனே	- நாலன்சம்பை	- அருணகிரிநாதர்
6.	உன்னைநம்பினேன் ஐயா	- ஆதி	- முத்துத் தாண்டவர்
7.	அளவிறந்ததே	- ஆதி	- இலக்குமணபிள்ளை



32. குந்தலவராளி

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ம^{1} ப த^{2} நி^{1} த^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} ச

'காலப்பண்' என்ற மரபில் மாலைநேரப்பண்களுள் ஒன்று குந்தலவராளி. இரங்கல் சுவை தரும் குந்தலவராளி.

ஏறுநிரலில் விளரி (த^{2}) மாறிவரும் பிறழ்ச்சிப்பண் (வக்ர ராகம்). இப்பண் மிகப் பழமையானது. எனவே நாட்டார் பாடல்களில் இப்பண் ஒலிக்கக் கேட்கமுடிகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1. போஹிந்திர சயனம் - ஐந்தன் சாய்ப்பு - சுவாதித்திருநாள்
2. நிதம்நிதம் உன்னையே - ஆதி - வேதநாயகம் பிள்ளை
3. மாலே மணிவண்ணா - ஆதி - ஆண்டாள்
4. உன்னைத் துதிக்க - ஆதி - பாபநாசம் சிவம்
5. சங்கடமே ஜகம் - ஆதி - இலக்குமணப் பிள்ளை
6. பரிபூர்ண பராத்பர - ஆதி - முத்தையா பாகவதர்
7. மனமே நீ - ஆதி - வேதநாயகம் பிள்ளை



33. குறிஞ்சி

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச நி^{2} ச ரி^{2} க^{2} ம^{1} ப த^{2}

இறங்குநிரல் : த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச நி^{2} ச

இப்பண் மிகப் பழமையான பண்களுள் ஒன்று. பண் எல்லை ஒரு தானத்திற்குள் அமைவதால் 'உழைஒத்து' (மத்திம சுருதி) மூலம் பாடப்பட வேண்டிய பண்.

நாட்டார் இசை நாடக வடிவங்களான குறம், குறவஞ்சியில் பண் குறிஞ்சி சிறப்பான முறையில் இனிமை ததும்பக் கையாளப்படுகின்றது.

இப்பண்ணின் வன்தார (த^{2}) சுரம் சற்று அழுத்தமாகக் கையாளப்பட வேண்டியது. இச்சுரம் குறிஞ்சிப் பண்ணிற்கு தனித்த வடிவத்தையும், இனிமையையும் தரக்கூடியது. மெது நடையில் பாடப் பட வேண்டிய பண்.

பண் நாதநாமக்கிரியை புன்னாகவராளி போன்று பண் குறிஞ்சியும் ஒருவிளரி முடிவுப் பண் (தைவதாந்திய ராகம்).

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1. எங்கும் நிறைந்திருக்கும் - ஆதி - பாபநாசம் சிவம்
2. ஒருபொழுது - ஆதி - அருணகிரிநாதர்
3. ஜய ஜய கோகுல பாலா - ஆதி - நாராயண தீர்த்தர்
4. அலிவேணி - ஏழன்சாய்ப்பு - சுவாதித் திருநாள்
5. ஸ்ரீ வேணு கோபாலா - சம்பை - முத்துச்சாமி தீட்சிதர்
6. காமேஸ்வரி ஸ்ரீ - சம்பை - முத்தையா பாகவதர்

34. குறிஞ்சிப்பாணி (மத்யமாவதி)

தாய்ப்பண் : படுமலைப்பாலை (நடபயிரவி)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} ப ம^{1} ரி^{2} ச

உலகப் பொதுவான, ஐந்துசுரப் பண்களில் ஒன்று, பண் குறிஞ்சிப்பாணி. ஐந்துசுரப்பண் ஆதலால் பாணி என்று பெயர்.

குறிஞ்சி நிலத்தின் சிறுபண். குறிஞ்சி நில எளிய மகளிரான குறத்தியரும் பாடிய பண்.

எனவே குறிஞ்சி நிலப் பெரும்பண்ணான படுமலைப்பாலை (நடபயிரவி)யில் இப்பண் பிறந்ததாகக் கொள்வதே சரியானது. ஆயினும், இக்காலம் இப்பண் கோடிப்பாலை (கரகரப்பிரியை)யின் திறப்பண்ணாகவே கொள்ளப்படுகின்றது. செம்பாலை (அரிகாம்போதி)யில் பிறந்ததாகவும் கொள்ள வாய்ப்புள்ளது.

"செந்திறம் குறிஞ்சி யாழ்த்திறம்" – சிலம்பு. 13:106 உரை

தேவாரப்பண்ணான செந்துருத்தி என்பது நமது குறிஞ்சிப்பாணியே. "செந்திறம்" என்ற அழகு தமிழ்ப் பெயரும் இப்பண்ணிற்கு உண்டு. செந்து, செந்திசை, செந்துருதி, செருந்தி, செருந்து, செந்தி, துருத்தி, செந்திருதி என்றெல்லாம் நம் இசை நெடும்பரப்பில் இப்பண் பெயர் பெற்றுள்ளது.

"செந்திறத்த தமிழோசை"– திருமங்கை.நெடுந்தாண்டகம் 4

"பறைந்த செந்நிறம்..." - சூடா. 10:33

"செந்துருத்தி அறைந்து" – பெரிய புராணம் சம்பந்த. 1129

"நைவளம்... செந்திறம்... – திவா. 1876

"செந்து இசை பாடும்"... – தேவா. 1092

"மது மாதவி" என்றோர் பெயர் இப்பண்ணிற்கு உண்டு.

"நாரத சங்கீத மகரந்தத்திலே கண்ட மதுமாதவி.... – (யாழ் நூல் பக். 266) என்பார் விபுலானந்த அடிகளார். மேலும் 'மதுமாதவி' என்ற பெயரே பின்னாளில் 'மத்யமாவதி' என திரிபடைந்ததாக அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

மாதவி என்ற கொடியைக் குறிப்பது குருக்கத்தி.

"குருகே, மாதவி, குருக்கத்தி ஆகும்".... திவா. 684

"மதுமாதவிக்குச் சங்கீரண காங் கூலக்கை" – மகாபாரத சூடாமணி. 711

"மாதவீ – 3 ஆம் நூற்றாண்டில் வழங்கி வந்த பண்" - இசைத்தமிழ் இலக்கண விளக்கம் பக். 116

'குருகத்ய' எனும் பண் - (கானவித்தியா பிரகாசினி) – மேலது மேற்கோள் பக். 100

'குருகத்ய' என்பது குருக்கத்தி ஆகலாம்.

மதுமாதவி என்ற பண் பெயரில் புரந்தரதாசர் பாடல் இயற்றியுள்ளார் - இந்திய இசைக் கருவூலம் பக். 550

எனவே குறிஞ்சிப்பாணிக்கு 'மாதவி', 'மதுமாதவி', 'குருகத்தி' என்றெல்லாம் பெயர் வழங்கியுள்ளதை அறியலாம்.

குறிஞ்சியாழ் செந்திறப் பண்ணின்.... செந்திறம் என்னும் நிறமே பிற்காலத்தில் செந்துருத்தி என வழங்கப்பட்டது. – யாழ் நூல் பக். 288

"திருமுறை கண்ட புராணத்தில் சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறைப் பண்களை நிரல் படக் கூறுமிடத்துக் குறிஞ்சிப் பண்ணின் பின் செந்துருத்தியும்.... பன்னிரு திருமுறை வரலாறு பக்கம்.534) என்று கூறப்பட்டுள்ளது.

அப்பர் சம்பந்தர் பதிகங்களில் அடைவு பெறாத இப்பண் சுந்தரர் தேவாரத்தில் அடைவு பெற்றுள்ளது. சுந்தரரின் 95 ஆம் பதிகம் (திருவாரூர்) பண் செந்துருத்தியில் அமைந்துள்ளது.

'துருத்தி உறைவீர்' (95:4/8191) என்ற பாடலிலும், 'செருந்தி செம்பொன்' (95:10/8197) என்ற பாடலிலும், 'துருத்தி' 'செருந்தி' என்று இப்பண்ணின் பெயரைச் சுந்தரர் அகச் சான்றாகக் காட்டியுள்ளார். (பார்க்க. தமிழிசைப் பேரகராதி பக்கம் 187, 246, 398)

பண் மத்தியமாவதி ஓர் அனைத்துச்சுரப் பெயர்ப்புப்பண் (சர்வ சுரமூர்ச்சனைக்கார ராகம்). இப்பண்ணின் துத்தமுதல் (ரி2) பண்பெயர்க்க முறையே நெய்தல் பாணி (இந்தளம்), பாலைப்பாணி (சுத்த சாவேரி) மருதப்பாணி (சுத்த தன்யாசி), முல்லைப்பாணி (மோகனம்) என்ற மீதி நான்கு பாணிகள் கிடைக்கின்றன.

அரங்கிசையில் ஒருசுவையின் உணர்வு தூக்கலாக அமைந்து விடலாம். அதைச் சமன் செய்ய இறுதியில் இப்பண் பாடப்படுகின்றது.

மனதைச் சமன் செய்து இலேசாக்கி மன அமைதியைத் தரும் பண்களில் தலையாயது குறிஞ்சிப் பாணி.

மிக எளிதில் இப்பண்ணின் வடிவை அடையாளம் காணமுடியும். அனைவருக்கும் பிடித்தமான பண்களில் ஒன்று குறிஞ்சிப்பாணி.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1. கற்பகமே	- ஆதி	- பாபநாசம் சிவம்
2. சிதம்பர தரிசனமா	- ஆதி	- கோபால கிருஷ்ண பாரதியார்
3. இன்னும்பிறவாமலே	- ஆதி	- முத்துத்தாண்டவர்
4. ஆரா அமுதே	- ஆதி	- டைகர் வரதாச்சாரியார்
5. ஆடாது அசங்காது	- ஆதி	- ஊத்துக்காடு வேங்கடசுப்பையர்
6. வந்தான் வந்தான்	- ஏழன்சாய்ப்பு	- அருணாசலக்கவிராயர்
7. வெங்கடேச நின்னு	- ஆதி	- தியாகராசர்
8. தர்ம சம்வர்த்தினி	- ஆறன்தாளம்	- முத்துச்சாமி தீட்சிதர்
9. பாலிஞ்சு காமாட்சி	- ஆதி	- சியாமா சாஸ்திரி
10. மீளா அடிமை	- திஸ்ரதிரிபுடை	- சுந்தரர்

35. கேதார கௌளை

தாய்ப்பண் : செம்பாலை

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச

ஓதுவார் முறையில் பண் காந்தார பஞ்சமம் என்பது கேதார கௌளையில் பாடப்படுகின்றது. கேதாரி கௌளை என்றொரு பெயரும் இப்பண்ணிற்கு உண்டு.

ஏறுநிரலில் குறிஞ்சிப்பாணி (மத்யமாவதி)யையும், இறங்குநிரலில் செம்பாலையையும் கொண்டு அமையும் பண் கேதார கௌளை. எனவே இப்பண் பழமையான பண்களுள் ஒன்று.

மேல்தான வன்துத்தம் (ரி^{2}) என்ற சுரத்தை அழுத்தியும், நீட்டியும் பிடித்துப்பாடும் பொழுது கோதார கௌளையின் பண் வடிவத்தை முழுதும் கொண்டு வரமுடியும்.

எப்பொழுதும் பாட உகந்தது இப்பண். இருப்பினும் இரவு நேரங்களில் பாடுவது சிறப்புக்குரியது.

இரங்கல் சுவையையும் பெருமித உணர்வையும் தரவல்லது இப்பண். உள்ளோசை (கமகம்) மிகச்சிறப்பாகக் கையாளப்படும் பண்களில் ஒன்று கேதார கௌளை. நெடுநேர ஆளத்தி (ஆலாபனை)க்கு ஏற்ற பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1. இன்னமும் ஒருதரம் - ஆதி - கோபால கிருஷ்ண பாரதியார்
2. அன்பு செய்தலே - ஆதி - இலக்குமணப்பிள்ளை
3. எனை ஆதரிப்பாயே - ஆதி - வேதநாயகம் பிள்ளை

4.	அந்த ராம சௌந்தரியம்	- ஆதி	- அருணாசலக்கவிராயர்
5.	லாலி லாலி ரங்கையா	- ஆதி	- புரந்தரதாசர்
6.	ஓ ஜகந்நாதா	- ஆதி	- தியாகராசர்
7.	நீலகண்டம்	- ஆறன்தாளம்	- முத்துசாமி தீட்சிதர்
8.	ஆடும் சிதம்பரேசுவரா	- ஆதி	- நீலகண்ட சிவன்
9.	ராமபரி பாலயா	- ஆதி	- சுவாதித்திருநாள்
10.	கொடுத்தால் மட்டும்	- ஆறன்தாளம்	- கவிகுஞ்சர பாரதி
11.	மங்கலலயா	- ஆதி	- நாராயண தீர்த்தர்
12.	சொற்றுணை வேதியன்	- ஆதி	- அப்பர்



36. கேதாரம்

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ம^1 க^2 ம^1 ப நி^{2} ச

இறங்குநிரல் : ச் நி^{2} ப ம^1 க^2 ரி^{2} ச

மகிழ்ச்சி மற்றும் பெருமிதச் சுவைகளைத் தரவல்ல பண் கேதாரமாகும். அரங்கிசையில் தொடக்கப் பண்ணாகப் பாடுவதற்கு ஏற்றது இப்பண்.

எப்பொழுதும் பாடுவதற்கு ஏற்றது; காலையில் பாடுவது சிறப்புக்குரியது.

இரண்டாம் காலச் சுரக்கோவைகள் இந்தப்பண்ணின் வடிவத்தை வெளிப்படுத்தும்.

முதல்காலத்தில் பாடும்பொழுது மனதை மென்மையாக வருடும் தன்மை கொண்டது இப்பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1.	ஏன் இந்த மதி	- ஆதி	- அருணாசலக்கவிராயர்
2.	சகலகலா வாணியே	- ஆதி	- சுத்தானந்த பாரதியார்
3.	சகல புவன	-ஆறன்தாளம்	- பெரியசாமித்தூரன்
4.	அஞ்சாதிரு	-ஏழன்சாய்ப்பு	- கோபாலகிருஷ்ண பாரதியார்
5.	ஜயனே உயர்மெய்யனே	- ஆதி	- வேதநாயம்பிள்ளை
6.	உன்பாதத்தை	- ஆதி	- இராமசாமி சிவன்
7.	ஆனந்தநடன பிரகாசம்	- ஏழன்ஒருமை	- முத்துச்சாமிதீட்சிதர்
8.	ராமா நீ பை	- ஆதி	- தியாகராசர்

37. கோகிலப்பிரியை

ஏறுநிரல் : ச ரி^{1} க^{1} ம^{1} ப த^{2} நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{2} ப ம^{1} க^{1} ரி^{1} ச

இன்பச் சுவையையும், இரங்கற்சுவையையும் அளிக்கக் கூடிய பெரும்பண் கோகிலப்பிரியை. தாய்ப்பண் ஆக இருப்பினும் இப்பண்ணின் சாயலை வெளிப்படுத்தி இனிமையாகப் பாடுவோர் ஒரு சிலரே. அடிக்கடி பாடப்படாத நடப்பில் அவ்வளவாகக் கையாளப்படாத தாய்ப்பண் கோகிலப்பிரியை.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :-

1. மாணிக்க வாசகர் - ஆறன்தாளம் - முத்துத்தாண்டவர்
2. கூவுகின்றேன் - ஆதி - சுத்தானந்த பாரதியார்
3. சொன்ன நாவினிக்குது - ஆதி - அம்புசம் கிருஷ்ணா
4. சுகவாழ்வடைந்துய்வாய் - ஆறன்தாளம் - கோடீசுவரய்யர்
5. எவரிதோ - ஆதி - தியாகராசர்

38. கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{1} ரி^{2} ச

தமிழ் இசை நெடும் பரப்பில் இலக்கியங்களிலும் உரை நூல்களிலும் நிகண்டுகளிலும் பெரிதும் பேசப்படும் பண் மருதம் (மருதயாழ்) என்ற கோடிப்பாலை (கரகரப்பிரியை). மருத நிலத்திற்குரிய பெரும்பண்; எனவே மருதம்(மருதயாழ்).

“மருதத்துக்கு யாழ் மருதயாழ்” - இறையனார் களவியல் உரை; பண்டைய ஏழ்பெரும் பாலைகளுள் ஒன்று: ஏழ்வரிசையில் ஐந்தாவதாக வருவது. “மருதத்திற்கு யாழ் - மருதயாழ்” – தொல் பொ. 18 நச்சர்.

பண் நான்காவன : பாலை குறிஞ்சி மருதம் செவ்வழி என்பன – சிலம்பு. 14:160-67 அடியார்க்.

“மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்”– மலைபடு. 534

“யாழோர் மருதம் பண்ண” – மதுரைக். 658

“கானவர் மருதம் பாட” – பொருந. 220

“மாலை மருதம் பண்ணி” – புறம். 149:2

மருதம் என்ற மலர்ப்பெயரையே இப்பெரும் பண்ணிற்கான பெயராக நம்முன்னோர் சூட்டியுள்ளனர்.

“மரவமும் நாகமும் திலகமும் மருதமும்”– சிலம்பு. 13:152

பின்னாளில் (கோடி) கோடிப்பாலை, (கொடி) கொடிப்பாலை என்று இப்பண் பெயர் பெறுகின்றது.

“கோடி விளரி மேற்செம்பாலை” – சிலம்பு. 3:88

"கூறியபட்டடை குரலாய் கோடிப்பாலை" – பெரிய புராணம் ஆனாய. 25

கொடி, கோடி, கொடிப்பாலை, கோடிப்பாலை எனப்பல்வேறு பெயர்கள் இப்பண்ணிற்கு.

"கூறியபட்டடை குரலாய் கோடிப்பாலையில் நிறுத்தி என்றமையின் ஆனாய நாயனார் வேய்ங்குழலில் இசைத்தது கரகரப்பிரியை ராகமாதல் பெறுதும்" – யாழ் நூல் பக்கம் 280

பட்டடை - இளி (பஞ்சம) (ப) சுரம்

செம்பாலையின் இளி சுரத்தை 'ச' வாகக் கொண்டு பண் பெயர்த்தல் (வலமுறை):

பன்னிருதான சுரங்கள்	ச	ரி^{1}	ரி^{2}	க^1	க^2	ம^1	ம^2	ப	த^1	த^2	நி^{1}	நி^{2}
செம்பாலை	ச		ரி^{2}		க^2	ம^1		ப		த^2	நி^{1}	
கோடிப்பாலை	ம^1		ப		த^2	நி^{1}		ச		ரி^{2}	க^1	

கோடிப்பாலை : ச ரி^{2} க^1 ம^1 ப த^2 நி^{1} ச் (கரகரப்பிரியை)

"பட்டடை எடுத்துப் பாலையில் கொளுவி"– கல்லாடம் 100:13

[பாலை – செம்பாலை (அரிகாம்போதி)]

"இளி குரலாக ஏழு நரம்பும் வாசித்தாள்"– சிலம்பு 8:26அரும்.

இவ்வாறு 'இளி' என்ற பஞ்சம சுரத்தால் கோடிப்பாலை கிடைப்பதால் இப்பண்ணிற்கு 'பண் பஞ்சமம்' என்ற பெயரும் உண்டு.

"பஞ்சமம் பாடி ஆடும்" – தேவா. 4:29:3

"பஞ்சமம் சிவணும் இன்னிசை" – கம்ப. யுத்த. 87

சீருற்ற அகிற்புகை யாழ் நரம்பு பஞ்சமம்..."– பாசுரம் 3651; தேவாரம் 3ஆம் திருமுறை பதிகம் 56-66, 7ஆம் திருமுறை

பதிகம் 97-100 முதலிய பதிகங்கள் பஞ்சமப்பண்ணில் அடைவு பெற்றவை.

"சொல் இரண்டாக்கி மிகு தூங்கிசை நேர் பஞ்சமத்திற்கு"

– திருமுறை கண்ட புராணம் 38

எனவே இப்பண்ணிற்கு பஞ்சமம், இளிப்பண், நேர்பஞ்சமம் என்ற பெயர்களும் வழக்கில் இருந்துள்ளன.

இடமுறைத் திரிபின் தலைமைப் பாலையான அரும்பாலையில் தார (நி^{1}) சுரத்தைக் குரலாகக் கொண்டு (இறங்குநிரல் முறை – Anti Clock wise rotation) இடமுறையில் பண் பெயர்த்தால் கோடிப்பாலை கிடைக்கும். (அதாவது ஏறுநிரலில் - வலமுறையில் அரும்பாலையின் வன் துத்தத்தை (ரி^{2})க் குரலாகக் கொண்டு பண் பெயர்ப்பதை ஒத்தது).

இடமுறைத்திரிபு - இறங்குநிரல் முறை – Anti Clock wise rotation

பன்னிரு சுரதானம்	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}	ச்
அரும்பாலை		ரி^{2}		க^{2}	ம^{1}		ப		த^{2}		நி^{2}	ச்
கோடிப்பாலை		ச		ரி^{2}	க^{1}		ம^{1}		ப		த^{2}	நி^{1}

தாரம் குரலாக ↑

(அரும்பாலை – சங்கராபரணம்; கோடிப்பாலை – கரகரப்பிரியை)

இப்பண்ணின் ரி^{2} க^{1} ம^{1} ப த^{2} நி^{1} ஆகிய சுரங்களை 'ச' வாகக் கொண்டு பண்பெயர்ப்பு (கிரகபேதம்) செய்தால் முறையே விளரிப்பாலை (தோடி), மேற்செம்பாலை (கல்யாணி), செம்பாலை (அரிகாம்போதி), படுமலைப்பாலை (நடபயிரவி), செவ்வழிப்பாலை (இருமத்திமத்தோடி), அரும்பாலை (சங்கராபரணம்) என்ற பண்கள் கிடைக்கும். எனவே கோடிப்பாலை அனைத்துச் சுரப்பெயர்ப்புப் பண் (சர்வசுரமூர்ச்சனைக்கார மேளம்).

ஐரோப்பிய இசையில் D major, 'டோரியன்' என்றும், இந்துஸ்தானி இசையில் 'கா.·.பிதாட் என்றும் இப்பண் அழைக்கப்படுகின்றது.

ச	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}
0	1	2	3	4	5	6	7	8	9	10	11

இணைமுறை (order of 5th) என்ற ஏழன்முறையில் 'க' என்ற சுரத்திலிருந்து ஏழாவது சுரமாகத் தொடுத்துச் செல்ல க^{1} நி^{1}, நி^{1} ம^{1}, ம^{1} ச, ச ப, ப ரி^{2}, ரி^{2} த^{2} என்ற சுரங்கள் வரும். இவ்வாறு ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{2} நி^{1} என்ற கோடிப்பாலை (கரகரப்பிரியை) கிடைக்கும்.

கிளைமுறை (order of 4th) என்ற ஐந்தன் முறையில் 'த^{2}' என்ற சுரத்திலிருந்து ஐந்தாவது சுரமாகத் தொடுத்துச் செல்ல த^{2} ரி^{2}, ரி^{2} ப, ப ச, ச ம^{1}, ம^{1}நி^{1}, நி^{1} க^{1} என்ற சுரங்கள் வரும்.

இவ்வாறு ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{2} நி^{1} என்ற கோடிப்பாலை (கரகரப்பிரியை) கிடைக்கும்.

தமிழ் உரை மரபில் பழைய தமிழ் இலக்கியங்களுக்கான 'பழையஉரை' யானது, பழமையான இசைநுட்பங்கள் பல கொண்டது. அவ்வாறான உரையொன்று தரும் நுட்பமான செய்தி:

"பட்டடை எடுத்துப் பாலையில் கொளுவி"– கல்லாடம் 100:13

இதற்கான பழைய உரை:

"இளி எனும் இசையைக் குரலாகக் கொண்டு தொடங்கி கோடிப்பாலை முதலிய ஏழுபண்களையும் யாழிலே தோற்றுவித்து

என்க” (இளி –‘ப’ என்ற சுரம்; இசை-சுரம்: கோடிப்பாலை – கரகரப்பிரியை)

மருதநிலத்தின் சிறுபொழுது ‘வைகறை’ என்ற விடியல்(காலை). இந்த நேரத்திற்குரிய பண் கோடிப்பாலை. இந்த நுட்பமான செய்தியை புறநானூற்றுப் புலவர் நுட்பமாக ஆவணப்படுத்தியுள்ளர்:

“மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கில் செவ்வழி பண்ணி
வரவு எமர் மறந்தனர்….. புறம். 149:2-4

மருதம் - காலையில் பாடும் பண்: செவ்வழி – மாலையில் பாடும் பண்; இது இசை வரலாற்று முறை; நள்ளியின் பரிசிலில் தம்மை மறந்து, பாணர் மாலை மருதமும் காலையில் செவ்வழியும் காலம் பாடும் இசை முறை மறந்து பாடினர். எனவே மருதப்பண் (கோடிப்பாலை) என்ற கரகரப்பிரியை காலையில் பாடும் பண் என்பது உறுதிப்படுகின்றது.

மானிட நாகரிக வரலாறே ஆற்றங்கரை நாகரிக வரலாறுதான்; வயலும் வயல் சார்ந்த இடமும் மருதநிலம். வேளாண்மைச் செழிப்பு மிக்க நிலம். நீர்வளமும் மண்வளமும் நிறைந்த நிலம் மருத நிலம். மக்களுக்கு ஓய்வு அதிகம். எனவே மருத நிலத்தில் இலக்கியங்களும் கலைகளும் செழித்து வளர்ந்ததில் வியப்பில்லை.

மருத நிலத்தில் ஆற்றங்கரையோரம், குளம், ஊருணி என நீர்நிலை தோறும் காணப்படுவது மருதமரங்கள். அம்மருத்தில் பூத்துக்குலுங்குவன மருதமலர்கள். அம்மலரால் நிலம் மருதநிலம்; திணை மருதத்திணை; நிலத்திற்கான பண்ணும் மருதப்பண்.

“மருதத்திற்கு பண் - மருதம்…..” – தொல். பொ. 20 இளம்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:-

1.	மாயவித்தை செய்கிறானே	- ஆதி	- முத்துத் தாண்டவர்
2.	இந்த வரம் தருவாய்	- ஆறன்தாளம்	- வேதநாயகம் பிள்ளை
3.	என்ன செய்தாலும்	- ஆதி	- பாபநாசம் சிவன்
4.	கண் பாரையா	- ஆதி	கோடீசுவரய்யர்
5.	அன்பே ஆரும் மறந்தாலும்	- ஆதி	- பெரியசாமித் தூரன்
6.	இந்த ஜென்மம் வேண்டும்	- ஆறன்தாளம்	- கோபாலகிருஷ்ண பாரதியார்
7.	அருமைதரும்	- ஆறன்தாளம்	- இலக்குமண பிள்ளை
8.	சக்கினி ராஜ	- ஆதி	- தியாகராசர்
9.	தயவில்லையா	- ஆதி	- பாபநாசம் சிவம்
10.	கண்ணன் மணிவர்ணன்	- ஆறன்தாளம்	- முத்தையா பாகவதர்

39. கௌரி மனோகரி

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{2} நி^{2} ச

இறங்குநிரல் : ச் நி^{2} த^{2} ப ம^{1} க^{1} ரி^{2} ச

இன்பச் சுவையையும் நகைச்சுவையையும் அளிக்கவல்ல பண் கௌரி மனோகரி.

கௌரி வேளாவளி என்றொரு பெயரும் இப்பண்ணிற்கு உண்டு.

எப்பொழுதும் பாடச் சிறந்த பண் கௌரி மனோகரி, எனினும் முன்னிரவில் பாட ஏற்ற பண்.

ஐரோப்பிய இசைமுறையில் Melodic minor scale ன் ஏறுநிரல் பண் கௌரி மனோகரியின் சுரங்களைக் கொண்டது. இந்த ஐரோப்பிய பண்ணின் இறங்குநிரல் படுமலைப்பாலை (நடபயிரவி)யின் சுரங்களைக் கொண்டது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள்:-

1. எப்போ தொலையும் - ஏழன்சாய்ப்பு - கோபால கிருஷ்ண பாரதியார்
2. உன்னை அன்றி - ஆதி - இலக்குமணப்பிள்ளை
3. கௌரி மனோகரா - ஆதி - பாபநாசம் சிவம்
4. குருலேக - ஐந்தன்சாய்ப்பு - தியாகராசர்
5. வரலட்சுமி - ஆறன்தாளம் - வாசுதேவாச்சாரியார்
6. பரம்பொருளே - ஆதி - கர்ப்பபுரி வாசகர்
7. என்று சென்று - ஆறன்தாளம் - முத்துத்தாண்டவர்
8. நாதா கருணைசெய் - ஆதி - நகரம்முத்துவீரப்பக் கவிராயர்
9. உன்நாமம் உன்பேச்சு - ஆதி - பெரியசாமித்தூரன்

40. கௌளி பந்து

தாய்ப்பண் : மாயா மாளவ கௌளை

ஏறுநிரல் : ச ரி^{1} ம^{1} ப நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{1} ப ம^{1} ப த^{1} ம^{1} க^{2} ரி^{1} ச

இப்பண்ணின் மெல்லுழை (ம^{1}) சற்று அழுத்தமாகப் பாடப்படுகின்றது. இதுபோன்று சில இடங்களில் வன்தாரமும் (நி^{2}) அழுத்தமாகப் பிடிக்கப்படுகின்றது.

இப்பண் இரங்கல் சுவை தரவல்லது.

இதற்கு முற்காலத்தில் கௌடிபந்து என்ற பெயரும் வழங்கியுள்ளது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. தருண மீதம்மா - ஆதி - சியாமா சாஸ்திரி
2. அம்பா உனை - ஏழன்சாய்ப்பு - கவிகுஞ்சரபாரதி
3. பரபிரம்ம - ஏழன்சாய்ப்பு - அருணாசலக்கவிராயர்
4. நமக்கினியமபயம் - ஆதி - கோபால கிருஷ்ண பாரதியார்
5. அனந்த பத்மநாபா - ஏழன்சாய்ப்பு - சுவாதித்திருநாள்
6. கிருஷ்ணானந்த - ஏழன்ஒற்றை - முத்துசாமி தீட்சிதர்
7. ஜகன்னாதா - ஆதி - வேதநாயகம் பிள்ளை
8. எந்த பாபி - ஏழன்சாய்ப்பு - தியாகராசர்

41. கௌளை

தாய்ப்பண் : மாயா மாளவ கௌளை

ஏறுநிரல் : ச ரி^{1} ம^{1} ப நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} ப ம^{1} ரி^{1} க^{2} ம^{1} ரி^{1} ச

கௌடை என்றொரு பெயரும் இப்பண்ணிற்கு உண்டு.

இப்பண்ணின் மென்துத்தம் (ரி^{1}) சற்றுக் குறைந்த (துடிப்பு) ஒலி அளவு கொண்டது. இதை ஓர் ஒத்துத் துத்தம் (ஏகசுருதி ரிசபம்) என்று அழைக்கின்றனர். இதுவே இப்பண்ணின் தனித்தன்மையைக் காட்டவல்லது.

திருக்கோவில் இசைமரபில் தாளம், ஆடல், பாடல் (பண்) இவற்றுடன் தெய்வங்களுக்கான கவுத்துவம் (ஆடல்) நிகழ்த்துவதல் வழக்கு. இவற்றுள் பஞ்சகவுத்துவம் ஒன்று. இப்பஞ்சகவுத்துவத்தில் பாடப்பாடும் ஐந்து பண்களில் இரண்டாவதாக வருவது கௌளைப்பண்.

தியாகராசரின் கனராக பஞ்சரத்தினக் கீர்த்தனையானது பஞ்சகவுத்துவப் பண்களிலேயே அமைந்துள்ளது. தியாகராசரின் பஞ்சரத்தினத்திலும் இரண்டாவதாக வருவது கௌளைப்பண்ணே. (பார்க்க பக். 154 & 345 தமிழிசைப்பேரகராதி)

தானம் பாடும் போதும், இரண்டாம் கால ஆளத்தி (மத்திமகால ஆலாபனை)யின் போதும் இப்பண்ணின் வடிவு நன்கு வெளிப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. பவக் கடல் தாண்டிட - ஆதி - பெரியசாமித்தூரன்
2. ஆண்டருள் வாய் - ஆதி - தண்டபாணி தேசிகர்
3. சரணாகதம் என்று - ஆதி - கோபாலகிருஷ்ணபாரதியார்
4. துடுகுகல - ஆதி - தியாகராசர்
5. ஸ்ரீ மகா கணபதி - திரிபுடை - முத்துசாமி தீட்சிதர்

42. சக்கரவாகம்

ஏறுநிரல் : ச ரி^{1} க^{2} ம^{1} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ரி^{1} ச

இது ஓர் இரங்கல் சுவைப்பண். தவறுசெய்துவிட்டு, பின்திருந்தி, செய்த தவறுக்காக மனம் உருகிப்பாட ஏற்றபண் சக்கரவாகம்.

நெஞ்சொடு கிளத்தல் (Soliloquy) என்ற மனதோடு பேசும் முறைக்கு உகந்த பண் சக்கரவாகம்.

கேட்கும்பொழுது மனதைக் கவ்விப் பிடிக்கும் தன்மை கொண்டது இப்பண்.

இந்துத்தானியில் இப்பண் ஆகிர்பைரவி (ஆகிர்பைரவ்) என்று அழைக்கப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. ஆடியபாதா - ஏழன்சாய்ப்பு - முத்துத்தாண்டவர்
2. அறிவுடையோர் - ஏழன்சம்பை - கோபால கிருஷ்ண பாரதியார்
3. ஈசனே இதை - ஆறன்தாளம் - பாபநாசம் சிவன்
4. காணக்கண் கோடி - ஆறன்தாளம் - கோடீசுவரய்யர்
5. உள்ளவறிவான்ஜயன் - ஆதி - இலக்குணமப்பிள்ளை
6. நானொரு சிறுவனை - ஆதி - பெரியசாமித்தூரன்
7. ஒருபொழுது - சம்பை - அருணகிரிநாதர்

43. சகன் மோகினி

தாய்ப்பண் : மாயா மாளவ கௌளை

ஏறுநிரல் : ச க^{2} ம^{1} ப நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} ப ம^{1} க^{2} ரி^{1} ச

இப்பண்ணின் கைக்கிளை (க^{2}) மற்றும் தார (நி^{2}) சுரங்கள் உள்ளோசை (கமகம்)யுடன் பாடப்படவேண்டும். அவ்வாறு பாடும்போது பண்ணின் சாயல் நன்கு வெளிப்படும்.

இரட்டைச் சுர வரிசை (ஜண்டைப் பிரயோகம்) மற்றும் தாண்டு வரிசைச் சுரங்கள் (தாட்டுவரிசை) இப்பண்ணிற்கு இனிமையான ஓர் அழகைத்தருகின்றன.

இது அதிகாலையில் பாடப்பட வேண்டிய பண். இந்துத்தானியில் இப்பண் இதே பெயரில் வழங்கிவருகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. சிவகாமசுந்தரி	- ஆறன்தாளம்	- கோபாலகிருஷ்ண பாரதியார்
2. கலைமகளே	- ஆதி	- பெரியசாமித்தூரன்
3. எங்கும் நிறைந்த	- ஐந்தன் சாய்ப்பு	- தண்டபாணி தேசிகர்
4. காணாமல் இருந்தால்	- ஆதி	- முத்துத்தாண்டவர்
5. ஸ்ரீ சுபதேவ	- ஆறன்தாளம்	- முத்தையாபாகவதர்



44. சகானா

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{2} ம^{1} ப ம^{1} த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ம^{1} ரி^{2} க^{2} ரி^{2} ச

சுரங்கள் தமது முறையான வரிசையில் வாராது மாறி வரும் பிறழ்ச்சிப்பண் (வக்ரராகம்) சகானா. இப் பிறழ்ச்சியே தனியானதொரு சுவையை அளிக்கின்றது.

இறைவேட்டலுக்கு, செய்ததவறுக்கு மனம் திருந்தி உருகும் நிலைக்கு, பொதுவான வேண்டுதலுக்கு ஏற்றபண்.

மிகுந்த இரங்கல் உணர்வை ஏற்படுத்தும் பண். மனதில் அமைதி நிலையை உருவாக்கும் பண்.

ஏறுநிரல் மற்றும் இறங்குநிரல்களில் அழுத்தமான சுரங்கள் வருவதால், இப்பண் ஒரு தனித்த இனிமையை உடையதாய் விளங்குகின்றது.

இசைக்கும் பொழுது மிக எளிதாகக் கண்டு கொள்வதற்குரிய பண்களில் இதுவும் ஒன்று. கற்பனைச் சுரங்களை விரிவாகப் பாட இடம்தரும் பண் சகானா.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. எண்ணியதினம் - ஐந்தன்சாய்ப்பு - அம்புசம்கிருஷ்ணா
2. சித்தமிரங்கா - ஏழன் சாய்ப்பு - பாபநாசம்சிவன்
3. ஏதும் அறியேனே - சம்பை - கோடீசுவரய்யர்
4. கண்டேன் கலி தீர்ந்தேன் - ஆறன்தாளம் - நீலகண்டசிவன்
5. சரவணபவ - ஆதி - தஞ்சை சங்கரய்யர்

6. ஓஹோ காலமே	- ஆதி	- வேதநாயகம் பிள்ளை
7. தொண்டரை	- ஆதி	- கோபாலகிருஷ்ண பாரதியார்
8. கொஞ்சம் கேளம்மா	- ஆறன்தாளம்	- நகரம் முத்துவீரப்ப கவிராயர்

45. சரசாங்கி

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ம^1 ப த^1 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^1 ப ம^1 க^2 ரி^{2} ச

அனைத்துச் சுரங்களும் உள்ளோசை (கமகம்) பெற்றுவரும் பண்களுள் ஒன்று சரசாங்கி.

மிகுந்த இரங்கல் சுவை கொண்டது. மனத்தை வருடும் பண்களுள் ஒன்று.

லதாங்கி என்ற வல்லுழைப்பண்ணின் மெல்லுழை வடிவமே சரசாங்கி.

சுரங்களின் இரட்டை வரிசையும், தாண்டு (தாட்டு) வரிசையும் இப்பண்ணிற்கு அழகுதருவன.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. மலையாதே மனமே	- ஆறன்தாளம்	- கோடீசுவரய்யர்
2. உனது திருவடி	- ஆதி	- கோபால கிருஷ்ண பாரதியார்
3. சோம சுந்தர	- ஆதி	- என்.எஸ்.ராமச்சந்திரன்
4. தியானம் செய்ய	- ஐந்தன்சாய்ப்பு	- வேதநாயகம் பிள்ளை
5. நிர்த்தமிடும்	- ஆதி	- முத்துத்தாண்டவர்
6. ஜயஜயபத்மநாபா	- ஆதி	- சுவாதித்திருநாள்
7. நீ பாதமுலே	- ஆதி	- வாசுதேவாச்சாரியார்



46. சரசுவதி

தாய்ப்பண் : வாசஸ்பதி

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{2} ப த^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{2} ரி^{2} ச

இப்பண்ணின் ஏறுநிரல் வல்லுழைப் பாலைப் பாணி (சுத்த சாவேரி) வடிவம் கொண்டது. இரவில் பாட ஏற்ற பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. சரஸ்வதி நமோஸ்துதே - ஆறன்தாளம் - ஜி.என்.பி
2. சரஸ்வதி தயை - ஆதி - பாபநாசம்சிவன்
3. உனையான் துணை - ஆதி - பெரியசாமித்தூரன்
4. ஜீவகாருண்ய வாழ்வே - ஆதி - இலக்குமணப்பிள்ளை
5. கலைமகளே - ஆதி - தண்டபாணி தேசிகர்
6. வாகீஸ்வரி - ஆதி - முத்தையா பாகவதர்
7. அனுராகமுலே - ஆறன்தாளம் - தியாகராசர்

47. சண்முகப்பிரியை

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{2} ப த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ப ம^{2} க^{1} ரி^{2} ச

ஏழ்பெரும்பாலைகளுள் ஒன்றான படுமலைப்பாலை (நடபயிரவி)யின் வல்லுழை வடிவமே சண்முகப்பிரியை. எனவே இது பழமையான பண். இனிமையான வல்லுழை (பிரதி மத்திமம்)ப் பண்களுள் ஒன்று.

விரிவான ஆளத்தி (ஆலாபனை) செய்ய ஏற்ற பண். இறை இசைக்கு உகந்தபண். மற்றும் நகைச்சுவை உணர்வுக்கும் ஏற்றபண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. சரவண பவ எனும்	- ஆதி	- பாபநாசம் சிவன்
2. சுகமே சுகம்	- ஆதி	- கோடீசுவரய்யர்
3. பவசாகரம்	- ஆதி	- கோபால கிருஷ்ண பாரதியார்
4. இன்னமும் தயவு	- ஆதி	- என்.எஸ்.இராமச்சந்திரன்
5. இத்தனை நாள்	- ஆதி	- பெரியசாமித்தூரன்
6. சித்திவிநாயகம்	- ஆறன்தாளம்	- முத்துசாமிதீட்சிதர்
7. அருட்பெருவள்ளலே	- ஆதி	- இலக்குமணப்பிள்ளை
8. ஓசை ஒலி எலாம்	- ஏழன்சம்பை	- தண்டபாணிதேசிகர்
9. விளையாட	- ஆதி	- பாபநாசம் சிவன்



48. சாமா

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^1 ப த^2 ச்

இறங்குநிரல் : ச் த^2 ப ம^1 க^2 ரி^{2} ச

ஏறுநிரலில் பாலைப்பாணி (சுத்தசாவேரி) யையும், இறங்கு நிரலில் பூரணகாம்போதியையும் கொண்டபண் சாமா. எனவே இது பழமையான பண்களுள் ஒன்று.

இரங்கல் சுவைப் பண். அமைதி உணர்வைத் தோற்றுவிக்கும் பண்.

முதல் நடையில் பாட ஏற்ற பண். மாலையிலும், இரவிலும் பாட உகந்த பண். எப்போதும் பாட ஏற்றது; இனிமை தரவல்லது.

ஓதுவார் முறையில் பண் அந்தாளிக்குறிஞ்சி. இந்துத்தானியில் பண் கௌடமல்கார்.

'நெஞ்சொடு கிளத்தல்' (soliloquy) என்ற தன் மனத்துடன் பேசும் நாடகப்பாணிப்பண் சாமா.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. மானச சஞ்சரரே	- ஆதி	- சதாசிவபிரம்மேந்திரர்
2. கருணாகர	- ஆறன்தாளம்	- வீணைகுப்பய்யர்
3. மனமே உனக்கொரு	- ஏழன் சாய்ப்பு	- நீலகண்ட சிவன்
4. தில்லை தலமென்று	- ஏழன் சாய்ப்பு	- கோபால கிருஷ்ண பாரதியார்
5. ஆண்டவனே	- ஆதி	- பாபநாசம்சிவன்
6. சாந்தமுலேக	- ஆதி	- தியாகராசர்
7. சந்ததமுன்	- ஆறன்தாளம்	- முத்துத்தாண்டவர்
8. முருகனடி சேர்ந்த	- ஆதி	- பெரியசாமித்தூரன்
9. பொருளே பெருகிட	- ஆதி	- இலக்குமணப்பிள்ளை
10. அன்னபூர்ணே	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்

49. சாரங்கா

தாய்ப்பண் : **மேற்செம்பாலை (கல்யாணி)**

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ம^2 ப த^2 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ப ம^2 ரி^{2} க^2 ம^1 ரி^{2} ச

வல்லுழை (சுத்த மத்திமம்)ப் பண்களுள் இனிமையான பண் சாரங்கா.

இரண்டு உழைகளும் (மத்திமங்கள்) வரும் பண். மெல்லுழை இதற்கு அயல் சுரம். இசைக்கும் பொழுது இந்த அயல் வரவு ஓர் இனிமையைத் தருகின்றது.

நண்பகல் பண், முற்பகலிலும் பாட ஏற்றது. மனதில் ஈர்ப்பை ஏற்படுத்தும் பண் சாரங்கா.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. இனி என்ன பயம்	- ஆதி	- அம்புசம் கிருஷ்ணா
2. எந்தபாக்யமு	- ஆதி	- தியாகராசர்
3. தில்லைச்சிதம்பரம்	- ஏழன்சாய்ப்பு	- கோபால கிருஷ்ண பாரதியார்
4. சொன்னேன் இது	- ஆறன்தாளம்	- கவிகுஞ்சரபாரதி
5. அருட்சோதி தெய்வம்	- ஐந்தன்சாய்ப்பு	-இராமலிங்கஅடிகள்
6. ஏதோ தெரியவில்லையே	- ஆறன்தாளம்	- பொன்னையா பிள்ளை
7. கணநாதனே	- ஆதி	- பெரியசாமித்தூரன்
8. காத்தருள்வாயே	- ஆதி	- டைகர் வரதாச்சாரியார்

50. சாரமதி

தாய்ப்பண் : படுமலைப்பாலை (நடபயிரவி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ம^{1} க^{1} ச

இறை இசைக்கு ஏற்ற பண். இரங்கல் சுவை தரும் பண். இரவில் பாடுவதற்கு ஏற்ற பண்.

நி, த, ம, க என்ற சுரங்கள் உள்ளோசையுடன் இசைக்கப்படவேண்டியவை.

மூன்று தானங்களிலும் பாட உகந்த பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. அருளவேண்டும் தாயே - ஆறன்தாளம் - தண்டபாணிதேசிகர்
2. குருவாயூர் அப்பா - ஆறன்தாளம் - இலக்குமணபிள்ளை
3. கந்த நாதா - ஆறன்தாளம் - முத்துசாமிக்கவிராயர்
4. உன்னத வேங்கடா - ஆதி - துளசீவனம்
5. மோக் சமுகலதா - ஆதி - தியாகராசர்

51. சாருகேசி

ஏறுநிரல் : ச ரி^{2} க^{2} ம^{1} ப த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ப ம^{1} க^{2} ரி^{2} ச

மிக இனிமையான பெரும்பண்களில் சாருகேசியும் ஒன்று. பெருமிதச்சுவை தரும் பண்.

எப்பொழுதும் பாட ஏற்ற பண். மனதை ஈர்க்கும் ஆற்றல் கொண்டது. இசை அழகியல் நிறைந்த பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. நீ எனக்குத்தந்தை - ஏழன்சாய்ப்பு - இலக்குமனப்பிள்ளை
2. வழிகாட்டும் - ஏழன்சம்பை - பெரியசாமித்தூரன்
3. நீதான் அப்பா - ஆதி - கோடீசுவரய்யர்
4. ஆடிய வேடிக்கை - ஏழன்சம்பை - முத்துத்தாண்டவர்
5. பூலோக கைலாசம் - ஏழன்சாய்ப்பு - கந்தசாமிப் புலவர்
6. சக்தி எனக்குள் - ஆதி - இலக்குமனப்பிள்ளை
7. ஆடமோடிகல - ஆதி - தியாகராசர்
8. கிருபையா பாலையா - திரிபுடை - சுவாதிதிருநாள்



52. சாவேரி

தாய்ப்பண் : மாயா மாளவ கௌளை

ஏறுநிரல் : ச ரி^{1} ம^1 ப த^1 ச்

இறங்குநிரல்: ச் நி^{2} த^1 ப ம^1 க^2 ரி^{1} ச

ஏறுநிரலில் மலகரிப்பண், இறங்குநிரலில் மாயா மாளவ கௌளை என வரும் பண். இது ஒரு பழமையான பண்.

இரங்கல் சுவைப்பண். இரவில் பாட ஏற்றது. சிலர் காலையில் பாடக்கூடிய பண் என்றும் கருத்துக் கூறுகின்றனர்.

அரங்குகளில் பாடப்படும் திறப்பண்களில் (ஜன்யராகம்) ஒன்று சாவேரி. இரட்டைச் சுர வரிசைகள் இப்பண்ணிற்கோர் இனிமையைத் தருகின்றன.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. ஏதுக்கு வருந்துகிறாய்	-ஆதி	-அருணாசலக் கவிராயர்
2. சீதாராமஸ்வாமி	-ஏழன்சாய்ப்பு	-பத்ராசலராமதாசர்
3. மற்றதெல்லாம்	-ஆறன்தாளம்	-கோபால கிருஷ்ண பாரதியார்
4. தாயே இது தருணம்	-ஏழன்சாய்ப்பு	-கவிகுஞ்சரபாரதி
5. காத்தருள்வாய்	-ஆதி	-இலக்குமண பிள்ளை
6. கல்லாத வேளையல்லவோ	-தேசாதி	-பாபநாசம்சிவன்
7. எத்தனை சொன்னாலும்	-ஆதி	-சுப்பராயர்
8. மானே மோகம் சகியேனே	-ஆதி	-கோடீசுவரய்யர்
9. நானே முழுதும்	-ஆறன்தாளம்	-முத்துத்தாண்டவர்
10. முருகா முருகா	-ஏழன்சாய்ப்பு	-பெரியசாமித்தூரன்

53. சிந்துபயிரவி

தாய்ப்பண் : விளரிப்பாலை (தோடி)

ஏறுநிரல் : ச ரி^{1} க^{1} ம^{1} த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ப ம^{1} க^{1} ரி^{1} ச

கீழ்த்தானத்திலும், நடுத்தானத்திலும் பாடப்படும் ஆளத்தி (ஆலாபனை) இப்பண்ணிற்குத் தனித்துவமான இனிமையைத் தருகின்றது.

மெல்லிசை, அரங்கிசை, இறைஇசை, நாட்டார் இசை என எல்லாவித இசைகளுக்கும் ஏற்றபண்.

ஆளத்தியின் போதும், பாடல்பாடும் போதும் வன்கைக்கிளை (க^{2}) தவிர ஏனைய அனைத்துச் சுரங்களும் இப்பண்ணில் வருகின்றன. இப்பண்ணிற்கே உரித்தான இந்தமுறை சிந்து பயிரவிக்கு மேலும் இனிமை சேர்க்கின்றது. டி.ஏ.சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார், வன்கைக்கிளை (க^{2})ச்சுரத்துடனும் பன்னிருதான சுரங்களில் இப்பண்ணை இனிமைப்படுத்திப் பாடியுள்ளார். இந்துத்தானியில் இதுபோன்று ‘பசந்த் பகார்’ என்ற பண் பாடப்படுகின்றது.

“The same system permits the use of all twelve tones in the raga Basant - Bahar” – B.C. Deva in ‘Indian Music’P.11.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. கண்ணன் குழலோசை - ஆதி - பெரியசாமிதூரன்
2. மாவூர் வளம் பெருக - ஆதி - முத்தையா பாகவதர்
3. தீராத விளையாட்டுப்பிள்ளை - ஆதி - சுப்பிரமணிய பாரதியார்

4. தலைவாரிப் பூச்சூடி	- ஆதி	- பாரதிதாசன்
5. விஸ்வேஸ் வரா	- ஆதி	- சுவாதித்திருநாள்
6. வெங்கடாசல நிலயம்	- ஆதி	- புரந்தரதாசர்
7. ஜயஜய ஸ்ரீ கிரி	- ஆதி	- இலலிததாசர்
8. தேவ தேவம்	- ஏழன்சாய்ப்பு-நாராயண தீர்த்தர்	
9. கருணை தெய்வமே	- ஆதி	- மதுரை T.N .ஸ்ரீநிவாசன் பிள்ளை
10. தில்லானா	- ஆதி	- லால்குடி ஜெயராமன்
11. நெஞ்சுக்குநீதியும்	- ஆதி	- சுப்ரமணிய பாரதியார்
12. அமுதம்ஊறு	- ஆதி	- அருணகிரிநாதர்



54. சிம்மேந்திரமத்திமம்

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{2} ப த^{1} நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{1} ப ம^{2} க^{1} ரி^{2} ச

மேலைஇசையில் இப்பண் காணப்படுகின்றது. நாட்டார் பாடல்களில் இப்பண் ஒலிக்கக் கேட்கலாம். எனவே இது பழமையான பண்களில் ஒன்று என்பது உறுதிப்படுகின்றது.

விரிவான ஆளத்தி (ஆலாபனை)க்கு இடம் தரும் பண்.

முற்பகலில் பாட ஏற்ற பண். வீரச்சுவையும், இரங்கல்சுவையும் கொண்ட பண்.

இனிமையான வல்லுழை (பிரதிமத்திமம்)ப் பண்களில் இதுவும் ஒன்று.

அனைத்துச் சுரங்களும் உள்ளோசை (கமகம்) பெற்றுவரும், அனைத்துச் சுர உள்ளோசைப் பண் (சர்வ சுர கமகராகம்).

பல சேய்ப்பண்களுக்கு (திறப்பண் - ஜன்யராகம்) பிறப்புத்தரும் தாய்ப்பண் சிம்மேந்திர மத்திமம்.

இப்பண்ணின் மெல்லுழை (சுத்தமத்திமம்) வடிவமே கீரவாணிப்பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. அசைந்தாடும் மயில் - ஆதி - ஊத்துக்காடு வேங்கடசுப்பையர்
2. உன்னையல்லால் - ஆதி - கோடீசுவரய்யர்
3. இகபரம் - ஆதி - பாபநாசம் சிவன்
4. சிம்மேந்திரன் போல - ஆறன்தாளம் - சுத்தானந்த பாரதி

5. இன்னம் ஒருதலம்	- ஆறன்தாளம்	- முத்துத்தாண்டவர்
6. ஏனோ அவர்க்கு	- சம்பை	- பெரியசாமித்தூரன்
7. இரவுபகல்	- மூன்றன்சம்பை	- அருணகிரிநாதர்
8. அறிவிற்கலந்த	- ஆதி	- இலக்குமணபிள்ளை
9. நீது சரணமுலே	- ஆதி	- தியாகராசர்
10. காமாட்சி	- ஆறன்தாளம்	- முத்துசாமிதீட்சிதர்
11. ராமராமகுண	- ஆதி	- சுவாதித்திருநாள்



55. சுபபந்துவராளி

ஏறுநிரல் : ச ரி^{1} க^1 ம^2 ப த^1 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^1 ப ம^2 க^1 ரி^{1} ச

இரங்கல் சுவையைப் பெரிதும் தரும் (தாய்ப்) பண்களில் ஒன்று.

இந்துத்தானியில் ‘தோடி தாட்’; ‘தேனுகா’ என்ற தாய்ப்பண்ணின் வல்லுழை (பிரதிமத்திமம்) வடிவமே சுபபந்துவராளி

சிவபந்துவராளி என்ற பழைய பெயரும் இதற்கு உண்டு.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. வேலனை வேரேகதி - ஏழன்சாய்ப்பு - கோடீசுவரய்யர்
2. முருகன் வந்தனை - ஆதி - பெரியசாமித்தூரன்
3. இசையின் எல்லையை - ஆதி - தண்டபாணிதேசிகர்
4. வாவாராகவா - ஆதி - நகரம் முத்துசாமிக் கவிராயர்
5. சிந்தைக்கனவில் - ஆதி - சுத்தானந்த பாரதியார்
6. மார்க்கம் காட்டி - ஆதி - அம்புசம் கிருஷ்ணா
7. கலந்து கொள்வேன் - ஏழன்சாய்ப்பு - முத்துத்தாண்டவர்
8. என்னாளுயோரகே - ஏழன்சாய்ப்பு - தியாகராசர்
9. ஸ்ரீ சத்ய நாராயணம் - ஆறன்தாளம் - முத்துசாமி தீட்சிதர்

56. சுருட்டி

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ப ம^{1} ரி^{2} ச

ஏறுநிரலில் குறிஞ்சிப்பாணி (மத்யமாவதி)யையும், இறங்குநிரலில் செம்பாலை என்ற தாய்ப்பண்ணை பிறழ்ச்சியாகவும் கொண்ட பண் சுருட்டி. எனவே இது பழமையான பண்.

மூன்று தானங்களிலும் பாடப்படும் பண். எனினும் கீழ்த்தான தார(நி̣^{1}) சுரத்திற்குக் கீழ் இப்பண் பாடப்படுவதில்லை.

குறிஞ்சிப்பாணி இசை நிகழ்ச்சிகளின் இறுதியில் பாடப்படுவது மரபு. சுருட்டிப்பண்ணானது, ஏறுநிரலில் குறிஞ்சிப்பாணியைக் கொண்டுள்ளதால், சுருட்டியும் இசை நிகழ்ச்சிகளின் இறுதியில் பாடப்படும் தன்மை கொண்டது. 'ஆதி நாட்டை அந்தம் சுருட்டி' என்பது சொல் வழக்கு.

மங்களகரமான வாழ்த்துப் பாடுவதற்கு ஏற்ற, இனிய பண் சுருட்டி.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. சிவபெருமான் கிருபை - ஆதி - பாபநாசம் சிவன்
2. காணவேணும் - ஏழன்சாய்ப்பு - அருணாசலக் கவிராயர்
3. எத்தனைநாள் விரகமுடன் - ஆதி - கனம் கிருஷ்ணய்யர்
4. அம்பரசிதம்பர - சம்பை - முத்துத்தாண்டவர்

5.	வாராமலிருப்பாரோ	- ஆதி	- கோபால கிருஷ்ண பாரதியார்
6.	போனது போகட்டும்	- திரிபுடை	- வேதநாயகம் பிள்ளை
7.	இப்படி என்மனம்	- ஏழன்சாய்ப்பு	- மாம்பழக்கவிராயர்
8.	சரவணபவ	- ஏழன்சாய்ப்பு	- கவிகுஞ்சரபாரதி
9.	பூவுலகதிப	- ஐம்மை ஆறன்தாளம்	- பொன்னையாபிள்ளை

57. சுனாத விநோதினி

தாய்ப்பண் : மேற்செம்பாலை (கல்யாணி)

ஏறுநிரல் : ச க^2 ம^2 த^2 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ம^2 க^2 ச

நெய்தல் பாணி (இந்தளம்) யைப் போன்ற வடிவில் ஏறுநிரல், இறங்குநிரல் கொண்ட இனிமையான பண்.

அம்சத்வனி மற்றும் அமிரதவர்சனியைப் போன்ற பண்சாயல் கொண்டது சுனாத விநோதினி.

வடநாட்டு இந்தோளம் என்று கூறப்படுவது இப்பண்ணே.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. முத்தமிழ் முன்னவனே - ஆதி - இராமநாதன் செட்டியார்
2. தேவா உன்னையே - ஏழன்சாய்ப்பு-முத்துசாமிக்கவிராயர்
3. தேவாதி தேவா - ஆதி - வாசுதேவாச்சாரியார்
4. சாமகானசுனாதவிநோதினி - ஆதி - குருராக்சர்யா
5. பரிபூரணமாய் - ஆதி - என்.எஸ்.சிதம்பரம்
6. முத்தமிழ் - ஆதி - ராமநாதன் செட்டியார்



58. சூரிய காந்தம்

ஏறுநிரல் : ச ரி^{1} க^{2} ம^{1} ப த^{2} நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{2} ப ம^{1} க^{2} ரி^{1} ச

அனைத்துச் சுரங்களும் உயிர்ச்சுரங்கள் (ஜீவசுரம்) என வரும் தாய்ப்பபண்களுள் சூரியகாந்தமும் ஒன்று.

மிகப் பழமையான செளராட்டிரம் (ஓதுவார் முறையில் பண் வியாழக்குறிஞ்சி) மற்றும் வசந்தா போன்ற சேய்ப்பண்களை உருவாக்கும் பண் சூரியகாந்தம்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. கனவோ நினைவோ - ஏழன்சாய்ப்பு - கோபால கிருஷ்ண பாரதியார்
2. பேசாதே நெஞ்சமே - ஏழன்சம்பை - முத்துத்தாண்டவர்
3. கஞ்சம் கொஞ்சும் - ஆறன்தாளம் - முத்தையா பாகவதர்
4. முத்து மோமு - ஆதி - தியாகராசர்
5. ஸ்ரீ சாம்ப சிவாய - ஆறன்தாளம் - முத்தையாபாகவதர்
6. பரத் பரா கங்காதரா - ஆதி - வேங்கிடகிரியப்பா



59. செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{2} ம^{1} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச

தமிழ் இசையின் தலைமைப் பாலையாவது செம்பாலை என்ற அரிகாம்போதி.

'தலையின தாரம் செய்யும் தாரம்' என்ற நூற்பாவை அரும்பத உரைகாரர் சிலப்பதிகார (8:25) அடி ஒன்றுக்கு மேற்கோளாகத் தருகிறார்.

'தலையினதாரம்' என்பது செம்பாலை (அரிகாம்போதி) யின் தாரசுரத்தைக் (நி^{1}) குறிக்கும். இச்சுரத்தைக் கொண்டு பண் பெயர்க்க மேற்செம்பாலை என்ற தாரப்பண் (கல்யாணி) கிடைக்கும். எனவே 'தலையின' என்று தமிழ்இசையின் தலைமைப்பாலை குறிப்பிடப்படுகின்றது.

செம்பாலை என்பது ஒருவகைப் பாலைமரம்.

(பார்க்க டி.வி. சாம்பசிவம்பிள்ளை அகராதி பக்.1514/I)

"மாயவன் என்றாள் குரலை" என்றும் "மாயவன் சீருளார் பிஞ்ஞையும் தாரமும்" என்றும் தொடங்கும் இரண்டு பாடல்களில் (சிலம்பு. 17 : (14), (15), செம்பாலையின் (அரிகாம்போதி) சுரங்களை இளங்கோஅடிகள் அமைத்துக் காட்டுகிறார். (பார்க்க தமிழிசைப் பேரகராதி பக்.474).

"குரல் துலை", "இளிஇடபம்", "துலை நிலைக் குரலும்" என்ற மூன்று நூற்பாக்களை மேற்கோளாகக் காட்டி மேற்கண்ட சிலப்பதிகாரச் செய்திக்கு உரையாசிரியர்கள் அரண் செய்துள்ளனர்.

"குரல்துலை, வில்துத்தம்….." என்ற மேற்கோள் நூற்பாவின் இறுதி அடி "தொல் ஏழிசை நரம்பிற்காம்" என்று முடிகின்றது.

இதிலிருந்து அதாவது தொல் ஏழிசை என்பதால், செம்பாலை (அரிகாம்போதி) என்ற பண்ணின் தொன்மையை நாம் அறிய முடிகின்றது.

தமிழிசையின் தலைமைப் பாலையானதால் 'பாலையாழ்' என்ற சிறப்புப்பெயர் இதற்கு உண்டு.

"தாரத்து உழைதோன்றப் பாலையாழ்" – பஞ்ச.22

"தாரத்துள் தோன்றும் உழை" – பஞ்ச .17

நி^{1} ம^{1}, ம^{1} ச, ச, ப, ப ரி^{2}, ரி^{2} த^{2}, த^{2} க^{2}, என ஏழன்முறை என்ற இணைமுறையில் (பஞ்சமபாவம்) சுரம் தொடுத்தால் வருவது செம்பாலை. இதையே மேற்கண்ட பஞ்சமரபுப் பாடல்கள் தெரிவிக்கின்றன. செம்பாலை (அரிகாம்போதி) – ச ரி^{2} க^{2} ம^{1} ப த^{2} நி^{1}

தொன்மை வாய்ந்த தமிழ்க்குலத்தின் முதல் பாலை செம்பாலை.

"…….. இதுகுலமுதல் பாலைத்திரி வெனக் கொள்க"

- சிலப். 13:109 – அடியார்க்.

இசை மற்றும் ஆடல் நிகழ்ச்சிகளில் முதன்முதலில் இப்பண் பாடப்பட்ட மரபு கொண்டது. சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில் மாதவி இப்பண் பாடியே தம் ஆடலைத் தொடங்குகிறாள். இதை இளங்கோவடிகள் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்:

"பாற்பட நின்ற பாலைப் பண்மேல்" – சிலப். 3:149

மங்கலமான தொடக்கம் கொள்வதால் இப்பண்ணிற்கு 'மங்கலப்பண்' என்றொரு பெயரும் ஏற்பட்டது.

"…….. மங்கலப் பண்ணாய் நரப்படைவும் உடைத்தாய் இருக்கிற பாலைப்பண்ணை…………" மேலது உரை

தமிழ்இசையின் தலைமைப்பாலையான 'பாலையாழ்' என்ற செம்பாலை (அரிகாம்போதி) பற்றித் தமிழ் இலக்கியங்களில்

நெடுகவே செய்திகள் பதிவு பெற்றுள்ளன. பெரும்பாணாற்றுப்படை என்ற சங்கநூல் இனிமை நிறைந்த பாலைப்பண் என்று செம்பாலையைக் குறிப்பிடுகின்றது.

"செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின்

இன்தீம்பாலை.........." – பெரும்பாண். 179-180

"இடனுடைப் பேரியாழ் பாலை பண்ணி" – பதிற். 66:2

"பாலையாழ்ப் பாண் மகனே" – திணைமாலை 133:1

"ஒருதிறம் பாடினி முரலும் பாலை அம்குரலின்" – பரிபா.17:17

"பாலையாழ்பழித்த" – கம்ப.சூர்ப்பன.சூழ்ச்.95

"பாலையாழ்ப் பாட்டுகந்தான்" - தேவா.1:108:10

"பண்ணின் இன்மொழி யாழ் நரம்பில் பெற்ற பாலையாகி" – பாசுரம் 7:3:7

"பண்வர்க்கத்திலே இனிய பேச்சையுடைய யாழ் நரம்பிலே, யாழிலே பிறக்கப்பட்ட பாலையாகிய பண்ணாம்" – பெரியவாச்சான்பிள்ளை

X-X-X-X

முல்லைநிலத்திற்கான பெரும்பண் (ஏழுசுரப்பண்) இதுவே. எனவே முல்லை மற்றும் முல்லையாழ் என்ற பெயர்கள் தொன்மைக் காலத்தில் வழங்கியுள்ளன.

"........முல்லைக்கு யாழ், முல்லையாழ் ......" – தொல்.அகத்.18.நச்சர். உரை

X-X-X-X

காலம்தோறும் இப்பண் பற்பல பெயர்களைப் பெற்று வந்திருக்கின்றது.

முல்லை, முல்லையாழ், முல்லைப்பண், பாலை, பாலையாழ், செம்பாலை, குலமுதல் பாலை, மங்கலப்பண், தொல் ஏழிசை, குரல், குரல்பாலை, குலமுதல் பாலை, குரல்பண், குழல்பண், தாண்டகப்பண், அரிகாம்போதி என்றெல்லாம் பெயர் பெற்ற பண் இது.

அப்பரின் திருத்தாண்டகங்கள் ஓதுவார் மரபில் இப்பண்ணில் பாடப்படுவதால் இதற்கு தாண்டகப்பண் என்ற பெயர் உண்டு.

வலமுறைத்திரிபில் (ஏறுநிரல் முறை – Clockwise rotation) தமிழிசையின் தலைமைப் பாலை செம்பாலை(அரிகாம்போதி)

X-X-X-X

இடமுறைத்திரிபில் (இறங்குநிரல்முறை – Anticlockwise rotation) தமிழிசையின் தலைமைப்பாலை அரும்பாலை (சங்கராபரணம்). எனவே தலைமை கருதி இரண்டுபண்களுக்கும் பாலையாழ் என்ற பெயர் உண்டு.

பாலைநிலப் பெரும்பண் பாலையாழ் (சங்கராபரணம்).

"இனிப் பாலைக்கு யாழ், பாலையாழ்"– தொல். அகத்.18நச்சர்.

"பாலைக்கு, ...பண் - பாலை....." – மேலது 20 இளம்.

"வேனில்குன்றத்துப்பாலை" – மதுரைக். 313

(வேனில் குறிப்பிட்டதால் இது பாலை நிலமாகியது)

"நைவளம் பழுநிய பாலை வல்லோன்" – குறிஞ்.146

"பாலை என்பது அரும்பாலையையும் சுட்டும்" – ப.இ.இ.31

X-X-X-X

பண்டைய ஏழ்பெரும் பாலைகளுள் முதன்மையான பாலை (பெரும்பண் - ஏழுசுரப்பண்) செம்பாலை.

"குரல்குரலாகியது செம்பாலை" – சிலம்பு. 17:(13) அடியார்க்

"....பாலை யாழுள்ளே ஏழு பாலையிசை பிறக்கும்"– மேலது

"......குரல் குரலாயது செம்பாலை, துத்தம் குரலாயது படுமலைப்பாலை,

".......வலமுறையே ஏழுபாலையும் கண்டு கொள்க" மேலது

(வலமுறை – ஏறுநிரல் முறை – Clock wise rotation)

பண் பெயர்ப்பால் (கிரகபேதம் - tonic shift) இப்பண்ணிலிருந்து ஏனைய ஆறு பாலைகளான, படுமலைப்பாலை (நடபயிரவி), செவ்வழிப்பாலை (இருமத்திமத்தோடி), அரும்பாலை (சங்கராபரணம்), கோடிப்பாலை (கரகரப்பிரியை), விளரிப்பாலை (தோடி), மேற்செம்பாலை (கல்யாணி), உருவாகின்றன. எனவே செம்பாலை ஓர் அனைத்துச் சுரப்பெயர்ப்புப் பண் (சர்வசுர மூர்ச்சனைக்கார மேளம்)

செம்பாலை என்ற இன்றைய அரிகாம்போதியே தமிழிசையின் தலைமையான பண். ஆதலால், இதன் சுரங்களே சுத்த சுரங்கள் (Natural Notes). எனவே இப்பண் சுத்த சுரமேளம் என்பது உறுதிப்படுகின்றது. "குரல் குரலாயது செம்பாலை" என்றதால் தொன்மைப் பண் (Primordial scale) என்பது செம்பாலையேயாகும். "குரல் குரலாக வருமுறைப் பாலை....." – சிலப்.28:33

மேலை இசையில் G. Mode என்றும், Mixolydian என்றும் இப்பண் பெயர் பெறுகின்றது.

இந்துத்தானி இசையில் 'கமாஜ் தாட்'.

மகிழ்ச்சி, உவகைச் சுவைக்குரியது இப்பண். எனினும் மெல்லிதான அவலச்சுவை கொண்டது .

"ததும்பும் மந்தரத்தின் தாரம் பயின்று மந்தம் முரல் வண்டு" என்பார் மாணிக்கவாசகர்.

மந்தரத்தாரம் என்பது மென்தாரம் (நி[1]). "தாரத்து உழை தோன்றப் பாலையாழ்". எனவே மென் தாரமுதல் பாடுவதால் இவ்விடத்தில் அருள் மணிவாசகர் குறிப்பிடுவது இச்செம்பாலை

என்ற பண்டைப் பண்ணையே. அதாவது மந்தரத்தாரம் (கைசகி நிசாதம், நி[1]) முதல் செம்பாலையை (அரிகாம்போதி) உருவாக்கி 'வண்டாடும் சோலைதனில்' பாடுவதாக, ஓர் இயற்கை எழில் ஓவியத்தைத் தீட்டிக் காட்டுகின்றார்.

இப்பண்ணில் மண் மணம் (rustic odour) கமழ்வதை நாம் உணரலாம். இதுவே இப்பண் தொன்மையானதொரு நாட்டார் பண் (folk melody) என்பதைக் கூறும். ஆகாத்து ஓம்பி, ஆபயன் அளிக்கும் ஆயர் என்ற எளிய மக்கள் பாடி வந்த பண். ஆயர்தம் புல்லாங்குழலில் இசைத்த பண்ணாதலால் இதற்குக் குழல்ப்பண் என்றொரு பெயர்.

"குழல் வளர் முல்லையில் ...." – சிலப்.4:15

"குழல் வளர்....ஊத என்புழி, 'குழலிலே எழுந்த முல்லை' என்று கூறியபொழுதே ஆயர் ஊதும் குழலிலே எழுந்த' முல்லை என்னும் பண்ணையும்" – தொல்.எச்.64 நச்சர்.

"ஏழிசை ஒலிக்கும் முல்லை யாழொடு" – கல்லா.15:15

என்பதால் இப்பண் ஓர் ஏழ்சுரப்பண் என்பது பெறப்படும்

(ஏழிசை – ஏழுசுரம்; இசை – சுரம்)

"குழல் வளர் முல்லை – குழலில் உண்டாகிய முல்லைப்பண்ணை"- சிலப். 4:15 அரும்.

"முல்லை – மலரும், பண்ணும்" – மேலது அடியார்க்,

முல்லை நிலத்து மலரான முல்லை மலரின் பெயரால் இப்பண் 'முல்லை' 'முல்லைப்பண்' ஆகியது.

"முல்லை நல் யாழ்ப்பாண" - ஐங். 478:5

"பாணர் முல்லை பாட" – மேலது 408:1

பரிபாடலின் முதல் பன்னிரு பாடல்களும்

பாலையாழில் (பண்ணுப் பாலையாழ்) இசைப்படுத்தப்பட்டவை.

எழுபதிற்கும் மேலான இனிய கிளைப் பண்களை (ஜன்ய ராகம்) செம்பாலை உருவாக்குகின்றது .

திருவேணுபுரப் பதிகத்தில் (3 ஆம் திருமுறைபாடல் 5) ‘பாலையாழ் வேணு புரம்’ என்று வேணுபுரத்தை சம்பந்தர் சிறப்பிக்கின்றார். திருப்பாதாளீச்சரபதிகத்தில் (1:108:10), “பாலையாழ்ப் பாட்டுகந்தார்” என்பார் சம்பந்தர். பாலையாழ் என்றும் பெயர் பெற்ற சங்கராபரணமானது ‘பஞ்சுரம்’ என்று தேவாரத்தில் பதிவு பெற்றுள்ளது. எனவே சம்பந்தர் குறிப்பிடும் பாலையாழ் இன்றைய அரிகாம்போதியே. “பாலை யாழொடு......” (5:12:10) என்றே அப்பரும் கூறுவார். ஆனால் இப்பண்ணில் தேவாரப் பதிகங்கள் அடைவு பெறவில்லை. திருவாய்மொழி 7ஆம் பத்துபாடல் 6,7,8; திருமங்கையின் (பெரியதிருமொழி) 4ஆம்பத்து பாடல் 6:7 ஆம் பத்து பாடல் 2 ஆகிய பாடல்கள் ‘பண்-பாலையாழ்’ என்ற பெயரிலேயே அடைவு பெற்றுள்ளன.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. வண்டாடும் சோலை	- ஆதி	- கல்கி
2. பாமாலைக் கிணை உண்டோ	- ஆதி	- பாபநாசம் சிவன்
3. வாளோர் பணி	- அடதாளம்	- திருப்பாம்புரம் சாமிநாதபிள்ளை
4. வாசரவணனே	- ஆதி	- பொன்னையா பிள்ளை
5. சம்போசங்கர	- ஆதி	- முத்துத்தாண்டவர்
6. பார்க்கப்பார்க்க	- ஏழன்சாய்ப்பு	- கோபாலகிருஷ்ண பாரதியார்
7. நீயேகதி	- ஆதி	- கோடீசுவரய்யர்
8. ராமநண்ணு புரோவ	- ஆறன்தாளம்	- தியாகராசர்
9. உண்மையும் நீதியும்	- ஆதி	- இலக்குமண பிள்ளை
10. எங்கேதேடுகின்றாய்	- ஆதி	- பெரியசாமித்தூரன்

60. செய மனோகரி

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} த^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ம^{1} க^{1} ரி^{2} ச^{2}

துத்த (ரி^{2}) சுரத்தையும், தார (நி^{1}) சுரத்தையும் அழுத்தமாகப் பாடும்போது இப்பண்ணின் சாயல் வெளிப்படுகின்றது.

எப்பொழுதும் பாட ஏற்ற பண். இந்தப் பண்ணில் ஆபோகி மற்றும் வைகறைப் பாணி (சிவரஞ்சனி) ஆகிய பண்களின் சாயல் தோன்றும்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. சன்னிதி வரலாமோ - ஆதி - கோபால கிருஷ்ண பாரதியார்
2. ஜெய கணேசா - திரிபுடை - கவிகுஞ்சர பாரதி
3. வருவானோ - ஆறன்தாளம் - முத்துசாமிக் கவிராயர்
4. எத்தனைதான் - ஆதி - நீலகண்டசிவன்
5. தேவ தேவனை - ஆதி - பாபநாசம் சிவன்
6. கண்டேன் கனவிலே - ஆதி - பெரியசாமித்தூரன்
7. நீபக்தி - ஆறன்தாளம் - தியாகராசர்
8. அய்யனே உன் - ஆதி - வேதநாயம் பிள்ளை
9. சிவலோக நாதனை - ஆறன்தாளம் - கோபால கிருஷ்ண பாரதியார்

61. செவ்வழி

ஏறுநிரல் : ச ரி^{1} க^{1} ம^{1} ம^{2} த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ம^{2} ம^{1} க^{1} ரி^{1} ச

ஏழ்பெரும்பாலைகளுள் மூன்றாவதாக வரும் பாலை (ஏழுசுரப்பண்).

பண்டைய நால்வகை நிலத்திற்கான நாற்பெரும் பண்களுள் ஒன்று.

"பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என நால்வகை யாழாம் நாற்பெரும் பண்ணே" — பிங்க : 1374.

(யாழ் - பெரும்பண் - ஏழுசுரப்பண் - பாலை)

(பாலை — முல்லை — செம்பாலை — அரிகாம்போதி)

"நாற்பெரும்பண்ணும் எழுவகைப் பாலையும்" — பெருங். 1:37:116

"நால்வகைப் பெரும்பண்ணினும் எண்ணிய" — கலிங்.11:10

"ஈரிரு பண்ணும் எழுமூன்று திறனும்" — பிங்க.1380.

"மருதம், செவ்வழியாழ் எவைகுத்த நால் இசையு நாற்பண் - சூடா. 10:32

"நாற் பெரும் பண்ணும், சாதி நான்கும்" — சிலப். 8:35 அடியார்க்.

"பண் நான்காவன: பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்பன — சிலப்.14:160-67 அடியார்க்.

"பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என நால்வகைப் பண்ணா நவின்றனர் புலவர் - வாப்பியனார். யா.வி.ஒழிபி.

இவ்வாறு செவ்வழி, செவ்வழிப்பாலை, செவ்வழியாழ் என்றெல்லாம் வழங்கிய இப்பண், இரண்டு உழையும் (மத்திமம்-ம^{1}, ம^{2}) பெற்றுவரும் ஒரே ஏழுசுரப்பண் ஆகும். எனவே ஈருழைப்பண் (இருமத்திமத்தோடி) என்றொரு பெயர்.

கைக்கிளை குரலேற் செவ்வழிப்பாலை – பிங்க.1405

கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை – சிலப். 17 (13) அடியார்க்.

காந்தள் மெல்விரல் கைக்கிளை சேர்குரல்
தீந்தொடைச் செவ்வழிப்பாலை – சிலப். 7:(47)

பன்னிருதான சுரங்கள்	ச	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}
செம்பாலை	ச		ரி^{2}		க^{2}	ம^{1}		ப		த^{2}	நி^{1}	
செவ்வழிப் பாலை	த^{1}		நி^{1}		ச	ரி^{1}		க^{1}		ம^{1}	ம^{2}	

செம்பாலை – அரிகாம்போதி – ச ரி^{2} க^{2} ம^{1} ப த^{2} நி^{1}

செவ்வழிப்பாலை – ச ரி^{1} க^{1} ம^{1} ம^{2} த^{1} நி^{1}

(கைக்கிளை – க^{2}; குரல் - ச)

அதாவது செம்பாலையின் கைக்கிளையை(க^{2}), குரலாக (ச) வைத்துப் பண்பெயர்த்தால், செவ்வழிப்பாலை வரும்.

சீறியாழ் செவ்வழி பண்ணி – புறம் 144:2 மற்றும் புறம் 147:2

செவ்வழிபண்ணி - மேலது 146:3, 149:3 மற்றும் மதுரைக்.604

செவ்வழியாழ் - கலித். 118:15 மற்றும் 143:38

செவ்வழி நல்யாழ் - அகம். 14:15 மற்றும் 212:6

செவ்வழிப்பண்ணில் சிறைவண்டு அரற்றும் - சிலப். 11:88

செவ்வழிப்பண் நெய்தல் நிலத்திற்குரிய பெரும்பண். கானல் வரி நிகழும் கடற்கரையில் இப்பண், மாதவியால் பாடப்பட்டதாக [சிலப்.7:(47)] இளங்கோவடிகள் அமைத்துக்காட்டுகிறார். நெய்தல் நிலத்திற்கான 'இரங்கல் சுவை' கொண்ட பண். எனவே இது மாலைநேரப்பண் ஆகிறது.

மாலை மருதம் பண்ணி காலைக்
கைவழி மருங்கில் செவ்வழிபண்ணி – புறம்: 149:2-3

மிகுந்த பரிசில் தந்த மயக்க நிலையில் பாணன் காலையில் பாடவேண்டிய மருதப்பண்ணை மாலையிலும், மாலையில் பாடவேண்டிய செவ்வழிப்பண்ணை காலையிலும் மாற்றிப் பாடிய செய்தியை இப்புறநானூற்றுப்பாடல் தெரிவிக்கின்றது.

"பாலையாழொடு செவ்வழிப்பண் கொள
மாலை வானவர் வந்து வழிபடும் - தேவா. 5:12:10

குரல்கொண்ட கிளைக்குற்ற உழைச்சுரும்பு...பரிபா.11:126-27

குரல் - 'ச' என்ற சுரம், உழைச்சுரும்பு – ம^{1}

கிளை-ஐந்தன்முறை, மத்திமபாவம், 'ச ம' முறை; 'ச' சுரத்திலிருந்து ஐந்தாவது, ஐந்தாவது சுரமாகத் தொடுத்துச் செல்லும் முறை கிளை முறை.

ச ம^{1}, ம^{1} நி^{1}, நி^{1} க^{1}, க^{1} த^{1}, த^{1} ரி^{1}, ரி^{1} ம^{2}

செவ்வழி – ச ரி^{1} க^{1} ம^{1} ம^{2} த^{1} நி^{1}

மேற்கண்ட பரிபாடல் 'செவ்வழிப்பண்' உருவாகும் முறையைக் கூறுகின்றது.

பையுள் நல்யாழ் செவ்வழி – அகம்.214:13

பையுள் நல்யாழ் செவ்வழி பிறப்ப – மேலது 314:12

(பையுள் - துன்பம், அவலம், இரங்கல்)

எனவே செவ்வழிப்பண் என்பது ஓர் அவலச்சுவைப்பண்.

செவ்வழிப்பண் ஐரோப்பிய இசையில் ‘Hypo–Phrygian’ என்று அழைக்கப்படுகிறது- இதுவே இப்பண் நெய்தல் (கடல்) நிலப்பண் என்பதைக் காட்டுகிறது.

செவ்வழிப்பண், பண்பெயர்ப்பு முறையில், முறையே அரும்பாலை (சங்கராபரணம்), கோடிப்பாலை (கரகரப்பிரியை), விளரிப்பாலை (தோடி), மேற்சொம்பாலை (கல்யாணி), செம்பாலை (அரிகாம்போதி), படுமலைப்பாலை (நடபயிரவி) ஆகிய பண்களைத் தருகின்றது. எனவே செவ்வழிப்பண் ஓர் அனைத்துச் சுரப் பெயர்ப்புப்பண் (சர்வசுர மூர்ச்சனைக்கார மேளம்)

“பாலையாழொடு செவ்வழிப்பண்கொள்” – தேவா.5:12:10

என அப்பர் இப்பண்ணைப் பதிவு செய்திருக்கின்றார். இரண்டாம் திருமுறை 113-122 ஆகிய சம்பந்தர் தேவாரம் இப்பண்ணில் அடைவு பெற்றுள்ளது.

62. சௌராட்டிரம்

தாய்ப்பண் : சூரியகாந்தம்

ஏறுநிரல் : ச ரி^{1} க^{2} ம^{1} ப த^{2} நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{2} ப ம^{1} க^{2} ம^{1} ரி^{1} ச^{1}

மெதுவான நடையில் பாடப்படும் பண்களில் ஒன்று சௌராட்டிரம்.

மரபாக மங்கள இசைக்குப் பெரிதும் பயன்படுத்தப்படும் பண்.

இப்பண்ணில் சில இடங்களில் பயின்றுவரும் மென்தார (நி^{1}) சுரம், இப்பண்ணிற்கு அயல்சுரம்.

இது ஓர் பழமையான பண். தேவார இசையில் பண் வியாழக்குறிஞ்சி ஓதுவார் முறையில் சௌராட்டிரத்தில் பாடப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. விநாயக சரணம்	-ஆதி	-அருணாசலக் கவிராயர்
2. தினமும் நினைமனமே	-ஏழன்சாய்ப்பு	-நீலகண்டசிவன்
3. மங்களமே சுப	-ஆதி	-பெரியசாமித்தூரன்
4. பஞ்சவர்ணக்கிளி	-அடதாளம்	-வேதநாயகம் பிள்ளை
5. எங்கே தேடி	-ஆதி	-கோபாலகிருஷ்ண பாரதியார்
6. அருள்கின்றதெப்பொழுது	-ஆதி	-இலக்குமணபிள்ளை
7. என்செய்வோமென	-ஆதி	-நகரம் முத்துசாமிக் கவிராயர்
8. பந்தத்தால்	-ஆதி	-சம்பந்தர்
9. அவ்வினைக்கிவ்வினை	-ஆதி	-சம்பந்தர்

63. தர்பார்

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} ரி^{2} க^{1} க^{1} ரி^{2} ச

பண் தர்பாரின் சாயலைக் கொண்ட மற்றுமோர் பண் நாயகி, மூன்று தானங்களிலும் பாடப்படும்பண்.

இறங்கு நிரலில் வரும் அழுத்தமான தார (நி^{1}) சுரம் மற்றும் கைக்கிளை (க^{1}) சுரமும் இப்பண்ணின் தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றது.

பெருமிதச் சுவையைத்தரும் பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. இனிமேலாகிலும்	- திரிபுடை	- இராமசாமிசிவன்
2. நாதா இரங்கலாகாதா	- ஆதி	- இலக்குமணபிள்ளை
3. சிவன் வருவார்	- ஆதி	- நீலகண்டசிவன்
4. ஓடி ஒளிவ தேனோ	- ஆதி	- அம்புசம் கிருஷ்ணா
5. வடிவேல் முருகா	- திரிபுடை	- கவிகுஞ்சரபாரதி
6. நாமம் உறவுக்கோலம்	- ஆதி	- பாபநாசம்சிவன்
7. அருள் நிறையவே	- ஆறன்தாளம்	- பெரியசாமித்தூரன்
8. ஓகோ காலனே	- ஆதி	- வேதநாயகம்பிள்ளை
9. யோசனா	- ஆதி	- தியாகராசர்

64. தர்பாரி கானடா

தாய்ப்பண் : படுமலைப்பாலை (நடபயிரவி)

ஏறுநிரல் : நி^{1} ச ரி^{2} க^1 ச ம^1 ப த^1 நி^{1} ச்

இறங்குநிரல் : ச் த^1 நி^{1} ப ம^1 ப க^1 ம^1 ரி^{2} ச

கானடா என்ற பண்ணின் வடிவை ஒத்தது பண் தர்பாரி கானடா.

இறை இசை, மெல்லிசைக்கு உகந்த பண். இரங்கல் சுவை தந்து அமைதியைத் தோற்றுவிக்கும் பண்.

இந்துத்தானி இசை வழியாகத் தென்னகம் பெற்ற பண்.

இந்துத்தானி இசையில் மிகச் சிறப்பாகப் பாடப்படும் பண்.

இப்பண்ணிற்கு உரிமையான சுரம் மென்விளரி (த^1) ஆயினும், அயல் சுரமாக வன்விளரி (த^2) யைச் சேர்த்தும் இப்பண் பாடப்படுகின்றது. இப்பண்ணிற்கு இவ்வாறு சேர்த்துப்பாடுவது ஒரு தனித்துவமான இனிமையைத் தருகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. கோவர்த்தன கிரிதரா - ஆதி - நாராயண தீர்த்தர்
2. தேவன் கே பத்தி - ஆதி - சுவாதித்திருநாள்
3. தில்லானா - ஆதி - முத்தையாபாகவதர்
4. தில்லானா - ஆதி - வீணை சேசண்ணா
5. தில்லானா - ஆதி - எஸ்.கல்யாணராமன்



65. தர்மவதி

ஏறுநிரல் : ச ரி^{2} க^1 ம^2 ப த^2 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ப ம^2 க^1 ரி^{2} ச

மாலையில் பாட ஏற்ற பண் தர்மவதி. இப்பண்ணில் தாரசுரம் (நி^{2}) அழுத்தமாகவும், உள்ளோசையுடனும் பாடப்படவேண்டும்.

கௌரிமனோகரி என்ற பண்ணின் வல்லுழை வடிவமே தர்மவதி.

தீட்சிதர் பத்ததியில் தர்மவதிப்பண் 'தம்மவதி' என்று குறிப்பிடப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. ஒருநாள் வாழ்வே	- ஏழன்சம்பை	- பெரியசாமித் தூரன்
2. வேலாயுத வரதா	- ஆதி	- நகரம் முத்துசாமிக் கவிராயர்
3. என்ன காரியத்துக்கு	- ஆதி	- மாரிமுத்தா பிள்ளை
4. இதுவொன்று வழி	- ஆதி	- இலக்குமண பிள்ளை
5. சன்மார்க்கசித்தி	- ஆதி	- சுத்தானந்த பாரதியார்
6. அருள்வாய் அங்கயற்கண்ணி	- ஐந்தன்சாய்ப்பு	- தண்டபாணி தேசிகர்
7. ஓடோடி வந்தேன்	- ஆதி	- அம்புசம் கிருஷ்ணா

66. தன்யாசி

தாய்ப்பண் : விளரிப்பாலை (தோடி)

ஏறுநிரல் : ச க^1 ம^1 ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^1 ப ம^1 க^1 ரி^{1} ச

ஏறுநிரலில் மருதப்பாணி(சுத்ததன்யாசி)யையும், இறங்கு நிரலில் விளரிப்பாலையையும் கொண்ட பண் தன்யாசி. எனவே இது பழமையான பண்.

மகிழ்ச்சிக்குரிய பண் தன்யாசி. காலையில் பாட ஏற்ற பண்.

அகத்துறைப்பாடல்கள் மற்றும் நீண்ட வர்ணனைப்பாடல்கள் பாட உகந்த பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1.	நீ இந்த மாயம்	- ஆதி	- பாபநாசம்சிவன்
2.	வருணமானுமல்ல	- ஆதி	- அருணாசலக்கவிராயர்
3.	நிராமய	- ஆறன்தாளம்	- அருணகிரிநாதர்
4.	கனகசபாபதி	- ஆதி	- கோபாலகிருஷ்ண பாரதியார்
5.	என்று நீ உணர்வாய்	- ஆதி	- பெரியசாமித்தூரன்
6.	ஜெயமங்களம்	- சம்பை	- புரந்தரதாசர்
7.	சிங்கார வேலனை	- ஆதி	- கவிகுஞ்சரபாரதி
8.	இத்தனை அருள்	- ஆதி	- இலக்குமணபிள்ளை
9.	நிச்சயம் இது	- ஆறன்தாளம்	- வேதநாயகம்பிள்ளை

67. திலங்கு

தாய்ப்பண் : **செம்பாலை (அரிகாம்போதி)**

ஏறுநிரல் : ச க² ம¹ ப நி¹ ச்

இறங்குநிரல் : ச் நி¹ ப ம¹ க² ச

அமைதிச் சூழலை ஏற்படுத்தும் இனிமையான ஐந்துசுரப்பண். இதனுடைய பழைய பெயர் அறியக்கூடவில்லை.

இந்துத்தானி இசை வழியாக இபண் இக்காலம் வழக்கிற்கு வந்துள்ளது.

சிற்சில இடங்களில், இப்பண்ணில் வரும் தாரசுரம் (நி²) இப்பண்ணிற்கு ஓர் அயல் சுரம்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. மாதவன் போற்றிடும் - ஆதி - நீலாராமமூர்த்தி
2. ஸ்ரீகணேச சரணம் - ஆதி - பாபநாசம் சிவன்
3. சாந்திநிலவ வேண்டும்- ஆதி - சுத்தானந்த பாரதி
4. தாரக பிந்தக - ஆதி - புரந்தரதாசர்



68. தேசி (தேஷ்)

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச

ஏறுநிரலில் குறிஞ்சிப்பாணி (மத்யமாவதி)யையும், இறங்குநிரலில் செம்பாலையையும் கொண்டபண். இந்நிரல்கள் கேதார கௌளைக்கு உரியவை. இருப்பினும் பாடும்போது வன்தாரம் (நி^{2}) என்ற அயல் சுரத்தையும் சேர்த்து அயல்விரவுப் பண்ணாகப் (பாசாங்கம்) பாடுவதால், கேதார கௌளையிலிருந்து வேறுபட்டு பண் தேசியின் சாயல் வெளிப்படுகின்றது.

தற்போது நடப்பில் பாடப்படும் இப்பண் இந்துத்தானி முறையிலிருந்து தென்னிந்திய இசைக்கு வந்துள்ளது என்றே கருதப்படுகின்றது.

மூன்றாம் சாமப்பண்கள் எட்டில் ஒன்றாகத் தேசிப்பண்ணைப் பஞ்சமரபு குறிப்பிடுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. துன்பம் நேர்கையில் - ஆதி - பாரதிதாசன்
2. பாட்டுக்கொரு புலவன் - ஆதி - கவிமணி
3. பாரத சாம்ராச்சிய - ஆதி - விசுவநாத சாஸ்திரி
4. ராம நாம - ஆதி - தஞ்சை சங்கரய்யர்
5. நந்த நந்தனந்த - ஆதி - இலலிததாசர்
6. அரியே பக்தி - சம்பை - புரந்தரதாசர்
7. தக்கதிம் - ஆதி - இலால்குடி செயராமன்

69. தேவகாந்தாரி

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^1 ப த^2 ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ப ம^1 க^2 ரி^{2} ச

ஏறுநிரலில் பாலைப்பாணி (சுத்தசாவேரி)யையும், இறங்குநிரலில் அரும்பாலையையும் கொண்ட பண்.

மெதுவான நடையில் (முதல்காலம்) பாடும் போது இப்பண்ணின் சாயலும் இனிமையும் வெளிப்படுகின்றது. மென்தாரம் (நி^{1}) இப்பண்ணில் சில இடங்களில் வரும் அயல்சுரம்.

வீரச் சுவைப்பண். அதிகாலையில் பாட ஏற்றது.

ஆரபி என்ற பண்ணிற்கும் தேவகாந்தாரியின் ஏறுநிரலும், இறங்குநிரலுமே வருகின்றன.

காந்தாரி, காந்தாரம் என்ற பெயர்களே இப்பண் ஒரு பழமையான பண் என்பதற்கான அடையாளமாகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. எந்நேரமும் உந்தன் - ஆதி - கோபால கிருஷ்ண பாரதியார்
2. என்னதருவான் - ஏழன்சாய்ப்பு - கவிகுஞ்சரபாரதி
3. உலகில் கண்கண்ட - ஏழன்சாய்ப்பு - நகரமுத்து வீரப்பக்கவிராயர்
4. சாரதே - ஆதி - பாபநாசம்சிவன்
5. எக்காலமு முந்தன் - ஆதி - வேதநாயகம் பிள்ளை
6. பூரண ஞானி - ஆதி - சுத்தானந்த பாரதியார்
7. மாதர் பிறைக்கண்ணியானை - ஆதி - அப்பர்
8. க்ஷீரஸாகர - ஆதி - தியாகராசர்
9. க்ஷிதஜாரமணம் - ஆதி - முத்துசாமி தீட்சிதர்

70. தேனுகா

ஏறுநிரல் : ச ரி^{1} க^{1} ம^{1} ப த^{1} நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{1} ப ம^{1} க^{1} ரி^{1} ச

அனைத்துச் சுரங்களும் உள்ளோசை (கமகம்) பெற்றுவரும் தாய்ப்பண்.

காலையில் பாடப்படும் பண்; இறைஇசைக்கு ஏற்றபண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1.	கருணைக்கடலே	- ஆதி	- கோடீஸ்வரய்யர்
2.	இனி என்ன குறை	- ஆதி	- பெரியசாமித்தூரன்
3.	ஸ்ரீகுருகுக மூர்த்தி	- ஆறன்தாளம்	- பொன்னையாப் பிள்ளை
4.	கேட்டவரம் அருளும்	- ஆதி	- அம்புசம் கிருஷ்ணா
5.	காம தேனுகா	- மூன்றன்சம்பை	- சுத்தானந்த பாரதியார்
6.	தெரிசனமே	- ஆறன்தாளம்	- முத்துத்தாண்டவர்
7.	அரசேயான் அறியேன்	- ஆறன்தாளம்	- இலக்குமணப்பிள்ளை
8.	தெளியலேதுராமா	- ஆதி	- தியாகராசர்
9.	ராம பிரம்ம	- ஆறன்தாளம்	- வீணை சேசண்ணா



71. துசாவந்தி

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} க^{2} ம^{1} ப த^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} க^{2} ச

துவிசாவந்தி, செசெவந்தி, சயசயவந்தி, செய்செய்வந்தி என்றெல்லாம் இப்பண் பெயர் பெறுகின்றது.

இந்துத்தானி இசை வழி, தென்னக இசைக்கு வந்த பண்ணாக துசாவந்தி கருதப்படுகின்றது.

சகானா, கேதாரகௌளை, எதுகுலகாம்போதி என்ற மூன்று பண்களின் சாயலும் இப்பண்ணில் வருகின்றது. சுரங்கள் பிறழ்ச்சியாக வருவதால் பல பண்களின் சாயல் தோன்றுகிறது. இதுவே இப்பண்ணிற்கு ஓர் இசை அழகையும், தனித்ததோர் வடிவையும் தருகின்றது.

இப்பண்ணில் வரும் மென் கைக்கிளை (க^{1}) இப்பண்ணிற்கோர் அயல்சுரம். எனவே இப்பண்ணில் சில இடங்களில் பண் காப்பியின் சாயலும் தோன்றுகிறது.

இந்துத்தானி இசையில் இப்பண் செய்செய்வந்தி எனப்பெயர் பெறுகின்றது.

இரங்கல் சுவைப்பண். இறைஇசைக்கு ஏற்றது. இந்துத்தானியில் விரும்பிப்பாடப்படும் பண்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. எங்கு நான் செல்வேன் ஐயா - ஐந்தன்சாய்ப்பு - பெரியசாமித் தூரன்
2. அம்பிகா உன் பாதமே - ஆதி - நீலகண்டசிவன்

3. ஓடி நான் உனை	- ஆதி	- வேதநாயகம் பிள்ளை
4. அகிலாண்டேசுவரி	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்
5. சேதஸ்ரீ	- ஆறன்தாளம்	- முத்துசாமி தீட்சிதர்
6. தானம் தா நா தம் தா	- ஆதி	- இலால்குடி செயராமன்

72. நளினகாந்தி

தாய்ப்பண் : **சரசாங்கி**

ஏறுநிரல் : **ச $க^{2}$ $ரி^{2}$ $ம^{1}$ ப $நி^{2}$ ச்**

இறங்குநிரல் : **ச் $நி^{2}$ ப $ம^{1}$ $க^{2}$ $ரி^{2}$ ச**

துத்த சுரம் ($க^{2}$), பிறழ்ந்து வரும் பிறழ்ச்சிப்பண். இப்பிறழ்வே இப்பண்ணின் சாயலை வெளிப்படுத்துகின்றது.

இரண்டாம் காலத்தில் பாடும்போது இப்பண் மிக இனிமையைத் தருகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. வாரணம் ஆயிரம்	- ஆதி	- ஆண்டாள்
2. ஶ்ரீ சிரக்கு மேனி	- திரிபுடை	- அருணகிரிநாதர்
3. மனவியாளகிம்	- ஆதி	- தியாகராசர்
4. நீ பாத மேகதி	- ஆறன்தாளம்	- ஜி.என்.பி.
5. நடசனபாலினி நளினகாந்தி	- ஆதி	- தஞ்சாவூர் ஶ்ரீசங்கர ஐயர்
6. ஶ்ரீசிரக்குமணி	- திரிபுடை	- அருணகிரிநாதர்

73. நவரசக்கானடா

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச க^{2} ம^{1} ப ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ம^{1} க^{2} ரி^{2} ச

ஏறுநிரலில் நான்கு சுரமாக அதாவது திறத்திறம் (சுராந்தரம்) ஆக வரும் பண்களில் குறிப்பிடத்தக்கது நவரசக்கானடா.

குழல், யாழ் போன்ற இசைக் கருவிகளில் வாசிக்க, இப்பண் மிகுந்த சுவையைத் தரும்.

இசை நிகழ்ச்சிகளின் இடைவேளையில் பாட ஏற்ற பண். இரண்டாம் காலத்தில் (மத்திமகாலம்) பாடுவதற்கு உகந்த பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. நானொரு விளையாட்டு	- ஆதி	- பாபநாசம் சிவன்
2. குயில்மொழி	- திரிபுடை	- அருணகிரிநாதர்
3. நின்னுவினா	- ஆறன்தாளம்	- தியாகராசர்
4. லம்போதர	- ஏழன்சாய்ப்பு	- முத்தையாபாகவதர்
5. கருநிச்சுநன்னு	- ஆறன்தாளம்	- மைசூர் வாசுதேவாச்சாரியார்
6. வந்தே சதா	- ஆதி	- சுவாதித்திருநாள்
7. நீபாதமுலே	- ஆதி	- பூச்சிசீனிவாச ஐயங்கார்



74. நவரோசு

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ப த^{2} நி^{2} ச ரி^{2} க^{2} ம^{1} ப

இறங்குநிரல் : ம^{1} க^{2} ரி^{2} ச நி^{2} த^{2} ப

கீழ்த்தான இளி (ப) முதல் நடுத்தான இளி (ப) முடிய பாடப்படும் பண் நவரோசு. இளிமுடிவு (பஞ்சமாந்தியம்)ப் பண்களுள் ஒன்று. இதுவே இப்பண் ஒரு நாட்டார் பண் என்பதற்கான அடையாளம்.

கீழ்த்தானத்து வன் விளரி (த^{2}) சுரத்தை அழுத்தமாகப்பாட, இப்பண்ணின் சாயல் தோன்றும்.

இறை இசைக்கு மற்றும் அகச்சுவைக்கு உகந்தபண். திருமணப்பாடல்கள் இசைக்க மிக்க இனிமையான பண் நவரோசு.

முதல் காலத்தில் பாட ஏற்ற பண். இது மிகப்பழமையான பண்.

கீழ்த்தானம், நடுத்தானம் என்ற குறிப்பிட்ட தான எல்லைக்குள் (‘ப’ முதல் ‘ப’ முடிய) பாடப்படுவதால் நவரோசுப் பண்ணானது, உழை ஒத்து (மத்திம சுருதி)க்குப் பாடப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. தில்லை நடராசனை	- ஆதி	- கோபாலகிருஷ்ண பாரதியார்
2. எப்போதும் சரணீயே	- ஆதி	- இலக்குமணபிள்ளை
3. பக்தியால்	- ஆதி	- அருணகிரிநாதர்
4. தம்மையே புகழ்ந்திச்சை	- ஏழன்சாய்ப்பு	- சுந்தரர்
5. பத்தனாய்ப் பாடமாட்டேன்	- ஆதி	- அப்பர்
6. இந்திரபதி விளங்கிடும்	- சம்பை	- சுவாதித்திருநாள்
7. மாங்குயில் கூவிய	- ஆதி	- கோ. கி. பா.

75. நாக சுராவளி

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச க^{1} ம^{1} ப த^{2} ச்

இறங்குநிரல் : ச் த^{2} ப ம^{1} க^{1} ச

இனிமையான பாணி(ஐந்துசுரப்பண் - ஔடவம்)களுள் ஒன்று நாகசுராவளி.

சிறுபண்ணாக இருப்பினும், மூன்றுதானங்களிலும் பாடும் போது இப்பண் இனிமையடைகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. பதுமநாபன் மருகா - ஆதி - பாபநாசம் சிவன்
2. நாகபூசணம் - ஆதி - துளசீவனம்
3. ஸ்ரீ சங்கர குருவரம் - ஆறன்தாளம் - மகாவைத்தியநாதஐயர்
4. சிவசிதம்பர - ஆதி - முத்துத்தாண்டவர்
5. ஸ்ரீ பதே - ஆதி - தியாகராசர்

76. நாட்டக்குறிஞ்சி

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{2} ம^{1} த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ம^{1} க^{2} ச

இரங்கல் சுவைதரும் பண். எனவே மாலையில் பாட ஏற்றது. மூன்று தானங்களிலும் பாடப்படும்பண். இறை இசை பாட உகந்த பண். பண்விரிவாக்கம் (ஆலாபனை) செய்ய இடம் தரும் பண். பழமையான பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. பால்வடியும் முகம்	- ஆதி	-ஊத்துக்காடு வேங்கடசுப்பய்யர்
2. இந்த ஓர் உதவி	- ஆதி	-பெரியசாமித்தூரன்
3. ஏன் இந்த தாமதம்	- ஆதி	-நீலகண்ட சிவன்
4. எல்லாம் வல்ல	- ஆறன் தாளம்	-நகரம் முத்து வீரப்பக்கவி
5. வழிமறைக்குதே	- ஏழன்சாய்ப்பு	-கோபாலகிருஷ்ண பாரதியார்
6. எக்காலத்திலும்	- ஆறன்தாளம்	-இராமசாமிசிவன்
7. பரிமள களப	- நான்மை அடம்	-அருணகிரிநாதர்
8. எப்போது வருவாயோ	- ஆதி	-சுத்தானந்த பாரதியார்

77. நாட்டை

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச க[2] ம[1] ப நி[2] ச்

இறங்குநிரல் : ச் நி[2] ப ம[1] க[2] ச

பெருமிதச்சுவை தரும் பண்களுள் ஒன்று நாட்டை. நாகசுரத்தில் பாடப்படும் பல்வேறு மல்லாரிகள் இப்பண்ணில் அமைந்தவை.

நாட்டம், நட்டபாடை (நட்டபாஷா), நைவளம், நாட என்றெல்லாம் பெயர் வழங்கிய பண்.

பஞ்சகவுத்துவத்தின் முதல் பண் இதுவே. ஆழ்வார் பாசுரத்துள் முதல் ஆயிரம் முதல் பாசுரமான 'திருப்பல்லாண்டு' இப்பண்ணில் அமைந்துள்ளது. 'கொங்கை திறங்கி' என்ற மூத்த திருப்பதிகம் நைவளத்தில் (நாட்டை) பாடப்பட்டுள்ளது: 'தோடுடைய செவியென்', என்ற சம்பந்தர் தேவாரம் இப்பண்ணில் பாடப்பட்டது. தோடய மங்கலம் இப்பண்ணில் பாடப் படுகின்றது. முன்னொரு காலத்தில் இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளின் தொடக்கப்பண் இதுவே.

இது நாட்டியத்திற்குரிய பண்; நட்டம் என்பது நாட்டியம். எனவே சாரங்க தேவர், தனது சங்கீத இரத்னா காரத்தில், நட்டம் → நட்ட + பாஷா - நட்ட பாஷா என்று இப்பண்ணைக் குறிப்பிடுகின்றார். பாஷா எனின் 'மொழி' என்று பொருள். இங்கு அது தமிழ்மொழியைக் குறிப்பது. தமிழகத்துப் பண் என்பதற்காக அவர் தரும் அடையாளமே 'பாஷா' என்ற பின்னொட்டு.

(நட்டபாஷா ←→ நட்டபாஷை ←→ நட்டபாடை)

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. இனியேது கவலை	- ஆதி	- பெரியசாமித்தூரன்
2. தோடுடைய செவியென்	- ஆறன்தாளம்	- சம்பந்தர்
3. கைத்தலநிறைகனி	- ஆதி	- அருணகிரிநாதர்
4. மகாகணபதிம்	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்
5. சித்தி அருள்	- ஏழன் சாய்ப்பு	- நீலகண்ட சிவன்
6. பாரினில்	- ஏழன்சம்பை	- பொன்னையாப் பிள்ளை
7. ஜகதானந்த காரகா	- ஆதி	- தியாகராசர்



78. நாடகப்பிரியை

ஏறுநிரல் : ச ரி^{1} க^{1} ம^{1} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} ப ம^{1} க^{1} ரி^{1} ச

துத்த சுரமும் (ரி^{1}), தாரசுரமும் (நி^{1}) அழுத்தமாகப் பிடித்துப்பாடும் பொழுது இப்பண்ணின் சாயல் வெளிப்படும்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1.	இருப்பிடம்	- ஆதி	- அம்புசம் கிருஷ்ணா
2.	நாடகப்பிரியா	- ஆறன்தாளம்	- சுத்தானந்த பாரதியார்
3.	யாருக்குத் தெரியும்	- ஏழன்சம்பை	- முத்துத்தாண்டவர்
4.	விஸ்வநாதம்	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்
5.	ஏதுக்கிந்த	- ஆதி	- திருவொற்றியூர் தியாகராசர்
6.	இதிசமயமு	- ஆறன்தாளம்	- மைசூர் வாசுதேவாச்சாரியார்
7.	இரங்காதாசாமிநாதா	- ஆதி	- கோடீசுவரய்யர்

79. நாதநாமக்கிரியை

தாய்ப்பண் : மாயா மாளவ கௌளை

ஏறுநிரல் : ச ரி^{1} க^{2} ம^{1} ப த^{1} நி^{2}

இறங்குநிரல் : நி^{2} த^{1} ப ம^{1} க^{2} ரி^{1} ச நி̣^{2}

தார முடிவுப் பண்களில் (நிசாதாந்தியராகம்) ஒன்று. எனவே பழமையான பண்.

கூத்து (நாடகம், நாட்டியம்) இசைக்கு உகந்த பண். மரபாக ஆனந்தக் களிப்பு இப்பண்ணில் பாடப்படுகின்றது.

இரக்கச்சுவை தந்து, உள்ளத்தை நெருடும் பண்.

நடுத்தானத்தில் மட்டுமே பாடக்கூடிய பண். எனவே உழை ஒத்து (மத்திம சுருதி)டன் பாடுதல்வேண்டும். முதல் நடையில் பாடும் போது, மிக்க இனிமை தரும் பண்.

நாட்டார் இசை, மெல்லிசை என பல்வேறு இசைக்கு ஏற்ற பண். நண்பகலில் பாட வேண்டிய பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. சிதம்பரம் போகாதே - ஆதி - கோபாலகிருஷ்ண பாரதியார்
2. அனுமனே நீயே - ஏழன்சாய்ப்பு - அருணாசலக்கவிராயர்
3. நீலகண்டாய - ஏழன்சாய்ப்பு - முத்துசாமி தீட்சிதர்
4. ராமநாம - ஆதி - புரந்தரநாசர்
5. நீயே துணையாகவே - ஆதி - கவிகுஞ்சரபாரதி
6. ஒருபதம்இருபதம் - ஆதி - அருணகிரிநாதர்
7. நினைப்பதெப்போது - ஆதி - வேதநாயகம்பிள்ளை
8. கருணா சலதே - ஆதி - தியாகராசர்
9. இந்த பராக - ஆறன்தாளம் - ஆனைஜயா

80. நாம நாராயணி

ஏறுநிரல் : ச ரி^{1} க^{2} ம^{2} ப த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ப ம^{2} க^{2} ரி^{1} ச

வகுளாபரணம் என்ற தாய்ப்பண்ணின் வல்லுழை (பிரதி மத்திமம்) வடிவமே பண் நாம நாராயணி.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. என்மனமே - ஆதி - கோடீசுவரய்யர்
2. மகா தேவ பாகிமாம் - ஆறன்தாளம் - பாலமுரளி கிருஷ்ணா
3. நர்மதா காவேரி - திரிபுடை - முத்துசாமி தீட்சிதர்
4. பொற்பதம் துணை - ஆதி - புனதா ஸ்ரீ



81. நீலமணி

தாய்ப்பண் : சாருகேசி

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப த^{1} ச்

இறங்கு நிரல் : ச் த^{1} ப ம^{1} ரி^{2} ச

வைகறைப்பாணி (சிவரஞ்சனி) யின் இளி (ப) ப் பெயர்ப்புப்பண் (பஞ்சம மூர்ச்சனை) நீலமணி.

இரங்கல் சுவை தரும் பண். இறைஇசை பாடவும், துன்பச் சூழலில் உள்ளம் உருகிப் பாடவும் ஏற்ற பண்.

பன்னிரு தான சுரங்கள்	ச	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}
சிவரஞ்சனி	ச		ரி^{2}	க^{1}				ப		த^{2}		
நீலமணி	ம^{1}		ப	த^{1}				ச		ரி^{2}		

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. என்னகவி பாடினாலும் - ஆதி - சுத்தானந்த பாரதி
2. பாலகிருஷ்ணன் - ஆதி - ஜெயசாமராஜ உடையார்
3. மாலைதனில் - ஆதி - அருணகிரிநாதர்



82. நீலாம்பரி

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{2} ம^{1} ப த^{2} ப நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} ப ம^{1} க^{2} ரி^{2} க^{2} ச

மெல்லுழை (நி^{1}) அயல் சுரமாக வரும் பண்.

மரபாக தாலாட்டுப்பாடல்கள் இப்பண்ணில் அமைந்துள்ளன. ஊஞ்சல் (ஊசல்) பாட்டு, திருமணப் பாடல் முதலிய எளிய மக்களின் நாட்டார் பாடல்கள் இப்பண்ணில் பாடப்படுகின்றன. எனவே இது ஒரு பழமையான பண்.

மெதுநடை (விளம்பகாலம்) யில் பாடும் போது இப்பண் மிக்க இனிமை தருகின்றது.

இரங்கற்சுவைதரும்பண். இறைஇசைக்கும் ஏற்றது. திருக்கோவில்களில் இறைவனை உறக்கத்திற்குக் (கண்படை) கொண்டு செல்ல இப்பண் பாடப்படுகின்றது.

இப்பண்ணில் வரும் சுரப்பிறழ்ச்சியே இப்பண்ணிற்கு ஒரு தனித்த வடிவையும், இனிமையான சுவையையும் தருகின்றது.

தேவாரத்தில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அடைவு பெற்ற பதிகங்கள் ஓதுவார்களால் மரபாக நீலாம்பரியில் பாடப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. அம்பா நீலாம்பரி - ஆதி - பொன்னையாப் பிள்ளை
2. வாருங்கள் வாருங்கள் - சம்பை - கோபாலகிருஷ்ண பாரதியார்
3. கனவிலும் மறப்பதில்லை - சம்பை - முத்துத்தாண்டவர்

4.	பிள்ளை நினைந்து	- ஆறன்தாளம்	- பெரியசாமித்தூரன்
5.	மாதர் மடப்பிடியும்	- ஆறன்தாளம்	- சம்பந்தர்
6.	அம்பாநீலயதாட்சி	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்
7.	காணக்கண்ணாயிரம்	- ஆதி	- ஆனை ஐயா
8.	தாயே நீயே	- அடதாளம்	- கூறைநாடு நடேசபிள்ளை
9.	தரையின் மானுட	- திரிபுடை	- அருணகிரிநாதர்



83. நெய்தல்பாணி(இந்தளம்)

தாய்ப்பண் : செவ்வழிப்பாலை(மற்றும் விளரிப்பாலை)

ஏறுநிரல் : ச க^{1} ம^{1} த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ம^{1} க^{1} ச

நாற்பெரும் பண்களில், ஒன்றும், ஏழ்பெரும்பாலைகளில் ஒன்றுமான ‘செவ்வழிப்பண்’ (ச ரி^{1} க^{1} ம^{1} ம^{2} த^{1} நி^{1}) என்பதே நெய்தல் பாணி (இந்தளம்)யின் தாய்ப்பண், செவ்வழிப் பண் பாடுவது அரிதாகிவிட்ட நிலையில் ‘இந்தளம்’ விளரிப் பாலை (தோடி) யில் பிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. நேர்திறம், செவ்வழி நல்யாழ்த்திறனே – பிங்க. 1379. மேற்கண்ட பிங்கல நிகண்டு நூற்பாவில் ‘நோதிறம்’ என்பதே பாடமாய் இருந்திருக்க வேண்டும். (நோதிறம் - இந்தளம்).

இந்தளம், இந்தோளம், தடவு, மருள், மருள்இந்தளம், நெய்தல்பாணி (நெய்தலந்தீம்பாணி), நெய்தல்குழல் (நெய்தலந் தீங்குழல்), வடுகு, நோதிறம், துக்கராகம், நெய்தல்திறம், நீர், என்றெல்லாம் பெயர் பெற்று வருவது பழமையான இப்பண்ணே.

தலையாய ஐந்து சுரப்பண்கள் ஐந்து : முல்லைப்பாணி (மோகனம்), குறிஞ்சிப்பாணி (மத்தியமாவதி), நெய்தல் பாணி (இந்தோளம்), பாலைப்பாணி (சுத்தசாவேரி), மருதப்பாணி (சுத்ததன்யாசி).

இந்தளப் பண்ணின் ‘க’, ‘ம’, ‘த’, ‘நி’ என்ற சுரங்களால் பண்பெயர்க்க முறையே பாலைப்பாணி முதல் ஏனைய நான்கு பண்களும் கிடைக்கும். எனவே இப்பண் அனைத்துச் சுரப்பெயர்ப்புப் பண்.

இதுவே நெய்தல் நிலச்சிறுபண். எனவே இது மாலையில் பாடவேண்டிய பண். இரங்கற் சுவை கொண்டது. இந்துத்தானியில் மால்கோசு (மால்கௌன்சு) என்று பெயர் பெற்ற பண்.

"இந்தளம் வடுகு எனல்" - பிங்க. 1397

"துக்கராகம் நோதிறமாகும்" - திவா. 13

"நோய் சேர்ந்த திறம் பண்ணி" - கலித். 77:18

"நோவு சேர்ந்த திறப் பண்ணைப் பண்ணி" - மேலது நச்சர். உரை

"பண்தடவு சொல்லின் மலைவல்லி" - தேவா. 3:74:3/3594

'எட்டியிலவம்' என்று தொடங்கும் காரைக்கால் அம்மையாரின் (இரண்டாம்) மூத்த திருப்பதிகம் இப்பண்ணில் அமைந்துள்ளது. தேவார மூவரும் பாடியபண், நம்மாழ்வாரும், திருமங்கையும் இப்பண்ணில் பாசுரம் பாடியுள்ளனர்.

"குறவர் மாதர்களோடு வண்டு குறிஞ்சி 'மருள்' இசைபாடும் வேங்கடத்து" – பாசுரம். திருமங்கை 2:1:2 பெ.தி.102 "குறப்பெண்டிரோடே வண்டுகளானவை குறிஞ்சி 'இந்தளம்' என்னும் பண்ணைப்பாடா நின்ற திருமலை..." மேலது, பெரிய வாச்சான் பிள்ளை (வியாக்கியானம்) மெல்லுரை.

"கலிமயில் அகவும் வயிர் மருள் இன்னிசை" – நெடுநல்.99. "நிறைந்திடும்...மருள் குறிஞ்சி என்ப"- சூடா.10:33 இந்தளம் மருள் இந்தளமே ஆகும் - திவா.1893. (பார்க்க தமிழிசைப் பேரகராதி பக்.66,401.)

குரல் (ச) சுரமுதற் கொண்டு கிளை முறை தொடுக்க இப்பண் கிடைக்கிறது. (கிளை முறை – ஐந்தன் முறை – மத்திமபாவம்)

ச ரி^{1} ரி^{2} க^1 க^2 ம^1 ம^2 ப த^1 த^2 நி^{1} நி^{2}

0 1 2 3 4 5

0 1 2 3 4 5

ச ம^1, ம^1 நி^{1}, நி^{1} க^1, க^1 த^1 – ச க^1 ம^1 த^1 நி^{1}

- இந்தளப்பண்.

"முறையால் வருமதுரத்துடன் மொழி இந்தள முதலில் குறையா நிலை மும்மைப்படி கூடுங்கிழமையினால்" - பெரியபு. தடுத் - 75

மும்மைப்படி – கிளைமுறை – 3 X 2 = 6

ச ரி^{1} ரி^{2} க^1 க^2 ம^1 ம^2 ப த^1 த^2 நி^{1} நி^{2}

1 2 3 4 5 6

1 2 3 4 5 6

ச ம^1, ம^1 நி^{1}, நி^{1} க^1, க^1 த^1 — ச க^1 ம^1 த^1 நி^{1} - இந்தளப்பண்; சுந்தரர் தனது தேவாரப் பதிகத்தின் முதற்பாடலை 'இந்தளப்பண்' ணில் தொடங்குவதை சேக்கிழார் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

முனைவர் எஸ். பாக்கியலட்சுமி, Ragas in Carnatic Music பக்கம்-74 என்ற நூலில் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றார்.

Ragas used in Kathakali and its equivalent in Karnatic Music

Kathkali Raga	Karnatic Raga
Indalam	Hindolam

இன்றளவும் கேரளக்கதகளியில் இப்பண் 'இந்தளம்' என்றே குறிப்பிடப்படுகின்றது. இன்று இந்தோளம் என்று வழங்கப்படுவது இந்தளப்பண்ணே.

மேற்கண்ட கதகளிப்பண் பெயரும், சேக்கிழார் கூறும் பெயரான 'இந்தளம்' என்ற பண்ணும் இன்றைய 'இந்தோளம்' என்ற பண்ணும் ஒன்றே என்ற உண்மை இதன் மூலம் தெரியவருகின்றது.

தேவாரத்தில் (சம்பந்தர்) அதிகமான (39பதிகங்கள்) பதிகங்கள் 'இந்தளப்பண்' ணில் பாடப்பட்ட பெருமை, இப்பண்ணிற்கே உண்டு.

(பார்க்க. தமிழிசைப் பேரகராதி பக். 66)

பரிபாடல்(13முதல்17முடிய) இப்பண்ணில் (நோதிறம்) இசைப்படுத்தப்பட்டுள்ளது.

'இந்தளப்பண்'ணின் பழமையான பெயர்களில் ஒன்று 'மருள்'; மருள் என்பது நாகதாளி என்ற ஒருவகைக் கற்றாழையைக் குறிப்பது, கற்றாழையை 'மரல்' என்றும் கூறுவர்.

மரல் → மரள் → மருள் என்று ஆகி இருக்கலாம்.

'மருள்'சிலப்பதிகார கானல் வரியில் பதிவு பெற்றுள்ளது.

பன்னிருதான சுரங்களில் 'ரி^{1} க^{1} ம^{1} த^{1} நி^{1} என்ற குறில் சுரங்கள் அதிகம் வரும்பண்கள் அவலச் சுவை (துன்பம், இரங்கல்) தருகின்றன. சான்று :

விளரிப்பாலை (தோடி) - ச ரி^{1} க^{1} ம^{1} ப த^{1} நி^{1}

செவ்வழிப்பாலை - ச ரி^{1} க^{1} ம^{1} ம^{2} த^{1} நி^{1}

இந்தளம் - ச க^{1} ம^{1} த^{1} நி^{1}

இந்த மூன்று பண்களையும் 'இரங்கல்' என்ற உரிப் பொருளைக் கொண்ட நெய்தல் நிலத்தில் நிகழும் 'கானல்வரி' யில் இளங்கோவடிகள் அமைத்துக் காட்டுகின்றார்.

நீர் சூழ்ந்த உலகு, நெய்தல் என்ற கடற்கரை நிலம். எனவே இந்தளத்திற்கு 'நீர்' என்ற ஒரு பெயரை இளங்கோவடிகள் பதிவு செய்துள்ளார்.

"பண்ணீர் வண்டு பரிந்தினைந்து ஏங்கி
கண்ணீர் கொண்டு காலுற நடுங்க" – சிலப் - 13:187–88

பண்ணீர் - பண் + நீர் - நீர்ப்பண் - நீர்நிலைப்பண்

"பண்ணீர்மையன்றிப் பண்ணீர் என்றமையால் திறம்
பன்னிரண்டனுள் நோதிறம் எனவுமாம்" – மேலது அடியார்க்.

குறிஞ்சி யாழ்த் திறன் வகையின் பெயர் - "நட்டபாடை ...
..... மருள் ..... குறிஞ்சியாழ்த் திறமாகக் கூறுவர்"– பிங்க.1382

குறிஞ்சி யாழ்த்திறத்தின் பெயர் - "நைவளம் .... மருள்..... குறிஞ்சி யாழ்த்திறனே" – திவா. 1876.

...... குறிஞ்சியாழ் (நடபயிரவி) என்ற படுமலைப் பாலையிலும் ‘இந்தளப்பண்’ (மருள்) பிறக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் இந்தளப் பண்ணில் துத்தசுரம் (ரி) வருவதில்லை. ஆயினும் திணைப்படி நிலையான முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை, மருதம் என்ற முறையில் நெய்தல் திறமான இந்தளப்பண், நெய்தல் நிலப்பெரும் பண்களான செவ்வழிப்பாலை அல்லது விளரிப்பாலை (தோடி)யில் பிறப்பதாகக் கொள்வதே திணை நெறிமுறை.

103பண் வரிசையில் ‘மருள்’ 53வது பண். இந்தளம், 73வது பண். வடுகின் அகநிலை இந்தளம். ஒருபண்ணும், அதன் அகநிலைப் பண்ணும் அதே பண்ணையே குறிக்கும். எனவே மருள், வடுகு, இந்தளம் என்பதெல்லாம் ஒரு பண்ணின் மாற்றுப்பெயர்களே.

....வேங்கடமகி கூறிய ஹிந்தோளராகம், நடபயிரவி மேளத்தில் தோன்றிப் பஞ்சம, ரிஷப மின்றிக் ‘க ம த நி’ என்னும் உருப்பெற்று நிற்பது. ஹிந்தோளம் என்ற பெயரால் மேலே குறிப்பிட்ட மூன்று ராகங்களிலும் காலத்தால் முற்பட்டது சாரங்கதேவர் கூறும் இந்தோளமே. ஆதலால் சங்கீதரத்னாகரம் கூறும் ஹிந்தோள ராகத்தையே தேவாரத்தில் வரும் இந்தளப்பண்ணின் உருவமாகக் கொள்ளுதல் வேண்டும்...”– பன்னிரு திருமுறை வரலாறு. பக்.613–14.

(பார்க்க பக்.583. பன்னிருதிருமுறை வரலாறு)

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. கருணாலய நிதியே - ஆதி - வேதநாயகம் பிள்ளை
2. சாமஜவரகமன - ஆதி - தியாகராசர்
3. ராமனுக்கு மன்னன் - ஆதி - அருணாசலக்கவிராயர்
4. தில்லையில் ஆடும் - ஆதி - பெரியசாமித்தூரன்
5. மாட்சி மிகுந்த - ஆறன்தாளம் - தண்டபாணி தேசிகர்
6. நம்பிக்கெட்டவர் - ஆதி - பாபநாசம்சிவன்
7. குணக்குன்றே - ஆறன்தாளம் - நகரம் முத்துவீரப்பக் கவிராயர்

84. பகுதாரி

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச க^{2} ம^{1} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} ப ம^{1} க^{2} ச

எப்பொழுதும் பாட ஏற்ற பண். இருப்பினும் இரக்கச்சுவை தரும் பண்ணாக இருப்பதால், மாலை நேரத்தில் பாட ஏற்ற பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. திருஉள்ளம் அறிந்து - ஆதி - நீலா இராமமூர்த்தி
2. ஆனந்தத்தாண்டவம் - ஆதி - முத்துத்தாண்டவர்
3. சினமடையாதே - ஆதி - தண்டபாணிதேசிகர்
4. புரோவபாரமா - ஆதி - தியாகராசர்
5. உன்னடியே - ஆதி - ஜி.என்.பாலசுப்ரமணியன்



85. படுமலைப்பாலை (நடபயிரவி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ப ம^{1} க^{1} ரி^{2} ச

பழந்தமிழ் இலக்கியங்களில் ‘குறிஞ்சி’ என்று குறிப்பிடப்படும் பண் இதுவே. குறிஞ்சி நிலப் பெரும்பண். ஏழ்பெரும் பாலைகளுள் ஒன்று. மலைக்குப் பொருந்திய பண். (படு–பொருந்திய) (மலைபடு > படுமலை, ஒப்பு : மலைபடுகடாம்)

குறிஞ்சிநிலச் சிறுபொழுது யாமம் (நள்ளிரவு); எனவே குறிஞ்சி நிலப் பெரும்பண்ணிற்கு, யாமையாழ் (யாமயாழ்) என்றொரு பெயர் உண்டு. “யாமயாழ்ப்பெயர் குறிஞ்சி யாழாகும். திவா. 1874.

வெறியாட்டுச்சடங்கு நடத்தும் போது இப்பண் பாடியுள்ளனர். “நறும் புகை எடுத்துக் குறிஞ்சி பாடி” என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் இச்செய்தியைப் பதிவுச் செய்துள்ளார்.

குறிஞ்சி நில மக்கள் இப்பண் பாடியுள்ளனர். “குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின்” என்று குன்றக் குறவர்களை வேண்டிக்கொண்ட செய்தியை இளங்கோவடிகள் தெரிவிக்கின்றார்.

குறிஞ்சிநிலக் கானவர் தங்கை கொடிச்சி இப்பண் பாடியுள்ளார். “கொடிச்சி பெருவரை மருங்கில் குறிஞ்சிபாட” என்று அகநானூறும் (102:6), “கொடிச்சியர் எடுத்தஇன் குறிஞ்சி” என்று கம்பராமாயணமும் (760) பதிவுசெய்கின்றன.

சடங்குகள் நிகழ்த்திய பூசாரி, பூசாரிணியரின் தொடர்ந்த மரபே பாணர் குடிமரபு. இக்குடியைச் சேர்ந்த விறலி ‘பண்குறிஞ்சி’ பாடிய செய்தியை,

“........ இன்குரல் விறலியர்

நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சிபாடி” என மலைபடுகடாம் (9) என்ற சங்க இலக்கியம் தெரிவிக்கின்றது.

மேலும் படுமலை, படுமலைப்பாலை என்று இப்பண்ணைச் சான்றோர் இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

“பாணர் படுமலை பண்ணிய எழால்” என்று குறுந்தொகை (323:2)யும்,

“படுமலை நின்ற பயங்கெழு சீறியாழ்” என்று புறநானூறு (135.7) என்ற பழம் பனுவலும் இப்பண் குறித்த செய்திகளைப் பதிவு செய்கின்றன.

“தெய்வம் உணாவே.... யாழின் பகுதி” என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கு உரை கூறவந்த இளம்பூரணர், குறிஞ்சிக்குரிய பண் - குறிஞ்சி என்பார். நச்சினார்க்கினியர் குறிஞ்சியாழ் என்கிறார்.

(யாழ் - பெரும்பண், மேளம், ஏழுசுரப்பண்)

கொல்லி, கவ்வாணம், கொல்லிக்கவ்வாணம் என்ற பெயர்களில் மூவர்தேவாரத்திலும், ஆழ்வார் பாசுரங்களிலும் இப்பண்ணில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

சம்பந்தர்-3:24-41, அப்பர்-4:1 மற்றும் திருநேரிசை–4:22–79 ஆகிய பதிகங்கள் இப்பண்ணில் பாடப்பட்டுள்ளன. திருநேரிசை இப்பண்ணில் பாடப்படுவதால் ‘நேரிசைக் கொல்லி’ என்றோர் பெயர் இதற்குண்டு. “கொல்லி யாழ் பண்ணுகந்தார்” (தேவாரம் 4:6:4) – திருக்குறுக்கை வீரட்டம்) என்று அப்பர் இப்பண்ணைப்பதிவு செய்கின்றார். திருவிருத்தம் 4:80-113 இப்பண்ணில் பாடப்படுவதால் ‘விருத்தக்கொல்லி’ என்றும் ஒருபெயர் இப்பண்ணிற்கு வழங்கி வருகின்றது. சுந்தரர் - 7:31-37. திருவாய்மொழி 1:9; 8:2; 9:4,5,8; 10:4,9, மற்றும் பெரிய திருமொழி – 4:7 என்பவை ‘கொல்லி’ என்ற பெயரிலும், பெரிய திருமொழியின் 5:3 பாடல் ‘கவ்வாணம்’ என்ற பெயரிலும் இப்பண்ணில் அடைவ பெற்றுள்ளன “படுமலை என்பது பகரில் கவ்வாணம்” - பிங்க.1392.

சம்பந்தர் தேவாரம் 3:42 மற்றும் சுந்தரர் தேவாரம் 7:38-46 ஆகிய பதிகங்கள் 'கொல்லிக் கவ்வாணம்' என்ற பெயரில் அடைவு பெற்றிருக்கின்றன.

குறிஞ்சி, குறிஞ்சியாழ், படுமலை, யாமை, யாம யாழ், கொல்லி, கவ்வாணம், கொல்லிக் கவ்வாணம், துத்தம், துத்தப்பாலை, பைரவி, பயிரவி, என்றெல்லாம் காலந்தோறும் பெயர்பெற்ற இப்பண், இக்காலம் 'நட' என்ற முன்னொட்டுடன் 'நடபயிரவி' (நடபைரவி) ஆகியுள்ளது.

அகவன் மகள் இப்பண் பாடிய செய்தியையும், பண்பெயர்ப்பு (கிரக பேதம்) முறையில் இப்பண் வரும் முறையையும் சிலப்பதிகார நடுகல் காதையில் இளங்கோவடிகள் சொற்சித்திரமாகக் காட்டியுள்ளார்.

குரல்குரலாயது செம்பாலை (அரிகாம்போதி); துத்தம் குரலாயது படுமலைப்பாலை (நடபயிரவி) (பார்க்க சிலப்.17: (13) அடியார்க்)

"வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇப்
புணர் புரி நரம்பின் பொருபடு பத்தர்க்
குரல்குரலாக வருமுறைப் பாலையில்
துத்தம் குரலாத் தொன்முறை இயற்கையின்
அம்தீம் குறிஞ்சி அகவன் மகளிர்….." சிலப்.28:31-35

பன்னிருதான சுரங்கள்	ச	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}
செம்பாலை (அரிகாம்போதி)	ச		ரி^{2}		க^{2}	ம^{1}		ப		த^{2}	நி^{1}	
குறிஞ்சி(படுமலைப் பாலை)(நடபயிரவி)	நி^{1}		ச		ரி^{2}	க^{1}		ம^{1}		ப	த^{1}	

குறிஞ்சி – படுமலைப்பாலை, நடபயிரவி. குரல்குரலாக வரும் பாலையான செம்பாலை (அரிகாம்போதி)யின் துத்த (ரி^{2}) சுரத்தை ('ச'வாக)க் கொண்டு பண்பெயர்த்தால் (கிரக பேதம்), குறிஞ்சி (நடபயிரவி)ப்பண் கிடைக்கும்.

குறிஞ்சி (படுமலைப்பாலை, நடபயிரவி)-ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{1} நி^{1}

இந்துத்தானி இசையில் இப்பண் 'அசாவேரி தாட்' என்று அழைக்கப்படுகின்றது. இப்பண்ணின் வல்லுழை (பிரதி மத்திமம்) வடிவமே 'சண்முகப் பிரியை' என்ற பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1.	எண்ணுவதெல்லாம்	- ஆதி	- பெரியசாமித்தூரன்
2.	கையுடன் கூட்டிவாடி	- ஆதி	- மாயூரம் விசுவநாத சாஸ்திரி
3.	ஸ்ரீவள்ளிதேவ சேனாபதே	- ஆதி	- பாபநாசம் சிவன்
4.	ஐயனே நடனமாடிய	- ஏழன்சம்பை	- முத்துத்தாண்டவர்
5.	அம்போருக பாதமே	- ஆறன்தாளம்	- கோடீசுவரஜயர்
6.	நீபாதமுலனு	- ஆதி	- முத்தையா பாகவதர்
7.	பருல சேவா	- ஆறன்தாளம்	- இராமநாதபுரம் சீனிவாச ஐயங்கார்



86. பவப்பிரியை

ஏறுநிரல் : ச ரி^{1} க^{1} ம^{2} ப த^{1} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{1} ப ம^{2} க^{1} ரி^{1} ச

விளரிப்பாலை (தோடி) என்ற தாய்ப்பண்ணின் வல்லுழை (பிரதிமத்திமம்) வடிவமே பண் பவப்பிரியை.

இரங்கல் சுவைப்பண். மூன்றுதானங்களிலும் பாட ஏற்ற பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. செந்திருவேலன்	- ஆதி	- கோடீசுவரய்யர்
2. வெண்ணெய் திருடி	- திரிபுடை	- பெரியசாமித்தூரன்
3. பூலோக கைலாசகிரி	- ஏழன்சம்பை	- முத்துத்தாண்டவர்
4. முக்குண மாயையில்	- ஆதி	- சுத்தானந்த பாரதியார்
5. போதிலிருந்து	- அனங்கதாளம்	- அருணகிரிநாதர்
6. ஶ்ரீகாந்தநி	- ஆதி	- தியாகராசர்
7. காவா குவா தேவா	- ஆதி	- நகரம் முத்துசாமிக் கவிராயர்

87. பாகேசுவரி

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{1} ம^{1} த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} நி^{1} ப ம^{1} க^{1} ரி^{2} ச

அமைதியை ஏற்படுத்தும் பண். இறை இசைக்கு ஏற்றபண். அகப்பாடல் பாட உகந்த பண்.

இந்துத்தானி இசையில் விரும்பிப் பாடப்படும் பண்.

இப்பண்ணின் இறங்குநிரலில் வரும் சுரப்பிறழ்ச்சி, இப்பண்ணிற்கு ஓர் இசை இனிமையைத் தருகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. குழலோசைகேட்டாயோ - ஆதி - ஊத்துக்காடு வேங்கட சுப்பய்யர்
2. மனமே அறியேன் - ஆதி - பாபநாசம் சிவன்
3. ஏறுமயிலேறி விளை - ஐந்தன்சாய்ப்பு - அருணகிரிநாதர்
4. வண்ணமயில் மேலே - ஆதி - என்.எஸ்.சிதம்பரம்
5. கோவிந்த மீகா - ஆதி - நாராயண தீர்த்தர்
6. பிருந்தாவன - ஆதி - நீலகண்டசிவன்
7. மனநிலை அறியேனடி - ஆதி - நீலா இராமமூர்த்தி
8. கடலுடன் - ஆதி - ஆர்.வேணுகோபால்



88. பாலைப்பாணி (சுத்த சாவேரி)

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^1 ப த^2 ச்

இறங்குநிரல் : ச் த^2 ப ம^1 ரி^{2} ச

உலகில் பல நாடுகளில் வழங்கி வரும் ஐந்து பாணிகளில் (ஐந்து சுரப்பண்) இதுவும் ஒன்று. பாலை நிலத்திற்கான சிறுபண் (ஐந்து சுரப்பண்), எனவே பாலைப்பாணி.

கொன்றை, கொன்றைக்குழல் என்றும் இப்பண் பெயர் பெற்றிருந்தது. "கோவலர் கொன்றையங்குழலர்" – அகம்.11.

"கொன்றையந்தீங்குழல் மன்று தோறு இயம்ப" – நற்.364:10

"கொன்றையந்தீங்குழல் கேளாமோ தோழி" – சிலப்.17:(19)

தேவார ஓதுவார் முறையில் பண் பழந்தக்க ராகம் என்பது இதுவே. இந்துத்தானியில் 'துர்க்காராகம்.

கீழைநாடுகளான இந்தோனேசியா, சீனா, வியட்நாம் போன்ற நாடுகளிலும் விரும்பிப் பாடப்படும் பண்.

முல்லைப்பாணியின் இளி (ப) சுரத்தைக் கொண்டு, பண்பெயர்க்கக் கிடைப்பது பாலைப்பாணி.

பன்னிருதான சுரங்கள்	ச	ரி^{1}	ரி^{2}	க^1	க^2	ம^1	ம^2	ப	த^1	த^2	நி^{1}	நி^{2}
முல்லைப்பாணி	ச		ரி^{2}		க^2			ப		த^2		
பாலைப்பாணி	ம^1		ப		த^2			ச		ரி^{2}		

முல்லைப்பாணி (மோகனம்) - ச ரி^{2} க^2 ப த^2

பாலைப்பாணி (சுத்த சாவேரி) - ச ரி^{2} ம^1 ப த^2

இப்பண்ணின் ரி^{2} முதல் பண் பெயர்த்தால் (கிரகபேதம்), மருதப்பாணி (சுத்த தன்யாசி), முல்லைப்பாணி (மோகனம்), குறிஞ்சிப் பாணி (மத்யமாவதி), நெய்தல் பாணி (இந்தோளம்) ஆகிய பண்கள் கிடைக்கும். எனவே இப்பண் அனைத்துச் சுரப்பெயர்ப்புப்பண் (சர்வசுரமூர்ச்சனைக்கார மேளம்)

இப்பண்ணின் அனைத்துச் சுரங்களும் உள்ளோசை (கமகம்) பெற்றுவருவதால், இப்பண் அனைத்துச் சுர உள்ளோசைப்பண் (சர்வசுரகமகராகம்); எனவே இப்பண் மிக்க இனிமை தரும் பண்களில் ஒன்று. (பார்க்க. தமிழிசைப் பேரகராதி பக்.204-205)

இப்பண்ணின் முன்னர்ப்பாகமான (பூர்வாங்கம்) 'ச ரி^{2} ம^1' என்பதிலும், பின்னர்ப்பாகமான (உத்தராங்கம்) 'ப த^2 ச்' என்பதிலும் ஓர் ஒழுங்கு இருப்பதால், இப்பண் மிக்க சுவை தருவதாக அமைகின்றது.

சுரங்களின் இரட்டை (ஜண்டை) வரிசைகளும், தாண்டு (தாட்டு) வரிசைகளும

இப்பண்ணை மேலும் இனிமைப் படுத்துகின்றன.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1.	வண்டார் பூங்குழல்நாயகி	- அடதாளம்	- திருப்பாம்புரம் சாமிநாதபிள்ளை
2.	கண்டாயோ	- ஆதி	- முத்துத்தாண்டவர்
3.	தாயேதிரிபுரசுந்தரி	- ஐந்தன்சாய்ப்பு	- பெரியசாமித்தூரன்
4.	கற்பகாம்பிகை	- ஐந்தன்சம்பை	- பாபநாசம்சிவன்
5.	தருணம் தருணம்	- ஆறன்தாளம்	- வேதநாயகம் பிள்ளை
6.	மறையுடையாய்	- ஆறன்தாளம்	- சம்பந்தர்
7.	தாரிணி தெலுசு	- ஆதி	- தியாகராசர்

8. ஸ்ரீ குருகுக - ஆறன்தாளம் - முத்துசாமி தீட்சிதர்

9. ரஞ்சித கவி - ஆறன்தாளம் - கோடீசுவரய்யர்

10. எல்லோரையும் - ஆறன்தாளம் - கவிகுஞ்சரபாரதி

11. சரணாம் புசம் துணை - ஆதி - பாபநாசம்சிவன்

12. வணக்கம் செய்வோம் வாரீர் - ஆதி - கு.ரா.கிருஷ்ணமூர்த்தி

89. பிந்துமாலினி

தாய்ப்பண் : சக்கரவாகம்

ஏறுநிரல் : ச க^{2} ரி^{1} க^{2} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} ச் த^{2} ப க^{2} ரி^{1} ச

ஏறுநிரலில் விளரி (த^{2})யும், இறங்குநிரலில் உழையும் (ம^{1}) நீங்கலாக வரும் பண்.

மூன்றுதானங்களிலும் பாட ஏற்ற பண்ணான பிந்துமாலினி, எப்பொழுதும் பாட உகந்தது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. எந்தமுத்தோ எந்தசொகசோ - ஆதி - தியாகராாசர்
2. ஜெகதீஸ்வரியே - ஆதி - ஆர்.விஸ்வேஸ்வரன்
3. சாமகான - ஆதி - ஸ்ரீராமசந்த்ர மூர்த்தி
4. ஜெகதாதரமு - ஆதி - ஸ்ரீராமசந்த்ர மூர்த்தி
5. காணிநிலம் - ஆதி - சுப்ரமணிய பாரதியார்
6. அம்பிகா என்னை - ஆதி - மதுரை ஜி.எஸ்.மணி
7. தில்லானா - ஆதி - இலால்குடி ஜெயராமன்

90. பிருந்தாவனச்சாரங்கம்

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச ரி^{2} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} ப ம^{1} ரி^{2} க^{1} ச

ஏறுநிரலில் குறிஞ்சிப்பாணி(மத்யமாவதி)யாகவரும் பண். எனவே குறிஞ்சிப்பாணியின் சாயல் இப்பண்ணில் தோன்றும். மாலை நேரத்தில் பாட உகந்த பண்.

அகச்சுவைப் பாடல்களுக்கேற்ற பண். உள்ளத்தை ஈர்க்கவல்ல பண்.

இனிமையான இப்பண் அமைதிச் சூழலை ஏற்படுத்தவல்லது. இறை இசைக்கும் தாளமில் உருக்கள் (சுத்தாங்கம்) பாடவும் ஏற்புடைய பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. கலியுக வரதன் - ஆதி - பெரியசாமித்தூரன்
2. ரங்கபுரவிகாரா - ஆறன்தாளம் - முத்துசாமித்தீட்சிதர்
3. சௌந்தரராசம் - ஆறன்தாளம் - முத்துசாமித்தீட்சிதர்
4. கமலாப்தகுல - ஆதி - தியாகராசர்
5. ஆத்மநிவேதனம் - ஆதி - துளசீவனம்
6. சரசிருகானை - ஆதி - பட்டணம் சுப்பிரமணியய்யர்



91. பிலகரி

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ப த^2 ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ப ம^1 க^2 ரி^{2} ச

ஏறுநிரலில் முல்லைப்பாணி (மோகனம்) யாகவும், இறங்குநிரலில் அரும்பாலை (சங்கராபரணம்) யாகவும் வரும் பண். எனவே பழமையான பண்.

மென்தாரம் (நி^{1}) இப்பண்ணிற்கு அயல்சுரம். இவ்அயல்சுரம் வரும் இடங்கள் இப்பண்ணிற்கு தனித்ததோர் இனிமை தருகின்றது.

இன்பச்சுவையையும், வீரச்சுவையையும் ஏற்படுத்தும் பண்.

மூன்று தானங்களிலும் பாட ஏற்ற இப்பண்; காலை வேளைகளில் பாட உகந்தது.

இப்பண்ணின் ஏறுநிரல் இறங்குநிரலாகவும், இறங்குநிரல் ஏறுநிரலாகவும் வரும்பொழுது பண் கருடத்தொனி கிடைக்கிறது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. இந்தபாராமுக - ஆதி -வீணைகுப்பய்யர்
2. மால்முருகனை - ஆதி -இராமசாமிசிவன்
3. ஸ்ரீசாமுண்டேசுவரி - ஆதி -மைசூர் வாசுதேவாச்சாரியார்
4. ஸ்ரீமதுராபுரி - ஆதி -முத்துசாமி தீட்சிதர்
5. பாகிபத்மநாப - ஆதி -சுவாதித்திருநாள்
6. எழுந்தாளே - ஏழன்சாய்ப்பு -அருணாசலக்கவிராயர்
7. தாமதமேனோ - ஐந்தன்திரிபுடை -பொன்னையாப்பிள்ளை
8. சிற்சபைதனிலே - ஏழன்சாய்ப்பு -முத்துத்தாண்டவர்
9. கற்பகாம்பிகே - ஆறன்தாளம் -பாபநாசம்சிவன்

92. புன்னாகவராளி

தாய்ப்பண் : விளரிப்பாலை (தோடி)

ஏறுநிரல் : நி^{1} ச ரி^{1} க^{1} ம^{1} ப த^{1} நி^{1}

இறங்குநிரல் : நி^{1} த^{1} ப ம^{1} க^{1} ரி^{1} ச நி^{1}

ஒருதாய்ப்பண் (சம்பூரணம்) போன்ற நிறைவான சுரங்களைக் கொண்டது புன்னாகவராளி. இப்பண்ணில் வரும் வன்தாரம் (நி^{2}) மற்றும், வன்துத்தம் (ரி^{2}) ஆகியன இப்பண்ணிற்கு அயல்சுரங்கள்.

தாரமுடிவுப்பண் (நிசாதாந்தியராகம்). ஒருதான எல்லைக்குள் பாடப்படும் பண். எனவே மிகப்பழமைகொண்ட நாட்டார்பண் புன்னாகவராளி. ஒருதானம் என்ற சிற்றெல்லைக்குள் பாடப்பட வேண்டியுள்ளதால், உழைஒத்து (மத்திம சுருதி) கொண்டு, இப்பண் பாடப்படவேண்டும்.

முதற்கால (விளம்பகால) நடை பண்ணிற்கு ஏற்றது. இரங்கற் சுவைதரும் பண்.

இரவில் பாட ஏற்ற பண். பாம்பாட்டிகளின் மகுடியில் இசைக்கப்படும் பண். நொண்டிச்சிந்தும், ஓடப்பாட்டும் இப்பண்ணில் மரபாகப்பாடப்படுகின்றன.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. ஆடுபாம்பே - ஆதி - பாம்பாட்டிச்சித்தர்
2. பழனமருங்கணையும் (நொண்டிச்சிந்து) - ஆதி - கோபாலகிருஷ்ண பாரதியார்
3. தள்ளுவாரோ - ஆறன்தாளம் - கோபாலகிருஷ்ண பாரதியார்

4.	ஏகாந்த நிஷ்டையில்	- ஏழன்சாய்ப்பு	- நீலகண்டசிவன்
5.	உன்பாதமே சரணம்	- ஆதி	- பாபநாசம்சிவன்
6.	மனமிரங்காதா	- ஆதி	- பெரியசாமித்தூரன்
7.	பிருந்தாவனத்தில்	- மூன்றன்ஒற்றை	- டி.ஆர்.மகாலிங்கம்
8.	சிவகங்காதரா	- ஆதி	- பாபநாசம்சிவன்
9.	இராகவனேசரணம்	- ஆறன்தாளம்	- அருணாசலக் கவிராயர்
10.	கனகசைல	- ஆதி	- சியாமாசாஸ்திரி
11.	ஏனோமு (தரு)	- ஆறன்தாளம்	- தியாகராாசர்

93. பூபாளம்

தாய்ப்பண் : விளரிப்பாலை (தோடி)

ஏறுநிரல் : ச ரி^{1} க^{1} ப த^{1} ச்

இறங்குநிரல் : ச த^{1} ப க^{1} ரி^{1} ச

உறக்கம் கலையும் காலை நேரத்தில் பாட மிகச்சிறந்த பண் பூபாளம்.

ஓதுவார் மரபில், புறநீர்மைப் பண்ணில் அமைந்த தேவாரப் பதிகங்கள் இப்பண்ணில் பாடப்படுகின்றன.

கேரளக் கதகளியில் இப்பண் 'புறநீர்' என்ற பெயரிலேயே பாடப்படுகின்றது.

காலையில் திருக்கோவில் நடைதிறப்பின்போது இப்பண் இசைக்கப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. பொழுது புலர்ந்தது - ஆதி - சுப்பிரமணிய பாரதியார்
2. அன்னை ஜானகி - ஆதி - அருணாசலக்கவிராயர்
3. திருப்பள்ளி எழுந்தருள் - ஆதி - கவிகுஞ்சரபாரதியார்
4. மங்கையர்க்கரசி - ஆதி - சம்பந்தர்
5. தினமிதே - ஆதி - பாபநாசம்சிவன்



94. பூர்விகல்யாணி

தாய்ப்பண் : கமனாசிரமம்

ஏறுநிரல் : ச ரி^{1} க^2 ம^2 ப த^2 ப ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ப ம^2 க^2 ரி^{1} ச

இதற்குப் பூரி கல்யாணி என்றொரு பெயரும்உண்டு. உச்சிவேளைப்பண். ஓரளவு மேற்செம்பாலை (கல்யாணி) யின் சாயல் கொண்டது.

கூத்துக்குரியபண். நாடகம், நாட்டியத்தில் சிறப்பாகக் கையாளப்படும்பண்.

இரங்கற்சுவைப்பண். இப்பண்பாடும்போது கெஞ்சுவது போன்ற பாவனையை ஏற்படுத்தும்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. கருணாகரமூர்த்தி	- ஆறன்தாளம்	- வேதநாயகம்பிள்ளை
2. ஆனந்த நடமாடுவார்	- ஆறன்தாளம்	- நீலகண்டசிவன்
3. பேரும் நல்ல தியாகர்	- ஏழன்சாய்ப்பு	- பாபநாச முதலியார்
4. முருகன்துணை	- ஆதி	- பெரிசாமித்தூரன்
5. ஸ்ரீராசராசேசுவரி	- ஐந்தன்சாய்ப்பு	- தஞ்சை சங்கரய்யர்
6. சற்றே விலகி இரும்	- ஆறன்தாளம்	- கோபாலகிருஷ்ண பாரதியார்
7. பரிபூரணகாமா	- ஆறன்தாளம்	- தியாகராசர்
8. தேடித்திரியாதே	- ஆறன்தாளம்	- முத்துத்தாண்டவர்
9. தில்லைச்சிதம்பரம்	- ஏழன்சாய்ப்பு	- கோபாலகிருஷ்ண பாரதியார்
10. ஏகாம்பரநாதம்	- ஆதி	- முத்துசாமி தீட்சிதர்

95. பேகடை

தாய்ப்பண் : அரும்பாலை (சங்கராபரணம்)

ஏறுநிரல் : ச க^{2} ரி^{2} க^{2} ம^{1} ப த^{2} ப ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^{2} ப ம^{1} க^{2} ரி^{2} ச

பியாகடை, வேகடை என்றெல்லாம் பெயர்வழங்கும் பண் பேகடை. பிற்பகல் பண்.

இப்பண்ணின் சுரப்பிறழ்ச்சியே இதற்குத் தனித்ததொரு சாயலையும், இசை இனிமையையும் தருகின்றது.

இப்பண்ணில்வரும் உழை (ம^{1}) சற்று உயர்த்தியும், தாரம் (நி^{2}) சற்றுக் குறைத்தும் பாடப்படுகின்றது.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. ஞானரசமுடன்	- ஆறன்தாளம்	- பாபநாசம்சிவன்
2. வந்தாளே சூர்ப்பநகை	- ஆதி	- அருணாசலக்கவிராயர்
3. நந்தனாரே உந்தன்	- ஏழன்சாய்ப்பு	- கோ.கி.பா.
4. என்னடிபெண்ணை	- ஏழன்சாய்ப்பு	- கவிகுஞ்சரபாரதி
5. ஈசன்கனகசபேசன்	- ஆதி	- கோடீசுவரய்யர்
6. நன்றி கூறுவோமே	- ஆதி	- இலக்குமணபிள்ளை
7. ஆருக்கும் அடங்காத	- ஆதி	- முத்தையாபாகவதர்
8. தேவிநின்வடிவழகை	- ஆதி	- பாபநாசம்சிவன்
9. எத்தனை தரம்	- ஆதி	- பெரியசாமித்தூரன்
10. நாதோபாசனா	- ஆதி	- தியாகராசர்
11. ஏதோ சோதனை	- ஆதி	- வேதநாயகம்பிள்ளை
12. என்னை ஆண்டருள்	- ஆதி	- தண்டபாணிதேசிகர்
13. சிதம்பரம் என்றொரு	- ஆதி	- கோபாலகிருஷ்ண பாரதியார்
14. மதுரம்பழகியஅழகிய	- ஆதி	- உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

96. பேகாக்

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^{2} ம^{1} ப த^{2} நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^{2} நி^{1} ப த^{2} ம^{1} க^{2} ரி^{2} க^{2} ச

இரங்கற்சுவைப்பண். உள்ளத்தில் இரக்க உணர்வை ஏற்படுத்தும் தன்மை கொண்டது இப்பண்.

இறைஇசை மற்றும் வேண்டுதல் போன்ற வடிவங்களுக்கு உகந்தது இப்பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. அரனே இன்னும் தயை - ஆதி - பாபநாசம்சிவன்
2. பக்தவத்சல - ஆறன்தாளம் - முத்தையாபாகவதர்
3. நேனந்து வெதகுரா - ஆதி - தியாகராசர்



97. மருதப்பாணி (சுத்ததன்யாசி)

தாய்ப்பண் : கோடிப்பாலை (கரகரப்பிரியை)

ஏறுநிரல் : ச க^{1} ம^{1} ப நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} ப ம^{1} க^{1} ச

மருதநிலச்சிறுபண் (ஐந்து சுரப்பண்), எனவே மருதப்பாணி என்றபெயர். தொடக்ககாலத்தில், ஆம்பல், ஆம்பல்குழல், காமரம், சீகாமரம், என்று இப்பண் பெயர் பெற்றிருந்தது. பின்னர் உதய ரவிச்சந்திரிகா, சுத்ததன்யாசி என்றபெயர்.

"ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரை" – சிலப்.4:73

"ஆம்பல்......பண்ணுமாம்" - மேலது அடியார்க்.

(நாறும் = தோன்றும்)

"ஐயவிசிதறி ஆம்பல் ஊதி" - புறம்.281:4

"ஆம்பலந்தீங்குழல் கோளாமோ தோழி" – சிலப்.17:(2)

"ஆம்பல் குழலால் பயிர்பயிர் எம்படப்பை"- கலித்.108:62

"ஆம்பல் பண்ணை உடைய குழல்" – மேலது நச்சர்.

"காமருதும்பி காமரம் செய்யும்" – சிறுபாண் .77

"காமரம் என்பது சீகாமரம்" – மேலது நச்சர்.

(பார்க்க.பக்.45 தமிழிசைப் பேரகராதி)

மருதநில நீர்நிலைகளில் நிறைந்த மலரான ஆம்பலின் பெயரால் ஆம்பல் பண்.

தேவாரம் மற்றும் பாசுரங்களில் 'காமரம்' என்ற பெயரில் இப்பண் அடைவு பெற்றுள்ளது. "ஸ்ரீகாமரம், தக்கேசி, தர்க்காக்யம், தாலபாணி" – காமிக ஆகமம். சுலோ.278, ஸ்ரீகாமரம் -

இதன்மூலவடிவம் சீகாமரம் ஆகலாம். "........சீகாமரம், சாரல்.... இவை பதினாறும் மருதயாழ்த் திறனே-திவா.10. உலகெங்கிலுமுள்ள சிறப்புடைய ஐந்து பாணிகளில் ஒன்று மருதப்பாணி.

மருதப்பாணியானது, பண்பெயர்பால், முல்லைப்பாணி (மோகனம்), குறிஞ்சிப்பாணி (மத்யமாவதி), நெய்தல் பாணி (இந்தோளம்), பாலைப்பாணி (சுத்தசாவேரி) ஆகிய ஏனைய நான்கு பாணிகளைத் தருகின்றது. எனவே மருதப்பாணி ஓர் அனைத்துச் சுரப்பெயர்ப்புப்பண். (சர்வசுரமூர்ச்சனைக் கார ராகம்).

மருதம், மருதயாழ், கோடிப்பாலை என்றெல்லாம் பெயர் பெற்றது இன்றைய கரகரப்பரியை. இதுவே மருத நிலப் பெரும்பண் (ஏழுசுரப்பண் - சம்பூரணம்). இம்மருதநிலச் சிறுபண்ணே இன்றைய சுத்ததன்யாசி என்ற மருதப்பாணி (ஐந்துசுரப்பண் - பாணி)

மென்கைக்கிளை முதல் (சாதாரண காந்தாரம் - க^{1}) ஏழாவது, ஏழாவது (இணைமுறை) சுரமாகத் தொடுத்தால்,

க^{1} நி^{1}, நி^{1} ம^{1}, ம^{1} ச, ச ப, ப ரி^{2}, ரி^{2} த^{2}

என ஆறு சுழற்சிகளில் - ச ரி^{2} க^{1} ம^{1} ப த^{2} நி^{1} என்ற மருதயாழ் - கோடிப்பாலை (கரகரப்பரியை) கிடைக்கும். முதல் நான்கு சுழற்சிகளில்,

க^{1} நி^{1}, நி^{1} ம^{1}, ம^{1} ச, ச ப – ச க^{1} ம^{1} ப நி^{1}

என்ற மருதப்பாணி (சுத்ததன்யாசி) கிடைக்கும்.

மருதப்பாணி ஓர் இரவுநேரப்பண். நள்ளிரவிலும் பாடப்படும் பண். அணங்குகள், பேய்கள் நெருங்காமல் இருக்க இப்பண் பாடப்பட்டுள்ளது.

"ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி" – புறம்.281:4

தென் அமெரிக்க நாடுகள், மலைவாழ்மக்கள், நாட்டார் இசை என இப்பண் பல்வேறு நிலைகளில் வழங்கி வருவதால் இப்பண் மிகப்பழமையான பண் ஆகிறது.

பெருமிதச் சுவை தரும்பண். ஐந்து சுரப்பண்ணாக இருப்பினும், பண் ஆளத்தி (இராக ஆலாபணை), மற்றும் சுரஆளத்தி (சுர ஆலாபனை) பாட இடம் தரும் பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. செயசெயகுக சரணம்	- தேசாதி	- பாபநாசம்சிவன்
2. அன்புசெய்த	- ஆதி	- பெரியசாமித்தூரன்
3. ஸ்ரீராசமாதங்கி	- ஆதி	- முத்தையா பாகவதர்
4. எந்த நேர்சினா	- ஆதி	- தியாகராசர்
5. சுப்ரமண்யென	- ஆதி	- முத்துசாமிதீட்சிதர்
6. அன்புமணம் பரவும்	- ஆதி	- கு.ரா.கிருஷ்ணமூர்த்தி



98. முல்லைப்பாணி (மோகனம்)

தாய்ப்பண் : செம்பாலை (அரிகாம்போதி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ப த^2 ச்

இறங்குநிரல் : ச் த^2 ப க^2 ரி^{2} ச

ஏழாவது, ஏழாவதாக வரும் (பஞ்சமபாவம்) இசைச்சுரங்களே ஒன்றுடன் ஒன்று இரண்டறக் கலந்து மிகுந்த இசை இனிமையைத் தருகின்றன. இதற்கு இணைமுறை (பஞ்சமபாவம்) என்று பெயர்.

"…..குரல் இளி என்றிரு நரம்பின்
ஒப்பக் கேட்கும் உணர்வினன் ஆகி" – சிலப்.3:59-60

"இணை நரம்புடையன அணைவுறக் கொண்டாங்கு"–மேலது:90

"குரல்வாய் இளிவாய்க் கேட்டனள்" - சிலப்.8:35

(குரல் - ச; இளி – ப)

"இணை, கிளை, பகை, நட்பு என்று இந்நான்கின்
இசைபுணர் குறிநிலை எய்தநோக்கி" - மேலது 8:33-34

குரல் (ச) முதல் ஏழாவது சுரத்தானமாகத் தொடர்ந்தால்,

ச ப, ப ரி^{2}, ரி^{2}த^2, த^2 க^2 என்று நான்கு சுழற்சியில், ச ரி^{2} க^2 ப த^2 — என்ற முல்லைப்பாணி (மோகனம்) கிடைக்கின்றது.

சிற்றூர்ப்புற எளிய சிறுகுடிமக்கள் பாடியதே நாட்டார் இசை (Folk Music); நாட்டார் இசையில் அமைந்ததே தொடக்க காலப்பண்கள்.

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில், ஆய்ச்சியர்குலமங்கையர் குரவை ஆடுவதைப் பற்றிக் கூற வந்த இளங்கோவடிகள், இம்மக்கள் முல்லைப்பாணி (முல்லைக்குழல்) பாடி ஆடியதாகக் கூறி, ஒருவெண்பாவில் இப்பண்ணின் சுரங்களையும் குறிப்பிடுகின்றார்.

"குரல் மந்தமாக, இளி சமனாக
வரன்முறையே துத்தம்வலியா – உரன்இலா
மந்தம் விளரி பிடிப்பாள் அவள்நட்பின்
பின்றையைப்பாட்டெடுப்பாள்" - சிலப்.17:(18)

குரல் - ச, இளி – ப, துத்தம் வலியா – ரி², விளரி – த², நட்பின்பின்றை – க² (Major third); இவ்வாறு முல்லைப்பாணியின் சுரங்களைக் கூறுகின்றார். இப்பாடலுக்கு முன்பு,

"………பாடுவதும் முல்லைத்தீம்பாணி யென்றாள்" என பாடலில் அமைந்துள்ள பண் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

"முல்லையந்தீங்குழல் கேளாமோ தோழீ" – சிலப்.17:(23) என்கிறார்.

ஐந்து சுரப்பண் (ஔடவம்)ணின் பழமையான பெயர் - பாணி, குழல்.

முல்லைப்பாணி (மோகனம்)யின் தாய்ப்பண் (மேளம்) செம்பாலை (அரிகாம்போதி), வாசசுபதி, மேற்செம்பாலை (கல்யாணி) அரும்பாலை (சங்கராபரணம்) ஆகலாம். ஆனால், ஒருபெரும்பண் (மேளம்) பாடி, அதன் திறம் (ஜன்யம்) பாடுவது பழைய மரபு.

"குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின்றி இசைத்து, வழித்திறம் காட்டும்"– சிலப்.5:35–36

[வழித்திறம் - பெரும்பண்வழிவரும் திறம் (ஜன்யம்)]

X-X-X-X

"மாயவன் என்றாள் குரலை, விறல்வெள்ளை
ஆயவன் என்றாள் இளி தன்னை – ஆய்மகள்
பின்னையாம் என்றாள் ஓர் துத்தத்தை மற்றையார்
முன்னையாம் என்றாள் முறை" - சிலப்.17:(14)

"மாயவன் சீருளார் பிஞ்ஞையும் தாரமும்
வால்வெள்ளை சீரார் உழையும் விளரியும்

கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள் வலத்துளாள்
முந்தைக்கு நல் விளரி தான்" - சிலப்.17:(15)

(குரல் - ச; துத்தம் - ரி^{2}; கைக்கிளை – க^{2}; உழை – ம^{1}; இளி – ப; விளரி – த^{2}; தாரம் - நி^{1})

(பார்க்க தமிழிசைப் பேரகராதி பக்.474)

மேற்கண்டவாறு ஆய்ச்சியர், முல்லைநிலப் பெரும் பண்ணான முல்லையாழ் (செம்பாலை, அரிகாம்போதி) பாடுகின்றனர். இதன் பிறகு முல்லைப் பாணி பாடுகின்றனர். (சிலப்.17:(18). எனவே முல்லைப்பாணி (மோகனம்) யானது, முல்லையாழ் (அரிகாம்போதி) என்ற பெரும்பண்(மேளம்)ணில் பிறந்ததாகவே கொள்ளல் வேண்டும் என்பதே சிறப்பானது.

சிலப்பதிகாரப் பதிக உரையில், "முல்லைத்தீம்பாணி என்றாள் (17 : செந்நிலை) என்பதனால் சாதாரியும் கூறினார்" என்பார் அடியார்க்கு நல்லார்.

ஆய்ச்சியர் குரவையில் இளங்கோவடிகள் குறிப்பிட்ட ஐந்துசுரப்பண்ணான முல்லைப்பாணியை, அடியார்க்கு நல்லார் 'சாதாரி' எனக் குறிப்பிடுகின்றார். எனவே முல்லைப்பாணியே சாதாரி; சாதாரியே இன்றைய மோகனம், ஆகவே முல்லைப்பாணியே 'மோகனப்பண்".

"சாதாரி, தேசி, நாமக்கிரியை முதல்….." – விராலிமலை திருப்புகழ் - 350

"தாரியில் காட்டித்தரும் சாதாரி" - கல்லா–43:31

"யாழின் பகுதி என்பது பண், அது சாதாரி" - தொல்.அகத்.20.இளம்.

"சாதாரி என்னும் கானம் பாடினார்" - திருவாலவா.54:32

"விசையொடு….. இன்னிசை எழும் சாதாரி" - திருவிளை.2058.

"சாதாரி நின்றறையும் சாந்து" - திணைமாலை 150.95:4

“விறகாளாய் சாதாரி பாடுமாறும்” - திருவாலவா.பதி.பாயிரம்:8

இப்பண்ணானது, முல்லைப்பாணி, முல்லைக்குழல், ஆயன்குழல், குரல்பாணி, குழல்பாணி, மாயோன்பாணி, சாதாரி, ரேகுப்தி, மோகனம் என்றெல்லாம் காலந்தோறும் பெயர்பெற்று வந்துள்ளது.

தேவாரம் 3:67-99 மற்றும் 4:9 ஆகிய பதிகங்கள் முல்லைப்பாணியில் (சாதாரி) பாடப்பட்டுள்ளன. திருவாசகம் வழிவழியாக இப்பண்ணில் பாடப்பட்டுவருகின்றது. திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல் என்ற நாட்டார் வடிவங்களைக் கொண்டது திருவாசம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். எனவே தமிழிசைமரபில் முதலில் தோன்றிய தென்மைப் பண் நாட்டார்பண் முல்லைப்பாணி (மோகனம்)யே என்பது உறுதிப்படுகின்றது.

ஆழ்வார் பாசுரத்தில், திருமங்கையின் பெரிய திருமொழி மூன்றாம் பத்து மூன்றாம் பாடல் ‘வாடமருதிடை’, மற்றும் எட்டாம் பத்தின் ஒன்பதாம்பாடல் ‘கைம்மானம்’ முல்லைப்பாணியில் பாடப்பட்டவை.

நாட்டார் இசை, இறை இசை, நாடக இசை, நாட்டிய இசை, மெல்லிசை, அரங்கிசை, திரைஇசை என அனைத்து இசைகளிலும் இப்பண்ணில் அதிகமான பாடல்கள் இசைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தளத்திற்கு (39 பதிகம்) அடுத்து சம்பந்தர் இப்பண்ணில் (33 பதிகம்) தான் அதிகமான பதிகங்களைப் பாடியுள்ளார்.

சீனநாட்டின் நாட்டுவாழ்த்து இப்பண்ணில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் தமிழ்த்தாய் வாழ்த்து இப்பண்ணில் இசைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்துத்தானியில் இப்பண் ‘பூப்’, ‘போபாலி’ என்று பெயர் பெற்றுள்ளது. இப்பண்ணின் இனிமையில் மயங்கிய நம்முன்னோர்

பலவாறாக இப்பண்ணிற்குப் பெயர்தந்துள்ளனர். நிலத்தால் முல்லைப்பாணி; அரிகாம்போதி (குரல்பண்) யில் பிறப்பதால் குரல்பாணி; புல்லாங்குழலில் இனிமையான இசையாவதால் குழல்பாணி; முல்லை நிலத் தெய்வத்தால் 'மாயோன்பாணி; முல்லை நில மக்கள் பெயரால் 'ஆயன் குழல்; மலரால் 'முல்லைக்குழல்'.

3000 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பண்ணை நாம் காத்து வருவதற்குக் காரணம் இதன் இனிமையே. ஓரளவு இரங்கல் சுவை, அவலச்சுவை தரும் பண் முல்லைப்பாணி. எனவே இது மாலை நேரப்பண்.

"அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை" - குறள் - 1228

(ஆயன் குழல் = மோகனம்)

இப்பண்ணின் இனிமைக்குக்காரணம், இதன் அனைத்துச் சுரங்களும் உள்ளோசை (கமகம்) பெறுவதே. நீண்ட நேர பண் விரிவாக்க (ஆலாபனை) த்திற்கு இடமளிக்கும் பண். இரட்டைச் சுர (ஜண்டைப் பிரயோகம்) வரிசைகளும், தாண்டு (தாட்டு) வரிசைகளும் இப்பண்ணிற்கு தனித்ததோர் இனிமையைத் தருகின்றன. இப்பண்ணில் அமைந்துள்ள சுரங்கள்யாவும் இணை முறையில் (பஞ்சம பாவம்) அமைந்திருப்பதே ஓர் தனித்த இனிமையை இப்பண் பெறுவதற்கான காரணமாக அமைந்துள்ளது. பெருமிதச் சுவைதரும் பண்.

உலகெங்கும் காணப்படும் பண். குறிப்பாக கீழை நாடுகளில் இப்பண் விரும்பிப் பாடப்படுகின்றது.

பண்பெயர்ப்பால் குறிஞ்சிப்பாணி (மத்யமாவதி), நெய்தல்பாணி (இந்தோளம்), பாலைப்பாணி (சுத்த சாவேரி), மருதப்பாணி (சுத்த தன்யாசி) ஆகிய தலையாய ஏனைய நான்கு பாணிகளை முல்லைப்பாணி தருகின்றது. முல்லைப்பாணி அனைத்துச்சுரப் பெயர்ப்புப்பண் (சர்வசுரமூர்ச்சனைக்காரராகம்)

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. ஏன்பள்ளி கொண்டீர்	- ஆதி	- அருணாசலக் கவிராயர்
2. அம்பலவாணர்	- ஆறன்தாளம்	-முத்துத்தாண்டவர்
3. கபாலி	- ஆதி	- பாபநாசம்சிவன்
4. எங்கள் வள்ளி	- ஏழன்சாய்ப்பு	- சுப்பராம தீட்சிதர்
5. மோகனராமா	- ஆதி	- தியாகராசர்
6. கண்டுகண்டு	- ஐந்தன்சாய்ப்பு	- புரந்தரதாசர்
7. குமரகுருபரா	- ஆறன்தாளம்	- அருணகிரி நாதர்
8. மோகன மயில் திகழும்	- ஏழன்சாய்ப்பு	- அம்புசம் கிருஷ்ணா
9. இந்த வேளையில்	- ஆதி	- பெரியசாமித் தூரன்
10. பசரே ரகுவீரம்	- ஆதி	- சதாசிவப் பிரமேந்திரர்
11. இன்னம்பாராமுகம்	- ஆறன்தாளம்	- வேதநாயகம் பிள்ளை
12. எனக்கென்ன மனக்கவலை	- ஆதி	- சுத்தானந்த பாரதியார்



99. மேற்செம்பாலை (கல்யாணி)

ஏறுநிரல் : ச ரி^{2} க^2 ம^2 ப த^2 நி^{2} ச்

இறங்குநிரல் : ச் நி^{2} த^2 ப ம^2 க^2 ரி^{2} ச

பண்டைய ஏழ்பெரும்பாலைகளுள் இறுதியாக வரும் தாய்ப்பண்.

தமிழிசை வரலாற்று நெடும்பரப்பில், இப்பண் தாரம், தாரப்பண், தழிஞ்சி, குரல்புணர் நல்யாழ், மேற்செம்பாலை என்றும் இக்காலம் கல்யாணி என்றும் பெயர் பெற்றுள்ளது.

103 பண்களில், 101 ஆம் பண் தாரப்பண்திறம்.

“மதுரகீதம் பாடினள் மயங்கி” – சிலப். 8:24

“தாரங்குரலாக மேற் செம்பாலை என்னும் பண்ணைக் கண்டத்தால் பாடி.......” மேலது உரை.

“தாரம் குரலேன் மேற்செம்பாலை” – பிங்க. 1409

“....தாரம் குரலாயது மேற்செம்பாலை...” – சிலப்.17:(13) அடியார்க்.

“தலையின தாரம் செய்யும் தாரம்” – சிலப்.8:25.அரும்.மேற்.

பன்னிருதான சுரங்கள்	ச	ரி^{1}	ரி^{2}	க^1	க^2	ம^1	ம^2	ப	த^1	த^2	நி^{1}	நி^{2}
செம்பாலை (அரிகாம்போதி)	ச		ரி^{2}		க^2	ம^1		ப		த^2	நி^{1}	
மேற்செம்பாலை (கல்யாணி)	ரி^{2}		க^2		ம^2	ப^1		த^2		நி^{2}	ச	

கல்யாணி - ச ரி^{2} க^2 ம^2 ப த^2 நி^{2}

தலையின – தலை – செம்பாலை (அரிகாம்போதி)

தலையின தாரம் - அரிகாம்போதியின் தாரசுரம் - நி^{1}

செய்யும் தாரம் - நி^{1} சுரத்தை 'ச' வாகக்கொண்டு பண்பெயர்த்தால் தாரம் (கல்யாணி) கிடைக்கும்.

"குரல் புணர் நல்யாழ் முழவொடு ஒன்றி" - மதுரைக்.605

"குரல் புணர் இன்னிசைத்தழிஞ்சி பாடி" - பதிற்.57:9

"இளிதோர் தீம்குரல் இசைக்கும் அத்தம்" - அகம்.33:7

இளிதோர் - இளிமுறை; ச ப, ப ரி^{2}, ரி^{2} த^{2}, த^{2} க^{2}, க^{2} நி^{2}, நி^{2} ம^{2}

மேற்செம்பாலை – ச ரி^{2} க^{2} ம^{2} ப த^{2} நி^{2} – கல்யாணி

இப்பண் மேலை இசையில் 'Lydian' என்றழைக்கப்படுகிறது.

இந்துத்தானி இசையில் 'ஏமன் (Yeman) தாட்'

இப்பண்ணின் அனைத்துச் சுரங்களும் உரிமைக் கோவைகள்,

உயிர்ச்சுரங்கள் (ஜீவசுரங்கள்). எனவே பண் விருத்தி என்ற ஆளத்தி (ஆலாபனை) செய்யும் பொழுது, ஒவ்வொரு சுரமும் மிக்க இனிமை தருகின்றது.

இந்தப்பண்ணின் அனைத்துச் சுரங்களும் நெடில் சுரங்கள்; அனைத்துச்சுரங்களும் முடிவுச்சுரங்கள் (நியாச சுரங்கள்). எனவே அனைத்துச் சுரங்களும் நெடில் சுரங்களாக இருப்பதால் நீட்டி முழக்கி பாடுவதற்கும், அனைத்துச் சுரங்களிலும் நின்றுபாடி (Staying note) நிறுத்துவதற்கும் இப்பண் இடமளிக்கிறது.

இப்பண்ணின் சுரங்களுக்கு இடையில் இசை(சுர) இடைவெளி (Music Interval) இருப்பதால், சுரங்களை மேலும் கீழுமாக அசைத்து அனேக உள்ளோசைகளை (கமகம்) உருவாக்கி, நீண்ட நேரம் பண் விரிவாக்கம் (improvisation) செய்வதற்கு இப்பண் இடமளிக்கிறது. இக்காரணங்களால்தான் பண் விரிவாக்கத்தில் (ஆலாபனை) மிக இனிமைதரும் பண்ணாக இப்பண் விளங்குகின்றது.

பண்பெயர்ப்பால் ஏனைய ஆறு பாலைகளையும், இப்பண் தருவதால், மேற்செம்பாலை ஓர் அனைத்துச் சுரப்பெயர்ப்புப்பண் (சர்வசுர மூர்ச்சனைக்கார மேளம்).

வல்லுழைப் பண்களில் (பிரதி மத்திமம்) மேற்செம்பாலையே மிக இனிமையான பண்.

இப்பண்ணில் அமைந்த இசைவடிவங்கள் :

1. ஆனந்த கூத்தாடினார்	- ஆறன்தாளம்	- கோபாலகிருஷ்ண பாரதியார்
2. வாசு தேவயானி	-ஆதி	- தியாகராசர்
3. நின்னுவினா	- ஆதி	- சுப்பராய சாஸ்திரி
4. நிதிசால	- ஏழன்சாய்ப்பு	- தியாகராசர்
5. எத்தைக்கண்டு நீ	- ஆறன்தாளம்	- வைத்தீசுவரன் கோவில் சுப்பராமய்யர்
6. ஆடினதெப்படியோ	- ஆதி	- முத்துத்தாண்டவர்
7. பாரெங்கும்	- ஆதி	- கனம் கிஷ்ணய்யர்
8. சிதம்பரம் என	- ஆதி	- பாபநாசம்சிவன்
9. நீயே மனமகிழ்வோடு	- ஆதி	-இராமசாமி சிவன்
10. வருவாரோ	- அடதாளம்	- பொன்னையா பிள்ளை
11. உன்னையல்லால்	- ஆதி	- பாபநாசம் சிவன்
12. திமிரவுததி	- முன்றன் நடை	- அருணகிரிநாதர்
13. பஜரேரேசித	- ஏழன்சாய்ப்பு	- முத்துசாமி தீட்சிதர்
14. ஏதாவுனரா	- ஆதி	- தியாகராசர்
15. பதம் தருவாய்	- ஆதி	- டைகர் வரதாச்சாரியார்

100. விளரிப்பாலை (தோடி)

ஏறுநிரல் : ச ரி^{1} க^1 ம^1 ப த^1 நி^{1} ச்

இறங்குநிரல் : ச் நி^{1} த^1 ப ம^1 க^1 ரி^{1} ச

தமிழிசையின் பண்டைய ஏழ்பெரும்பாலைகளில் ஆறாவதாக வரும் பாலை, விளரிப்பாலை.

செம்பாலையின் (அரிகாம்போதி) விளரி சுரத்தின் (த^2) பண் பெயர்ப்பால் (கிரகபேதம்), விளரிப்பாலை (தோடி) கிடைக்கிறது. எனவே (விளரி) சுரத்தால், பண் விளரிப்பாலை எனப் பெயர் பெற்றுள்ளது.

“விளரி குரலாயது விளரிப்பாலை”- சிலப்.17:(13) அடியார்க்.

“விளரி குரலாகின் விளரிப்பாலை”- பிங்க்.1408

(விளரி – த^2; ‘த^2’ வை ‘ச’ வாகக் கொண்டு பண் பெயர்த்தால், தோடிவரும்)

வலமுறைத்திரிபு : (ஏறுநிரல் முறை)

பன்னிருதான சுரங்கள்	ச	ரி^{1}	ரி^{2}	க^1	க^2	ம^1	ம^2	ப	த^1	த^2	நி^{1}	நி^{2}
செம்பாலை (அரிகாம்போதி)	ச		ரி^{2}		க^2	ம^1		ப		த^2	நி^{1}	
விளரிப்பாலை (தோடி)	க^1		ம^1		ப	த^1		நி^{1}		ச	ரி^{1}	

விளரிப்பாலை (தோடி) - ச ரி^{1} க^1 ம^1 ப த^1 நி^{1}

“நுழையர் விளரி நொடி தரும் தீம்பாலை
இளி கிளையிற் கொள்ள” - சிலப். 7.(48)

(நுழையர் - நெய்தல்நிலப் பரதவர்; விளரி – விளரிப்பாலை; நொடி – துன்பம்)

இங்கு ‘கிளையிற்கொள்ள’ என்பதால், ஐந்தாம் சுரமாக வரும், கிளை முறையில் இப்பண் வருவதை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

‘இளிகிளையிற்கொள்ள’ - இளி (பஞ்சமசுரம்) என்பது ‘ப’; ‘ப’ விலிருந்து கிளைமுறையில் (ஐந்தன் முறை) சுரம்தொடுத்தால், ப ச, ச ம^{1}, ம^{1} நி^{1}, நி^{1} க^{1}, க^{1} த^{1}, த^{1} ரி^{1} என சுரக்கோப்பு அமைந்து, இன்றைய தோடிப்பண் கிடைக்கின்றது.

விளரி, விளரிப்பாலை, காஞ்சி என்றெல்லாம் பழம்பெயர் பெற்றது இன்றைய தோடி.

‘பையுள்காஞ்சி’ என்பது 103 பண் வரிசையில், 102வது பண்.

(பையுள் = துன்பம், அவலம்)

இசைமணி எறிந்து காஞ்சிபாடி – புறம்.281:5

பண்காஞ்சி இசைபாடும் - பெரியபு . திருக்குறிப். 86/1168

காஞ்சி – ஒருமரம், ஒருபண் - பிங்க.3343

காஞ்சி, ஓர் பண்ணாம் - சூடா. 11:18

(பார்க்க. த.க.க.75/I)

இப்பண்ணின் சுரங்கள்யாவும் மென்சுரங்கள் (ரி^{1} க^{1} ம^{1} த^{1} நி^{1}). எனவே இப்பண் அவலச்சுவை (துன்பம்) தரும் பண். ஆகவே பையுள் காஞ்சி, என்றுபெயர்.

“நுளையர் விளரி நொடி தரும் தீம்பாலை” என்பார் இளங்கோவடிகள்.

(நொடி – துன்பம், அவலம்)

நெய்தல் நில உரிப்பொருள் - இரங்கல். எனவே இரங்கல் சுவை தரும் பண்ணான விளரிப்பாலை, நெய்தல் நிலத்திற்கு உரிமையான பெரும்பண் ஆகியுள்ளது.

இடமுறைத்திரிபிலும் விளரிகுரலாக விளரிப்பாலையே வருகின்றது.

"விளரிகுரலாக விளரிப்பாலை" – சிலப். 3 : 90 உரை

இடமுறைத்திரிபு :(இறங்கு நிரல் முறை)

பன்னிருதான சுரங்கள்	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}	ச்
அரும்பாலை (சங்கராபரணம்)		ரி^{2}		க^{2}	ம^{1}		ப		த^{2}		நி^{2}	ச்
விளரிப்பாலை (தோடி)		நி^{1}		ச	ரி^{1}		க^{1}		ம^{1}		ப	த^{1}

விளரிப்பாலை (தோடி) - ச ரி^{1} க^{1} ம^{1} ப த^{1} நி^{1}

இடமுறைத்திரிபில் (இறங்குநிரல் முறை – அவரோகணம்), தலைமைப் பாலையாவது அரும்பாலை (சங்கராபரணம்). எனவே அரும்பாலையின் குரல் (ச்) சுரத்தை, மென்விளரி (த^{1}) யாகக் கொண்டு பண் பெயர்க்க (கிரக பேதம்), கிடைப்பது விளரிப்பாலை என்ற தோடி. (இது வலமுறைத்திரிபில் அரும்பாலையின் கைக்கிளையை (க^{2}), குரலாகக் கொண்டு பண் பெயர்க்க விளரிப்பாலை கிடைப்பதை ஒத்தது)

(பார்க்க. தமிழிசைப் பேரகராதி பக். 159,460,461)

நாடகங்களில் முதலில் பாடப்படும் தோடயம் 'தோடி', ப் பண்ணில் பாடப்பட்ட மரபு நம்மிடம் உண்டு. (தொடு, தோடயம், தோடி)

மேற்செம்பாலை (கல்யாணி) வன்சுரங்களைக் கொண்டது. விளரிப்பாலை (தோடி) மென் சுரங்களைக் கொண்டது. இரண்டு பண்களின் சுரங்களுக்கும் இசை இடைவெளி உள்ளதால், பண் விரிவாக்கத்தில் இரண்டு பண்களும் சிறப்பு வாய்ந்தவை. மணிக்கணக்கில், நாட்கணக்கில் 'தோடி' (ஆலாபனை, பாடல்,

முதலியன) பாடும் மரபு கொண்டது தமிழிசை. தோடி பாடுவதில் வல்ல நாகசுரக் கலைஞரான இராசரத்தினம் பிள்ளை தோடி இராசரத்தினம் பிள்ளை என்றே அழைக்கப்படலானார்.

இது ஓர் அவலச் சுவைப்பண் என்பதால், இது மாலை நேரப் பண் ஆகிறது.

பண்பெயர்ப்பால் (கிரகபேதம்), ஏழ்பெரும்பாலைகளில் ஏனைய ஆறுபாலைகளையும் தருகின்றது. எனவே விளரிப்பாலை (தோடி) ஓர் அனைத்துச் சுரப்பெயர்ப்புப்பண் (சர்வசுர மூர்ச்சனைக்கார மேளம்)

இந்துஸ்தானியில் ‘பைரவிதாட்’

ஐரோப்பிய இசையில் ‘Phrygian’ (EMajor); நெய்தல் நிலமான, கானலில் வைத்து, கானல்வரியை மாதவி பாடும் பொழுது இப்பண்ணை இளங்கோவடிகள் அமைத்துக் காட்டியுள்ளார்.

இப்பண்ணில் அமைந்த இசை வடிவங்கள் :

1. தாயே யசோதா	- ஆதி	- ஊத்துக்காடு வேங்கடசுப்பய்யர்
2. நாலுமைந்து வாசல்	- ஆதி	- அருணகிரிநாதர்
3. கலிதீருமோ	- ஆதி	- பாபநாசம்சிவன்
4. கலைமகளே	- ஆறன்தாளம்	- பெரியசாமித்தூரன்
5. கமலாம் பிகா	- ஆறன்தாளம்	- முத்துசாமி தீட்சிதர்
6. எந்நேரமும் ஒருகாலை	- ஆதி	- மாரிமுத்தாப்பிள்ளை
7. சஞ்சரத தரசுதா	- ஆதி	- செயதேவர்
8. நினுவினா	- ஆறன்தாளம்	- தியாகராசர்
9. எல்லா அருமைகளும்	- ஆதி	- கனம் கிருஷ்ணய்யர்
10. ஆனந்த நடேசா	- ஆறன்தாளம்	- இராமசாமி சிவன்
11. கடைக்கண் நோக்கி	- ஆதி	- பாபநாசம்சிவன்
12. கார்த்திகேய	- ஆதி	- பாபநாசம்சிவன்
13. நின்னே நம்மி	- சாய்ப்பு	- சியாமா சாஸ்திரி
14. எந்துகுதயராதுரா	- ஏழன்சாய்ப்பு	- தியாகராசர்
15. கொலுவ மரகத	- ஆதி	- தியாகராசர்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

1. அகத். - (தொல்காப்பிய) அகத்திணை இயல்
2. அகம். - அகநானூறு
3. அடியார்க். - (சிலப்பதிகார) அடியார்க்கு நல்லார் உரை
4. அரும். - (சிலப்பதிகார) அரும்பத உரை
5. ஆனாய. - (பெரியபுராணம்) ஆனாய நாயனார் புராணம்
6. இளம். - (தொல்காப்பிய) இளம்பூரணர் உரை
7. ஐங்குறு. - ஐங்குறு நூறு
8. கம்ப. - கம்பராமாயணம்
9. கம்ப.சூர்ப்பண.சூழ்ச். - கம்பராமாயணம் சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்
10. கல்லா. - கல்லாடம்
11. கலிங். - கலிங்கத்துப்பரணி
12. கலித். - கலித்தொகை
13. குறள். - திருக்குறள்
14. குறிஞ். - குறிஞ்சிப்பாட்டு
15. சம்பந்த. - (திருஞான) சம்பந்தர்
16. சிலப்., சிலம்பு. - சிலப்பதிகாரம்
17. சிறுபாண். - சிறுபாணாற்றுப்படை
18. சூடா. - சூடாமணி நிகண்டு
19. த.க.க. - தமிழிசைக் கலைக் களஞ்சியம்
20. திருமங்கை. - திருமங்கை ஆழ்வார்
21. திருவிளை. - திருவிளையாடற்புராணம்
22. திவா. - திவாகரநிகண்டு

23. தேவா.	-	தேவாரம்
24. தொல்.	-	தொல்காப்பியம்
25. தொல்.எச்.	-	(தொல்காப்பிய) எச்சவியல்
26. நச்சர்.	-	நச்சினார்க்கினியர் உரை
27. நற்.	-	நற்றிணை
28. ப.இ.இ.	-	பழந்தமிழ் இலக்கியத்தில் இசையியல்
29. பக்.	-	பக்கம்
30. பஞ்ச.	-	பஞ்சமரபு
31. பதி.	-	பதிகம்
32. பதிற்.	-	பதிற்றுப்பத்து
33. பரிபா.	-	பரிபாடல்
34. பாசுரம்	-	ஆழ்வார் பாசுரம் (நாலாயிரத்திவ்யபிரபந்தம்)
35. பிங்க.	-	பிங்கல நிகண்டு
36. புறம்.	-	புறநானூறு
37. பெரியபு.தடுத்.	-	பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம்
38. பெரியபு.திருக்குறிப்.	-	பெரியபுராணம் - திருக்குறிப்புத் தொண்டர் புராணம்
39. பெருங்.	-	பெருங்கதை
40. பெரும்பாண்.	-	பெரும்பாணாற்றுப்படை
41. பொ.	-	(தொல்காப்பிய) பொருளதிகாரம்
42. பொருந.	-	பொருநராற்றுப்படை
43. மதுரைக்.	-	மதுரைக்காஞ்சி
44. மலைபடு.	-	மலைபடுகடாம்
45. மேற்.	-	மேற்கோள்
46. யுத்த.	-	(கம்பராமாயணம்) யுத்தகாண்டம்

அட்டவணை - 1

பண்பெயர்ப்பு முறையில் ஐந்திசைப் பண்கள்

வ. எண்	பண்	ச	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}	பண்ணின் சுரங்கள்
1.	முல்லைப்பாணி (மோகனம்)	ச		ரி^{2}		க^{2}			ப		த^{2}			ச ரி^{2} க^{2} பத^{2}
2.	குறிஞ்சிப்பாணி (மத்யமாவதி)	நி^{1}		ச		ரி^{2}			ம^{1}		ப			ச ரி^{2} ம^{1} ப நி^{1}
3.	நெய்தல்பாணி (இந்தோளம்)	த^{1}		நி^{1}		ச			க^{1}		ம^{1}			ச க^{1} ம^{1} த^{1} நி^{1}
4.	பாலைப்பாணி (சுத்தசாவேரி)	ம^{1}		ப		த^{2}			ச		ரி^{2}			ச ரி^{2} ம^{1} ப த^{2}
5.	மருதப்பாணி (சுத்ததன்யாசி)	க^{1}		ம^{1}		ப			நி^{1}		ச			ச க^{1} ம^{1} ப நி^{1}

அட்டவணை - 2

பண்பெயர்ப்பு முறையில் ஏழ்பெரும்பாலைகள்

வ. எண்	பண்	ச	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப	த^{1}	த^{2}	நி^{1}	நி^{2}	பண்ணின் சுரங்கள்
1.	செம்பாலை (அரிகாம்போதி)	ச		ரி^{2}		க^{2}	ம^{1}		ப		த^{2}	நி^{1}		சரி^{2} க^{2} ம^{1}ப த^{2} நி^{1}
2.	படுமலைப்பாலை (நடபயிரவி)	நி^{1}		ச		ரி^{2}	க^{1}		ம^{1}		ப	த^{1}		சரி^{2}க^{1} ம^{1}ப த^{1}நி^{1}
3.	செவ்வழிப்பாலை (ஈருழைப்பண்)	த^{1}		நி^{1}		ச	ரி^{1}		க^{1}		ம^{1}	ம^{2}		சரி^{1}க^{1} ம^{1} ம^{2}த^{1}நி^{1}
4.	அரும்பாலை (சங்கராபரணம்)	ப		த^{2}		நி^{2}	ச		ரி^{2}		க^{2}	ம^{1}		சரி^{2}க^{2} ம^{1} ப த^{2}நி^{2}
5.	கோடிப்பாலை (கரகரப்பரியை)	ம^{1}		ப		த^{2}	நி^{1}		ச		ரி^{2}	க^{1}		சரி^{2}க^{1}ம^{1} ப த^{2} நி^{1}
6.	விளரிப்பாலை (தோடி)	க^{1}		ம^{1}		ப	த^{1}		நி^{1}		ச	ரி^{1}		சரி^{1}க^{1} ம^{1} ப த^{1}நி^{1}
7.	மேற்செம்பாலை (கல்யாணி)	ரி^{2}		க^{2}		ம^{2}	ப		த^{2}		நி^{2}	ச		சரி^{2}க^{2} ம^{2} பத^{2}நி^{2}

அட்டவணை - 3.1
தமிழிசைப் பாலைகள்
மெல்லுழை (சுத்த மத்திமம்)

பாலை எண்	மேள எண்	பண் பெயர்	கோவை நிரல் (சுரவரிசை)							
1.	8	தோடி	ச	ரி^{1}	க^{1}	ம^{1}	ப	த^{1}	நி^{1}	ச்
2.	9	தேனுகா	ச	ரி^{1}	க^{1}	ம^{1}	ப	த^{1}	நி^{2}	ச்
3.	10	நாடகப்பிரியை	ச	ரி^{1}	க^{1}	ம^{1}	ப	த^{2}	நி^{1}	ச்
4.	11	கோகிலப்பிரியை	ச	ரி^{1}	க^{1}	ம^{1}	ப	த^{2}	நி^{2}	ச்
5.	14	வகுளாபரணம்	ச	ரி^{1}	க^{2}	ம^{1}	ப	த^{1}	நி^{1}	ச்
6.	15	மாயாமாளவ கௌளை	ச	ரி^{1}	க^{2}	ம^{1}	ப	த^{1}	நி^{2}	ச்
7.	16	சக்கரவாகம்	ச	ரி^{1}	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி^{1}	ச்
8.	17	சூரியகாந்தம்	ச	ரி^{1}	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி^{2}	ச்
9.	20	நடபயிரவி	ச	ரி^{2}	க^{1}	ம^{1}	ப	த^{1}	நி^{1}	ச்
10.	21	கீரவாணி	ச	ரி^{2}	க^{1}	ம^{1}	ப	த^{1}	நி^{2}	ச்
11.	22	கரகரப்பிரியை	ச	ரி^{2}	க^{1}	ம^{1}	ப	த^{2}	நி^{1}	ச்
12.	23	கௌரிமனோகரி	ச	ரி^{2}	க^{1}	ம^{1}	ப	த^{2}	நி^{2}	ச்
13.	26	சாருகேசி	ச	ரி^{2}	க^{2}	ம^{1}	ப	த^{1}	நி^{1}	ச்
14.	27	சரசாங்கி	ச	ரி^{2}	க^{2}	ம^{1}	ப	த^{1}	நி^{2}	ச்
15.	28	அரிகாம்போதி	ச	ரி^{2}	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி^{1}	ச்
16.	29	சங்கராபரணம்	ச	ரி^{2}	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி^{2}	ச்

அட்டவணை – 3.2
தமிழிசைப் பாலைகள்
வல்லுழை (பிரதி மத்திமம்)

பாலை எண்	மேள எண்	பண் பெயர்	கோவை நிரல் (சுரவரிசை)							
17.	44	பவப்பிரியை	ச	ரி^{1}	க^1	ம^2	ப	த^1	நி^{1}	ச்
18.	45	சுபபந்துவராளி	ச	ரி^{1}	க^1	ம^2	ப	த^1	நி^{2}	ச்
19.	46	சட்விதமார்க்கினி	ச	ரி^{1}	க^1	ம^2	ப	த^2	நி^{1}	ச்
20.	47	சொர்ணாங்கி	ச	ரி^{1}	க^1	ம^2	ப	த^2	நி^{2}	ச்
21.	50	நாம நாராயணி	ச	ரி^{1}	க^2	ம^2	ப	த^1	நி^{1}	ச்
22.	51	காம வர்த்தினி	ச	ரி^{1}	க^2	ம^2	ப	த^1	நி^{2}	ச்
23.	52	இராமப்பிரியை	ச	ரி^{1}	க^2	ம^2	ப	த^2	நி^{1}	ச்
24.	53	கமனா சிரமம்	ச	ரி^{1}	க^2	ம^2	ப	த^2	நி^{2}	ச்
25.	56	சண்முகப்பிரியை	ச	ரி^{2}	க^1	ம^2	ப	த^1	நி^{1}	ச்
26.	57	சிம்மேந்திரமத்திமம்	ச	ரி^{2}	க^1	ம^2	ப	த^1	நி^{2}	ச்
27.	58	ஏமவதி	ச	ரி^{2}	க^1	ம^2	ப	த^2	நி^{1}	ச்
28.	59	தர்மவதி	ச	ரி^{2}	க^1	ம^2	ப	த^2	நி^{2}	ச்
29.	62	ரிசபப்பிரியை	ச	ரி^{2}	க^2	ம^2	ப	த^1	நி^{1}	ச்
30.	63	லதாங்கி	ச	ரி^{2}	க^2	ம^2	ப	த^1	நி^{2}	ச்
31.	64	வாசஸ்பதி	ச	ரி^{2}	க^2	ம^2	ப	த^2	நி^{1}	ச்
32.	65	கல்யாணி	ச	ரி^{2}	க^2	ம^2	ப	த^2	நி^{2}	ச்

மற்றும் ஓர் இனிய செய்தி. 100பண்களுக்கான நூல் எழுதிய நா.மம்மது, 100 பண்களையும் இசைக்கச்செய்து ஒலிவடிவில் இசைக்குறுந்தகடாகக் கொண்டுவந்துள்ளார். யாழ், குழல், கின்னரம், நாகசுரம் எனக் கருவி இசையோடு அரங்கிசைப்பாடல், நாட்டார் பாடல், நாட்டியப்பாடல், நாடகப்பாடல் என பல்வேறு இசை வடிவங் களையும் நா.மம்மது இக்குறுந்தகட்டில் பதிவுசெய்துள்ளார். பெரு நாட்டு இசையிலும் செவ்விந்தியர் இசையிலும் நமது மருதப்பாணியும் (சுத்ததன்யாசி), சீன நாட்டில் நமது முல்லைப்பாணியும் (மோகனம்) இசைக்கப்படுவது பற்றியும் பதிவுசெய்திருப்பது சிறப்புக்குரியது.

இந்நூல் தமிழிசை ஆய்வில் ஈடுபடுவோருக்கும் இசை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் இசை ஆசிரியர்களுக்கும், பொது மக்களுக்கும் பயனுள்ள சிறந்த நூல் என்று போற்றி மகிழ்கிறேன்.

முனைவர் இ.அங்கயற்கண்ணி

கலைப் புலத் தலைவர் மற்றும் இசைத்துறை பேராசிரியர்,

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.